பக்கங்கள்: 12+IV= பதினாறு

# உதயன்

விலை ரூபா 7.00

ஏடு 18 வள்ளுவர் ஆண்டு 2034 மாசி 12 திங்கட்கிழமை (24-02-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:90

# குச்சவெளியில் கடற்படை - புலிகள்

# நேற்று மாறிமாறிச் சுற்றிவளைப்பு!

## மோதல் வெடிக்கவிருந்தவேளை கண்காணிப்புக்குழு தலையிட்டு சமரசம்

திருகோணமலை,பெப்ரவரி24

திருகோணமலையில் குச்சவெளியில் உள்ள காட்டுப் பிரதேசத்தில் நேற்றுப் பகல் கடற்படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே பெரும் மோதல் வெடிக்கும் பேராபத்து நிலை உருவாகியது.

இரு தரப்புக்களும் மாறிமாறி பெரும் சுற்றிவளைப்புக்களில் ஈடுபட்டதைய டுத்தே அங்கு எக்கணமும் மோதல் வெடிக்கும் ஆபத்து உருவாகியது.

இதனால், பெரும் பதற்றநிலை ஏற்பட்டது. பகல் முழுவதும் நீடித்த பதற்றநிலை மாலையில் கண்காணிப் புக்குழு தலையிட்டு சமரசம் செய்யும் வரை தொடர்ந்தது.

குச்சவெளியில் கடற்கரையோர மாக கடற்படை முகாம் அமைந்திருக் கிறது. முகாமை அண்டிய கடற்பிர தேசம் படைகளின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. அந்த இடத்துக்கு அப் பால் உள்ள காட்டுப்பிரதேசத்தை விடு தலைப் புலிகள் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கின்றனர். அங்கு அவர் களது சிறு முகாம்கள் பல உள்ளன.

நேற்று முற்பகல் கடற்கரையில் வந்து இறங்கியதாகக் கூறப்படும் - சுமார் 20 பேர் கொண்ட - கடற் படைக்குழு ஒன்று புலிகளின் கட்டுப் பாட்டில் உள்ள காட்டுப்பிரதேசத்தி னுள் நுழைந்து, அங்கு சுமார் 10 போராளிகள் தங்கியிருந்ததாகக் கூறப்படும் முகாம் ஒன்றைச் சுற்றி வளைத்துக் கொண்டது - என்று கூறப்படுகிறது.

ஆயுதங்களைக் கைவிட்டு சரண டையுமாறு கடற்படை புலிகளுக்குக் கட்டளையிட்டது. இதனால், அங்கு பெரும் பதற்றம் உருவாகியது. கடற் படையின் முற்றுகைக்குள் சிக்குண்ட போராளிகள் தற்காப்புத் தாக்குதலுக்

(12ஆம் பக்கம் பார்க்க)

# மேலும் நெருங்கிச் செயலாற்ற புலிகள் - கூட்டமைப்பு இணக்கம்

## கருத்துப்பரிமாறி முடிவுகளை எடுக்க தனியான குழு

கிளிநொச்சி,பெப்ரவரி24

தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச் சினைகள் தொடர்பான விடயங்களில மேலும் நெருங்கிச் செயற்படுவது என்று விடுதலைப் புலிகளும் தமிழ் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பி னர்களும் தீர்மானித்திருக்கின்றனர்.

அரசியல் மாற்றங்களுக்கு ஏற்ப வும் சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு இணைவாகவும் தீர்மானங்களை வகுத் துச்செயற்பட வசதியாக மாதம் ஒரு தடவை கூடி கருத்துப்பரிமாறல் களையும் ஆலோசனையையும் மேற் கொள்வதென்று இரு தரப்பினரும் முடிவு செய்திருக்கின்றனர்.

தமிழ் தேசியக்கூட்டமைப்பு நாடா ளுமன்ற உறுப்பினர்கள் நேற்று கிளி நொச்சியில் தமிழ் விடுதலைப் புலி களின் அரசியல்துறையினருடன் பேச்சு நடத்தினர்.

விடுதலைப் புலிகள் சார்பில் அரசி யல்துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் பேச்சுக்களுக்கு தலைமை வகித்தார். தமிழர் விடுதலைக்கூட்ட ணித்தலைவர் வீ.ஆனந்தசங்கரி வெளிநாடு சென்றிருப்பதால் அவர் இப்பேச்சுக்களில் கலந்து கொள்ள வில்லை. கூட்டமைப்பின் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனை வரும் பேச்சுக்களில் கலந்துகொண் டனர்.

புரிந்துணர்வு உடன்படிக்கை அமுலுக்கு வந்த கடந்த ஒரு வருட காலத்தில் உருவாகிய நிலைமைகள், உடன்படிக்கையின் பெறுபேறு, மக்க ளின் நாளாந்தப் பிரச்சினைகள், இயல்பு வாழ்க்கை உட்பட பல விடயங்கள் குறித்து புலிகளின் பிரதிநிதிகளும், கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் களும் நீண்ட நேரம் ஆராய்ந்தனர்.

உடனடியாகவும், நீண்டகால நோக் கிலும் செயற்படுத்தப் படவேண்டிய விடயங்கள் குறித்தும் அத்தகைய விடயங்களில் எவ்வாறு இருதரப்புக் களும் நெருங்கி செயலாற்றுவது என்பது பற்றியும் விரிவாகப்பேசப்பட் டது.

அரசியல் மாற்றங்கள் மற்றும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப உடனடியாகக கலந்துரையாடி - கருத்துக்களைப் பரிமாறி - தீர்மானங்களை எடுத்துச் செயற்பட வசதியாகக் கட்சி ரீதியாகப பிரதிநிதிகளை உள்ளடக்கிய குழு ஒன்றும் அமைக்கப்பட்டது.

தமிழர் விடுதலைக்கூட்டணி சார் பில் அதன் செயலாளர் நாயகம் இரா.சம்பந்தன் அல்லது நாடாளுமன்ற

(12ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்நகர மத்தியில் நேற்று பெருமளவு ஆயுதங்கள் மீட்பு!

## ஜனநாயகப் பேரவை அலுவலகத்தில் இருந்து

யாழ்ப்பாணம்,பெப்.24

யாழ்நகரின் மத்தியில் மூடியி ருந்த ஈழமக்கள் ஜனநாயகப் பேரவை யின் அலுவலகத்தை நேற்று முற்ப கல் பலவந்தமாக உடைத்துத் திறந்த இராணுவத்தினரும் பொலிஸாரும் அங் கிருந்து பெருமளவு ஆயுதங்களைக் கைப்பற்றினர்.

ரி-56 ரைபிள்கள் - 7, அதற்குரிய ரவைகள் - 740, மகஸீன்கள் - 7, கிரனேட் - 1, தொலைத் தொடர்புக் கருவி- 1, இலங்கைக் கடற்படைச் சீருடை - 1, இராணுவச் சீருடை - 2 ஆகியனவே கைப்பற்றப்பட்டுள்ளன.

ஈ.பி.டி.பியின் முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர்களும் சகோதரர்க ளுமான எஸ்.இராமேஸ்வரன், எஸ். இராமமூர்த்தி ஆகியோர் இரண்டு வரு டங்களுக்கு முன் ஈ.பி.டி.பியிலிருந்து பிரிந்து, ஈழ மக்கள் ஜனநாயகப் பேரவையை ஸ்தாபித்திருந்தனர்.

அதன் அலுவலகம் யாழ்நகரின் மத்தியில் - வேம்படி வீதியில் -

(12ஆம் பக்கம் பார்க்க)

## வெடிவிபத்தில் போராளி வீரச்சாவு!

கிளிநொச்சி,பெப்.24

முல்லைத்தீவு மாவட்டத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தவறு தலான வெடிவிபத்தில் கடற்புலி போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார் என்று புலிகள் அறிவித்திருக்கின்றனர்.

மேஜர் கதிரொளி (கிருஷ்ண பவான் சசிகுமார் (பாபு) - புக்கப்புலோ, மாதகல்) என்ற போராளியே வீரச்சா வடைந்தார்.

இவரது இறுதி வணக்க நிகழ்வு இன்று முற்பகல் 11.00 மணிக்கு மாதகல் செள். தோமஸ் கலவன் பாடசாலையில் இடம்பெறும்.(ஐ-5)

குடாநாட்டுக்கு வரும் வழியில் கிளிநொச்சியில்

# 8 மாவட்டங்களின் ஆயர்கள் இன்று தமிழ்ச்செல்வனை சந்திக்கின்றனர்

யாழ்ப்பாணம்,பெப்.24

கொழும்பு மறைமாவட்ட பேராயர் தலைமையில் எட்டு ஆயர்கள் இன்று திங்கட்கிழமை யாழ்ப்பாணம் வருகை தருகின்றனர்.

கொழும்பிலிருந்து தரைவழியாக வரும் இவர்கள், வழியில் கிளிநொச் சியில் விடுதலைப் புலிகளின் அரசி யல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச் செல்வனைச் சந்திப்பர் என்று தெரி விக்கப்படுகிறது.

கொழும்பு மறைமாவட்ட ஆயர் அதிவண.ஒஸ்வால்ட் கோமிஸ், துணை ஆயர் அதிவண. மேரியஸ் பீரிஸ், கண்டி ஆயர் அதிவண. வியன்னி பெர் னாண்டோ, பதுளை மறைமாவட்ட ஆயர் அதிவண.வின்ஸ்ரன் பெர் னாண்டோ, காலி மறைமாவட்ட ஆயர் அதிவண. எல்மோ பெரேரா, திருமலை - மட்டுநகர் மறைமாவட்ட ஆயர் அதிவண. கிங்ஸ்லி சுவாம்பிள்ளை, சிலாபம் மறை மாவட்ட ஆயர் அதி வண. பிராங் மாக்கஸ், குருநாகல் ஆயர் அதிவண. ரேமண்ட் பீரிஸ் ஆகி யோரே தமிழ்ச்செல்வனைச் சந்திக் கின்றனர்.

இன்று பிற்பகலில் யாழ்ப்பாணம் வந்தடையும் இவர்கள் நாளை நடை பெறவுள்ள சமய நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளவுள்ளனர்.

(ஐ-5)

நிலையான சமாதானம் வேண்டி

# நல்லை ஆதீனத்தில் இன்று சர்வமதப் பிரார்த்தனை

யாழ்ப்பாணம்,பெப்.24

நாட்டில் நிரந்த நிலையான சமா தானம் வலுப்பெற வேண்டி இன்று திங்கட் கிழமை பிற்பகல் 4 மணிக்கு நல்லை ஆதீனத்தில் சர்வமத பிரார்த் தனை இடம்பெற உள்ளது.

யாழ். மனித நேய அமைப்புக்க ளின் ஒன்றியம், நீதிக்கும் சமாதானத் துக்குமான அமைப்பு, சர்வமத ஒன்றி யம் ஆகியன இணைந்து இந்தப் பிரார்த்தனை நிகழ்வுக்கு ஏற்பாடு செய்துள்ளன.

தென்பகுதியிலிருந்து வரும் சர்வ மதத் தலைவர்கள் சுமார் 75 பேரும் குடாநாட்டைச் சேர்ந்த சர்வமதத்

(12ஆம் பக்கம் பார்க்க)

நல்லூர் ஆலய வீதியில் நேற்று

# சமாதான நீதிவான்கள் உண்ணாவிரதப் போர்

யாழ்ப்பாணம்,பெப்.24

அரசு - புலிகள் இடையிலான புரிந் துணர்வு உடன்படிக்கை உரிய முறை யில் அமுல்படுத்தப்பட்டு, தமிழ் மக்க ளின் இயல்பு வாழ்க்கை உறுதிப்ப டுத்தப்படவேண்டும் என்பதை வலியு றுத்தி நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிமுதல் நல்லைக்கந்தன் ஆலய வடக்கு வீதியில் அடையாள உண்ணாவிரதப்போராட்டம் நடத்தப்பட் டது.

யாழ்மாவட்ட சமாதான நீதிவான் கள் சங்கத்தினால் ஏற்பாடுசெய்யப் பட்டு சங்கத் தலைவர் க.நாகராசா தலைமையில் இடம்பெற்ற இப்போராட் டத்தில் யாழ்மாவட்டத்தைச் சேர்ந்த சமாதான நீதிவான்கள் மற்றும் பொது

(12ஆம் பக்கம் பார்க்க)

# மிலிந்த மொறகொடவுடன் தளபதிகள் வடக்கே விஜயம்

பொருளாதார மறுசீரமைப்பு அமைச சர் மிலிந்த மொறகொட தலைமை யில் முப்படைத் தளபதிகள் நேற்று வடபகுதிக்கு விஜயஞ்செய்தனர்.

அமைச்சர் மொறகொடவுடன் பாது காப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்றின் பெர்னாண்டோவும் வடக்கே விஜயம் செய்தார்.

இவர்கள் தீவுப்பகுதி, பலாலி, காங் கேசன்துறை ஆகிய இடங்களுக்கு விஜயஞ்செய்து படை உயரதிகாரி களுடன் பாதுகாப்பு நிலைமை பற்றி மாநாடுகளை நடத்தினர் என்று தெரி விக்கப்படுகிறது. அமைச்சரும் படைத் தளபதிகளும் நெடுந்தீவுக்கும் சென் றனர்.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# நல்லூரில் நேற்று....









புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீறும் படையினரின் செயற்பாடுகளைக் கண்டித்து யாழ்.மாவட்ட சமாதான நீதிவான்கள் சங்கம் நேற்று நல்லூர் ஆலய வீதியில் நடத்திய உண்ணாவிரதப் போராட்டத்தின்போது எடுக்கப்பட்ட படங்கள். உண்ணாவிரதத்தில் கலந்துகொண்டோரையும் சமாதான நீதிவான்கள் சங்கச் செயலாளர் டாக்டர் எஸ்.எஸ் அருளானந்தம், தலைவர் க.நாகராசா ஆகியோர் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம். *(படங்கள்: வசந்தன்)*

# அரச சேவைக்கு ஆள் சேர்ப்பதில் அநியாயம்! மனித உரிமை மீறல்!!

## போதனாசிரியர்கள் தெரிவுக்கு விண்ணப்பித்தவர்கள் சுட்டிக்காட்டு

காரைதீவு,பெப்.24

அரச சேவைக்கு ஆள்களைச் சேர்ப்பதில் அநியாயம் நடக்கிறது; மனித உரிமை மீறப்படுகிறது. வடகது - கிழக்கு விவசாய போதனாசிரியர்கள் தெரிவுக்கு விண்ணப்பித்தவர்கள் இப்படிச் சுட்டிக்காட்டுகிறார்கள். தமக்கு மிகப்பெரும் அநீதி நடந்துவிட்டது, நியாயம் வேண்டும் என்று அவர்கள் தங்கள் சங்கத்தின் மூலம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் கேட்டிருக்கிறார்கள்.

விவசாய போதனாசிரியர் தரம் II ஆவுக்கு வடக்கு - கிழக்கு பொதுச் சேவை ஆணைக்குழு கடந்த 26.10.2001 இல் அரசாங்க வர்த்தமானி மூலம் விண்ணப்பங்களைக் கோரியிருந்தது.

விவசாய டிப்ளோமா இரண்டு வருட பயிற்சியைப் பூர்த்தி செய்தவர்கள் போதனாசிரியர்களாகவும் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை சித்தி பெற்றவர்கள் பயிலுநர் விவசாய போதனாசிரியர்களாகவும் தெரிவாவர் என்று அரச வர்த்தமானி விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டு இருந்தது.

அதற்கமைய குண்டசாலை மற்றும் வவுனியா விவசாயக் கல்லூரிகளில் தமது சொந்தச் செலவில் படித்து இரண்டு வருட டிப்ளோமாவைப் பூர்த்தி செய்தவர்களும் ஜி.சீ.ஈ. உயர்தரத்தில் சித்தி அடைந்தவர்களும் விண்ணப்பித்தார்கள்.

பரீட்சை கடந்த வருடம் நடைபெற்றது. ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் 90 சதவீதம் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்களை அரச செலவில் இரண்டு வருட டிப்ளோமாப் பயிற்சிக்கு அனுப்பவும் ஏற்பாடு செய்யப்படுகிறது.

இது வழமைக்கு மாறான நடவடிக்கை; அநீதியானது; பாரபட்சமானது என்று அம்பாறை, மட்டக்களப்பு விவசாய டிப்ளோமா மாணவர் சங்கம் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனைப் பிராந்திய அலுவலகத்தில் இணைப்பாளர் இ.மனோகரனிடம் முறைப்பாடு செய்திருக்கிறது.

இதில் மனித உரிமை மீறல் இருப்பதை மனோகரன் ஏற்றுக்கொண்டு வட - கிழக்கு மாகாண பொது நிர்வாக உள்ளூராட்சி கூட்டுறவு அமைச்சு செயலாளரிடம் இம்மாதம் 20 ஆம் திகதிக்கு முன் விளக்கம் தருமாறு கடிதம் மூலம் கேட்டிருக்கிறார்.

அக்கடிதத்தின் விவரம் வருமாறு:-

எமது ஆணைக்குழுவில் 19பேர் செய்துகொண்ட முறைப்பாட்டின்படி 2 வருட டிப்ளோமா படித்தவர்களைப் புறக்கணித்துவிட்டு ஜி.சீ.ஈ. உயர்தரம் படித்தவர்களை தெரிவு செய்து 2 வருட டிப்ளோமா பயிற்சிக்கு அனுப்புவது சரியா?

சொந்தச் செலவில் பயிற்சி முடித்து வேலைக்காக அலையும் 19 பேர் இருக்க ஜி.சீ.ஈ. உயர்தரம் படித்தவர்களை தெரிவுசெய்து இதற்குப் பிறகு அரச செலவில் அனுப்பி 2 வருட டிப்ளோமா பயிற்சி கொடுப்பது சரியா?

நாட்டின் தற்போதைய அவசர தேவை விவசாயப் போதனாசிரியர்கள். ஆகவே, ஏற்கனவே படித்தவர்கள் இருக்க, புதிதாகத் தெரிவுசெய்து அவர்களை 2 வருட டிப்ளோமா பயிற்சிக்கு அனுப்பி 2 வருடத்தின் பின் அவர்களின் சேவையை எதிர்பார்ப்பது தற்போதைய அவசர தேவையை நிறைவேற்றுமா?

பல ஆண்டு காலமாக விவசாய டிப்ளோமா படித்தவர்களையே இப்பதவிக்குத் தெரிவுசெய்வது வழக்கம். இம்முறையை மாற்றிய காரணம் என்ன?

இத்துடன் முறைப்பாட்டுப் பிரதியை அனுப்புகிறேன். அதற்கான காரணங்கள் என்ன? - என்றுள்ளது.

20 ஆம் திகதி முடிந்தும் தாம் கோரிய விளக்கம் இன்றும் தமக்குக் கிடைக்கவில்லை என்று மனோகரன் மேலும் தெரிவித்தார். (ஒ)

## வைத்தீஸ்வரன் ஆலய வருடாந்த திருவிழா

யாழ்ப்பாணம்,பெப்.24

யாழ். வண்ணை வைத்தீஸ்வரன் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 28ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.45 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து திருவிழாக்கள் நடைபெற்று அடுத்தமாதம் 17 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு பஞ்சரதங்கள் பவனியும், மறுநாள் செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு தீர்த்தமும் இடம்பெறும்.

மாலைத் திருவிழாக்கள் இரவு 8மணிக்குள் நிறைவடையுமென ஆலய தர்மகர்த்தா அறிவித்துள்ளார். (ஒ)

### அமைச்சர் நூர்தீன் மசூர் அறிவிப்பு:

# முஸ்லிம் எம்.பிக்களின் சந்திப்பு தனித்தரப்பு விவகாரம் பற்றியதே!

## அவர்களை ஒற்றுமைப்படுத்துவது பற்றியதல்ல

கொழும்பு,பெப்.24

முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களின் சந்திப்பு ஒன்று அண்மையில் இடம்பெற்றது. அது சமாதானப் பேச்சுக்களில் முஸ்லிம்களின் நலனைப் பேணும் வகையிலும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையிலும் சம அந்தஸ்தோடு தனித்தரப்பாகக் கலந்துகொள்வது பற்றியதாகவுமே அமைந்தது. முஸ்லிம்களின் உட்பூசல் பற்றியதாகவோ அல்லது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரிவினரை ஒற்றுமைப்படுத்துவது பற்றியதாகவோ அமையவில்லை.

- இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் வன்னி புனர்வாழ்வு அமைச்சர் நூர்தீன் மசூர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உட்பூசல், அதன் பிரிவினரை ஒற்றுமைப்படுத்துவது போன்ற விடயங்கள் குறித்துப் பேசுவது காலத்தின் தேவையை உணர்ந்து நிலைமைகள் சீராகும் போது ஏற்படுவதற்கு சந்தர்ப்பங்கள் இல்லாமலும் இல்லை. எனவே, கடந்த சில தினங்களாக வடக்கு - கிழக்கு முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் நடந்த பேச்சுக்கள் சமாதானப் பேச்சுக்களில் முஸ்லிம்கள் சம பங்காளர்களாகக் கலந்துகொள்ளும் தனித்தரப்பு பற்றிய விடயமாக இருந்ததே தவிர, வேறு எதுவும் அதில் பேசப்படவில்லை என்பதை வடக்கு - கிழக்கு முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவின் தலைவர் என்ற வகையில் மீண்டும் ஒருமுறை தெளிவுபடுத்தி வைக்கின்றேன் - இப்படி அவர் மேலும் தெரிவித்திருக்கின்றார். (ஐ)

# ஆசிரிய நியமனக் கடிதங்களை பெறும் திகதி பெப்.28 வரை நீடிப்பு

திருகோணமலை,பெப்.24

இந்த வருட முற்பகுதியில் இரண்டாம் கட்டமாக வழங்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களுக்கான நியமனக் கடிதங்களை இதுவரை பெற்றுக்கொள்ளாதவர்களை எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளுமாறு வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

இந்தப்பட்டதாரி ஆசிரியர் நியமனங்களுக்கான நியமனக்கடிதங்களை கடந்த ஜனவரி 31 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளுமாறு கல்வி அமைச்சு ஏற்கனவே அறிவித்திருந்தது.

ஆனால், பலர் இன்று வரை தமக்குரிய நியமனக் கடிதங்களை பெற்றுக்கொள்ளாத காரணத்தினால் அதற்கான இறுதித் திகதி எதிர்வரும் 28 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது. இத்திகதிக்கு முன்னரோ அல்லது திகதி அன்றோ தமது நியமனக் கடிதங்களைப் பெற்று கடமைகளை பொறுப்பேற்காதவர்களது நியமனங்கள் ரத்து செய்யப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நகர்ப்புறப் பாடசாலைகளுக்கு நியமிக்கக்கோரி விண்ணப்பித்த பலர் இதுவரை தமது கடமைகளைப் பொறுப்பேற்காமல் பின்னடிக்கின்றனர் என்று தெரிய வருகின்றது.

(ஓ-5-290)

## யாழ்.நீதிமன்ற வளாகம்: மூன்று மாதங்களில் அடிக்கல்

கண்டி, பெப்.24

"இன்னும் மூன்று மாதங்களில் யாழ்நகரில் நீதிமன்ற வளாகத்திற்கான அடிக்கல் நடப்படும்" என்று பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா கூறினார்.

கண்டி வில்லியம் கொபல்லாவ மாவத்தையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வரும் நீதிமன்ற வளாகத்தில் சட்டத்தரணிகளின் பாவனைக்கான கட்டடத் தொகுதிக்கு அடிக்கல் நட்டு உரையாற்றும் பொழுதே பிரதம நீதியரசர் மேற்கண்டவாறு கூறினார்.

கண்டி சட்டத்தரணிகள் சங்கத்தின் அழைப்பின் பேரில் நீதி அமைச்சர் டபிள்யூ. ஜே.எம்.லொக்குபண்டாரா, பெருந்தோட்டங்கள் அபிவிருத்தி அமைச்சர் லக்ஷ்மன் கிரிஎல்ல ஆகியோரும் இந்த வைபவத்தில் கலந்து கொண்டனர். (ஒ)

# சீனன்குடாவில் பல ஆயுதங்கள் பொலீஸாரினால் கண்டுபிடிப்பு!

கொழும்பு,பெப்.24

திருகோணமலை, சீனன்குடா துறைமுகப் பொலீஸ்காவலரணுக்கு அருகேயுள்ள ஓர் ஆலயத்தின் பின்புறத்திலிருந்து பல ஆயுதங்கள் பொலீஸாரினால் கண்டெடுக்கப்பட்டன எனத் தெரிவிக்கப்படுகிறது. மோட்டார் குண்டுகள், ரவைகள், கைக்குண்டுகள் ஆகியவை இவற்றில் அடங்குகின்றன.

பொலீஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவல் ஒன்றை அடுத்து நேற்றுமுன்தினம் இரவு 9 மணியளவில் இந்த ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டிருக்கின்றன.

எஸ்.ஜீ-8 ரக மோட்டார் குண்டுகள் 3, மில்லி மீற்றர் 40 ரக குண்டு ஒன்று, கே.ஆர்.சி. ரக குண்டு ஒன்று, எஸ்.எஸ்.ஜீ-82 ரக குண்டுகள் மூன்று, ரி-56, எஸ் 84 ரக மகஸின்கள் மூன்று, வேறு ரக ரவைகள் ஆகியவை இவற்றில் அடங்கும் என்று சீனன்குடா பொலீஸார் தெரிவித்திருக்கின்றனர். இந்த ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டது தொடர்பாக எவரும் கைது செய்யப்படவில்லை. பொலீஸார் விசாரணைகளை நடத்திவருகின்றனர்.

# இலங்கை கடற்படை அதிகாரிகள் இந்தியாவுக்குச் சென்று பேச்சு

கொழும்பு,பெப்.24

இலங்கை கடற்படையின் உயர் அதிகாரிகள் குழு ஒன்று இந்தியாவுக்கு விஜயம் செய்து இந்திய கடற்படை அதிகாரிகளுடன் பேச்சு நடத்தி வருகின்றது. இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையிலான கடற்படைகளின் தொடர்புகளைப் பலப்படுத்துவது பற்றியும் கூட்டாக கடற்படைப் பயிற்சிகளை நடத்துவது பற்றியும் இலங்கை அதிகாரிகள் இந்தியாவிலே பேச்சு நடத்துகின்றனர்.

இந்திய மீன்பிடி இழுவைப் படகுகள் இலங்கை கடல் எல்லையை அத்துமீறுவது குறித்தும் இலங்கை கடற்படை அதிகாரிகள் இந்திய கடற்படை அதிகாரிகளுடன் பேச்சு நடத்துவர்.

கடற்படையின் நடவடிக்கைப் பணிப்பாளரான ரியர் அட்மிரல் சரத் வீரசேகரவும் இந்த விஜயத்தில் இணைந்துகொண்டிருக்கிறார். (ஒ)

# உண்ணாவிரதிகளின் சுலோகங்கள்!

யாழ்ப்பாணம்,பெப்.24

யாழ்.மாவட்ட சமாதான நீதிவான்கள் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டு, நல்லூர் ஆலய வடக்கு வீதியில் நேற்று இடம்பெற்ற அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தின் போது உண்ணாவிரதிகளிடம் காணப்பட்ட சுலோகங்கள் வருமாறு:-

★ அரச படையே புலிகளைத் தீண்டி போரை மூட்டாதே!

★ ஓடி, ஓடி பேச்சுவார்த்தை உலகமெல்லாம் ஒரே பேச்சு! உருப்படியாய் ஒன்றுமில்லை!!

★ ஒப்பந்தம் வந்தும் எமக்கு இயல்பு வாழ்க்கை வரவில்லையே!

★ சமாதானப் பேச்சுவார்த்தை, யுத்தநிறுத்தம், ஒருவருட பூர்த்தி எதைத்தந்தது எமக்கு?

★ சமாதானத்தின் விரும்பிகள் யார் என்பதை சர்வதேசமே உணர்ந்து கொள்!

★ மத்தியஸ்தர்களே! மனிதமும் மனித உரிமைகளும் இன்னும் புதைகுழியாவது ஏன்? (ஜ-9-86)

ரூ. 16910 முதல்
தொலைக்காட்சிப் பெட்டிகள்
சிங்கர்
புதிய பார்வை
இல.1, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே.: 021-2225408

ASIAN
COMPUTER EDUCATION
தரமான கணனிப் பாடநெறிகள்
2G,ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்

எக்ஸ்போ ஏவியேஷனில் கொழும்புக்கு பயணியுங்கள்
இலவச போக்குவரத்து வசதி
யாழ்ப்பாணம் - பலாலி - யாழ்ப்பாணம்
கொட்டாஞ்சேனை - ரத்மலானை - கொட்டாஞ்சேனை
எக்ஸ்போ ஏவியேஷன் (பிரைவட்) லிமிட்டட்
1B, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பேசி: 021-2223891, 071-349999
296,A/1, காலி வீதி, கொழும்பு 6
தொ.பேசி: 01-360290,360291,074-512666

# விரைவாக சதம் குவித்து கனேடிய வீரர் சாதனை!

சென்சூரியன்,பெப்.24

கிரிக்கெட் உலகக்கிண்ண வரலாற்றில் குறைந்த பந்துகளில் சதம் அடித்த சாதனையை கனேடிய ஆரம்ப துடுப்பாளர் ஜோன் டேவிஸன் (வயது 32) நிகழ்த்தியுள்ளார். மேற்கிந்திய அணிக்கு எதிராக சென்சூரியனில் நடந்த ஆட்டத்தில் அவர் இந்த சாதனையை நிகழ்த்தினார். அதன் மூலம் கனடா அணி 202 ஓட்டங்கள் என்ற கௌரவமான இலக்கு ஒன்றை அடைவதற்கும் அவர் வழி வகுத்தார்.

நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்திய அணித் தலைவர் ஹூப்பர், கனடா அணியை துடுப்பெடுத்தாட அழைத்தார். களம் இறங்கிய டேவிஸன் 67 பந்துகளில் 100 ஓட்டங்களை விளாசினார். அவற்றில் 6 சிக்ஸர்களும் 8 பவுண்டரிகளும் அடங்கும். இதுவே உலகக் கிண்ண வரலாற்றில் மிகவிரைவாக பெறப்பட்ட சதமாகும்.

ஒரு நாள் கிரிக்கெட் வரலாற்றில் எந்தவோர் சமயத்திலும் பெறப்பட்ட விரைவான சதங்களில் இது ஐந்தாவது இடத்தைப் (10ஆம் பக்கம் பார்க்க)



சாதனை நிகழ்த்திய டேவிஸனின் அதரடிகளில் ஒன்று.



டேவிஸனின் பிடியை பின்னோக்கிச் சென்று அற்புதமாக ஏந்தும் டிராகஸ்.

## மே.இந்திய அணி 7 விக்கெட்டுக்களால் வெற்றி!

செஞ்சூரியன்,பெப்.24

கிரிக்கெட் உலகக் கிண்ணப் போட்டியில் 'பி' பிரிவில் இடம்பெற்ற கனடாவுக்கு எதிரான ஆட்டத்தில் மேற்கிந்திய தீவுகள் அணி 7 விக்கெட்டுக்களால் பெருவெற்றியீட்டியது.

நாணயச் சுழற்சியில் வென்ற மேற்கிந்திய தீவுகள் அணி, கனடாவை முதலில் துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது. களமிறங்கிய கனடா, மேற்கிந்தியத் தீவுகளுக்கு நெருக்கடியை ஏற்படுத்தக்கூடிய வகையில் ஆரம்பத்தில் துடுப்பெடுத்தாடியது. எனினும் அணியின் பின்வரிசை ஆட்டக்காரர்கள் எவரும் நிதானமாக துடுப்பெடுத்தாடாமையால் 42.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 202 ஓட்டங்களை மட்டுமே பெற்றது கனடா.

மேற்கிந்திய ஆரம்பப் பந்துவீச்சாளர்களில் ஒருவரான ட்ரக்ஸ் ஒரு 'மெய்டின்' உட்பட 9.5 ஓவர்கள் பந்து வீசி 44 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். கிண்ட்ஸ் 4 ஓவர்களில் 19 ஓட்டங்களுக்கு 2 விக் (10ஆம் பக்கம் பார்க்க)

SHARP Action of the day



நேற்று 152 ஓட்டங்களை குவித்த சச்சினின் 'அவுட்'

பிரவுன்ஸ் எலக்ரோனிக்ஸ்
BROWNS ELECTORINICS
Browns

# தொடர்ந்து 12 வெற்றிகள்: சாதனை விளிம்பில் ஆஸி.

ஒருநாள் ஆட்டங்களில் தொடர்ந்து 12 வெற்றிகளைப் பெற்று சாதனை படைக்கும் நிலையில் உள்ளது ஆஸ்திரேலிய அணி. ஜனவரி 11 ஆம் திகதி றோபார்ட்டில் இங்கிலாந்தை வென்றதில் இருந்து இந்த உலகக் கிண்ணத்தின் 3 ஆட்டங்களையும் சேர்த்து தொடர்ந்து 9 வெற்றிகளை ஆஸ்திரேலியா பெற்றுள்ளது.

இன்று ஸிம்பாப்வேயுடனும் (புலவாயோ), 27 இல் நமீபியாவுடனும் (போட்செப்ஸ் டரூம்) மார்ச் 2 இல் இங்கிலாந்துடனும் (போர்ட் எலிசெபெத்) ஆஸ்திரேலியா விளையாடுகிறது.

1984 ஜூன் முதல் 1985 பெப்ரவரி வரையிலான காலகட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் தொடர்ந்து 11 ஆட்டங்களில் வென்றதே இது வரை சாதனையாக உள்ளது.

(10ஆம் பக்கம் பார்க்க)

## வேகப்பந்துவீச்சில் அக்தார் சாதனை!

கேப்டவுன்,பெப்.24

பாகிஸ்தான் வீரர் சொஹைப் அக்தார் கிரிக்கெட் வரலாற்றில் அதிவேகமாகப் பந்து வீசி உலக சாதனை படைத்துள்ளார்.



நேற்றுமுன்தினம் இங்கிலாந்துக்கு எதிராக கேப்டவுனில் நடந்த ஆட்டத்தில் சொஹைப் அக்தர் தனது 2 ஆவது ஓவரில் மணிக்கு 100.23 மைல் வேகத்தில் (161.3 கிலோமீற்றர்) பந்து வீசினார். இது சர்வதேச டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டியில அதிவேக பந்துவீச்சு சாதனையாகும்.

இதற்கு முன் 27.04.2002 இல் நியூஸிலாந்துக்கு எதிராக லாகூரில் நடந்த டெஸ்ட் போட்டியில் அக்தர் 161 கிலோமீற்றர் வேகத்தில் பந்து வீசினார்.

(10ஆம் பக்கம் பார்க்க)




## ஆஸி. அணி தனி விமானத்தில் ஸிம்பாப்வே பயணம்



ஆஸி. அணியை வரவேற்கும் ஸிம்பாப்வே பழங்குடி மக்கள்.

புலவாயோ,பெப்.24

மற்றொரு போட்டியில் ஆஸ்திரேலிய - ஸிம்பாப்வே அணிகளுக்கிடையிலான உலகக் கிண்ணப் போட்டி இன்று ஸிம்பாப்வேயின் புலவாயோ நகரில் நடைபெறவுள்ளது.

இப் போட்டிக்காக ஆஸ்திரேலிய அணி நேற்று பிரத்தியேகமாக வாடகைக்கு அமர்த்தப்பட்ட தனி விமானத்தில் ஸிம்பாப்வேக்கு சென்று சேர்ந்தது.

பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாக இப்போட்டியில் ஆஸ்திரேலிய அணி பங்குபற்றுவது முன்னர் சந்தேகத்திற்கிடமாகவிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஏற்கனவே திட்டமிடப்பட்டதை விட 48 மணித்தியாலங்கள் தாமதமாகவே ஆஸ்திரேலிய அணி ஸிம்பாப்வே விஜயத்தை மேற்கொண்டது.

போட்டிக்கு 24 மணித்தியாலத்திற்குமுன் விமானப் பயணம் செய்வது நல்லதல்ல. எனினும், ஏற்கனவே ஆஸ்திரேலியாவில் ஒருநாள் போட்டிகளின்போது இவ்வாறு பயணம் செய்ய நேர்ந்துள்ளது. - இவ்வாறு ஆஸ்திரேலிய அணித்தலைவர் ரிக்கி பொன்ரிங் கூறினார். (ம-5)

## மீண்டும் அணிக்குள் வருவேன்

புலொம்போர்டின்,பெப்.24

"நான் மீண்டும் அணியில் இடம் பெறுவேன் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது."



- இவ்வாறு தெரிவித்துள்ளார் தென்னாபிரிக்காவின் வெள்ளை மின்னல் என்று வர்ணிக்கப்படும் வேகப் (10ஆம் பக்கம் பார்க்க)

# இது அன்டர்சனின் ஆட்டம்

பரபரப்பானவையாக இருக்கும் என எதிர்பார்க்கப்படும் ஆட்டங்கள் சோடை போவதும், எதிர்பாராத ஆட்டங்கள் மகிழ்ச்சியைத் தருவதும் கிரிக்கெட்டில் ஒன்றும் புதிதில்லை. அவ்வாறே பரபரப்பாக எதிர்பார்க்கப்பட்ட இங்கிலாந்து - பாகிஸ்தான் ஆட்டமும் எந்தப் பரபரப்பையும் தராமல் முடிந்தது. அன்டர்ஸன் (வயது 20)



அக்தரின் விளாசல்

எனும் அற்புதமான மாயப் பந்து வீச்சாளரின் முன் பாகிஸ்தான் துடுப்பாளர்கள் மண்டியிட்டனர்.



இளம் புயல் அன்டர்ஸன்

1999 உலகக் கிண்ணப் போட்டியின் இறுதியாட்டத்திலும் இப்படியே நடந்தது. ஆஸ்திரேலியாவுக்கு பாகிஸ்தான் பெரும் சவாலாகும் என்று கூறப்பட்டது. ஆனால், அதெல்லாம் பொய் என்பதுபோல் ஆடிவிட்டுப் போனார்கள் பாகிஸ்தானியர்கள். இலகுவில் வென்றது ஆஸ்திரேலியா. இப்போது மறுபடியும் பாகிஸ்தானியர்கள் அதனையே செய்துள்ளார்கள்.

இந்த ஆட்டம் சனிக்கிழமை கேபடவுனில் உள்ள நியூலான்ட் மைதானத்தில் நடந்தது. அதிர்ஷ்டம் இங்கி (10ஆம் பக்கம் பார்க்க)

என்றென்றும் தரம்
அது நிரந்தரம்
10 YEARS WARRANTY Japanese Technology
உங்களின் மனதில் என்றுமே முதல்வன்!
Lumala
Bicycles Supreme

MICRO PC SYSTEMS
◆ கணனி விற்பனை ◆ பழுதுபார்த்தல் ◆ பராமரிப்பு
intel IBM hp Mercury PROLINK
175/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பெ. 077-7308417
MPAQ COMPUTERS

SHARP
உத்தரவாதத்துடன் கூடிய விற்பனைக்குப் பிந்திய சிறந்த சேவை
89, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 021-2225150
Browns ELECTRONICS

# ஈர விழிகளுடன் ஈராண்டு இதய அஞ்சலி

| மண் மகிழ | | கண் நெகிழ |
|---|---|---|
| 12 |  | 15 |
| - | | - |
| 09 | | 02 |
| - | | - |
| 1949 | | 2001 |

## பொன்னம்பலம் நாகராசா

(முன்னாள் பொறியியலாளர், மகாவலி அபிவிருத்திச் சபை)

(திதி: அட்டமி 24.02.2003)

*பொன் பதித்த பூவுடலம் மறைந்து போச்சோ?*
*புகழுருவே என் மகிழ்வும் கனவாய் ஆச்சோ?*
*அன்புடனே எனக்கென நீர் - உமக்கு நானாய்*
*அகங் கலந்து வாழ்ந்தோமே தனியன் ஆனேன்!*
*என்னினிய உயிர் கலந்த உறவே அத்தான்!*
*எழிலிழந்து நான் வாட நீங்கள் மட்டும்*
*மின்னலெனப் போய் விட்டீர் மேன்மைகுன்றி*
*மிதக்கின்றேன் துயர்க் கடலில் ஏழை நானே.*

*"திருப்பதி"*
*சிவன் கோவிலடி, சாவகச்சேரி.*

வேதனையில் துடிக்கும்:
அன்பு மனைவி ஞானி

(14829)

## பருத்தித்துறையில் நடமாடும் காப்புறுதி சேவை

ஜனசக்தி காப்புறுதி நிறுவனம் இன்று காலை 9 மணி முதல் மாலை 3 மணிவரை நடமாடும் காப்புறுதி சேவையை பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் நடத்தவிருக்கின்றது.

அனைத்து வாகன உரிமையாளர்களும் மோட்டார் வாகன காப்புறுதிப் பத்திரத்தை இந்தச் சேவையில் பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. (ம-3)


## இயக்கச்சியில் முன்பள்ளி திறப்பு

தென்மராட்சி,பெப்.24

பச்சிலைப்பள்ளி அபிவிருத்தி புனர்வாழ்வுக் கழகத்தால் அமைக்கப்பட்ட இயக்கச்சி ஊரணிப்பற்று ஆதவன் முன்பள்ளி இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு மாவட்டப் பணிப்பாளர் இ.ஜெகாஸ் அவர்களால் திறந்து வைக்கப்படவுள்ளது.

பச்சிலைப்பள்ளி அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவன இணைப்பாளர் தடீலேந்திரன், முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலைய இணைப்பாளர் போ. நிலா, தமிழர் புனர்வாழ்வுக் கழக நடுவகத் திட்டப் பணிப்பாளர் யோ.திலகர், பச்சிலைப்பள்ளி, பூநகரி, முழங்காவில் பிரதேச உதவிப் பணிப்பாளர் அ.கேசவன், முன்பள்ளி கல்வி மேமபாட்டு நிலைய பச்சிலைப்பள்ளி மேற்பார்வையாளர் சியசோதினி ஆகியோர் இந்நிகழ்வில் விருந்தினர்களாகக் கலந்து கொள்வர். (ம-117)

# 16ஆவது வருட நினைவலைகள்

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 30 |  | 22 |
| - | | - |
| 12 | | 02 |
| - | | - |
| 1963 | | 1987 |

## அமரர் கிருஷ்ணபிள்ளை கலைச்செல்வன்

*கலைக் கோயிலின் ஒளிச்சுடரே!*
*என்றும் உனது ஞாபகம் நிலையாக*
*எம் உள்ளத்தில் சுடர் விட்டுக்கொண்டிருக்கும்!*

*23, காரைக்காட்டு லேன்,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.* (14847)

வேலுப்பிள்ளை
குடும்பத்தினர்.

# ஆறாம் ஆண்டு நீங்காத நினைவலைகள்

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 1935 |  | 1997 |
| - | | - |
| 02 | | 02 |
| - | | - |
| 18 | | 24 |

## அமரர் மரியான் மரிசிலின்

*(பண்டாரவன்னியன் வீதி, கனகராயன் குளம்)*

பாசமுடன் எம்மை அரவணைத்து
பரிவு காட்டிய எம் தந்தையே!
இல்லறத்தில் நல்லறமாய் வாழ்ந்து
இன்பமுடன் எம்மை எல்லாம் வாழ வைத்த தெய்வமே!
ஆறாண்டு கடந்தாலும் உங்கள் நினைவோடு வாழும்.

(14833)

தகவல்: ம.குணா (மகன் - பிரான்ஸ்)

அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும்

## அந்தியேட்டி, வீட்டுக்கிருத்திய அழைப்பும்

| *மலர்வு* | | *உதிர்வு* |
|---|---|---|
| *24* |  | *26* |
| *07* | | *01* |
| *1933* | | *2003* |

## திருமதி தங்கம்மா அருணாசலம்

எமது இல்லச் சுடராய் ஒளிவீசி 2003.01.26இல் இறைபதம் எய்திய எமது குடும்பத் தலைவி திருமதி தங்கம்மா அருணாசலம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (25.02.2003) செவ்வாய்க்கிழமை மு.ப. 7.00 மணிக்கு புலோலி மேற்கு, தெணியம்மன் ஆலய முன்புற மடத்தில் நடைபெற்று, அதனைத் தொடர்ந்து வீட்டுக் கிருத்தியம் எமது இல்லத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்வுகளில் கலந்து அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்குமாறும் மதியபோசன நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறும் உற்றார், உறவினர், நண்பர்கள், அன்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*போடிங் வீதி,*
*நாவலடி,*
*புலோலி மத்தி,*
*பருத்தித்துறை.* (14768)


திரு. திருமதி மு.தர்மலிங்கம்,
திரு. திருமதி அ.சந்திரவதனன்,
திரு. திருமதி அ.உமாசங்கர்,
திரு. திருமதி ச.சதீஸ்வரன்.



# புதிய வடிவில் CIMA

உலகில் இளைஞர் யுவதிகள் பல்வேறு தொழில்சார் சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. அதேவேளை தமது தொழில்சார் கல்வித் தகைமைகளை உயர்த்திக் கொள்வதும் அத்தியவசியமாகின்றது. இதற்காகவே CIMA தனது நிபுணத்துவத் தரக் கட்டமைப்பொன்றை உங்களுக்கென உருவாக்கியுள்ளது.

இப் புதிய முறையினால் மாணவர்களின் வளர்ச்சிக்கு ஏற்ப இரு புதிய விருதுகள் வழங்கப்படுவதுடன், உறுப்பினர்களாகவும் இணைத்துக் கொள்ளப்படுகின்றனர். இதனால் நிதிசார் உத்தியோகஸ்தர்கள் படிப்படியாக தமது தகைமைகளை உயர்த்திக்கொள்ள முடிவதுடன், ஒவ்வொரு நிலைக்கும் ஏற்ப அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளவும் முடியும்.

இச் செயற்பாடு மாணவர் மற்றும் தொழில்கொள்வோருக்கு ஒருங்கிணைந்த நன்மையை வழங்குகின்றது. இதனால் மாணவர்கள் தொழில் கொள்வோரிடையே இலகுவில் அங்கீகாரத்தைப் பெற முடிவதுடன் தொழில் கொள்வோரும் மாணவர்களுக்கு நியாயமான வேதனத்துடன் தொழில் பயிற்சியை வழங்கி, அவர்கள் உறுப்பினர் உரிமையைப் பெற வழி செய்யலாம்.





**Final Level**

- Management Accounting Business Strategy
- Management Accounting Financial Strategy
- Management Accounting Information Strategy
- Management Accounting Case Study

**Passed Finalist Certificate**

**Chartered Management Accountant**
(Upon completion of 3 years relevant practical experience)



**Intermediate Level**

- Finance
- Business Taxation
- Financial Accounting
- Financial Reporting
- Management Accounting Performance Managing
- Management Accounting Decision Making
- Systems and Project Management
- Organisational Management

**The CIMA Advanced Diploma in Management Accounting**

**Foundation Level**

- Financial Accounting Fundamentals
- Management Accounting Fundamentals
- Economics for Business
- Business Law
- Business Mathematics

**The CIMA Certificate in Business Accounting**

CIMA...*is different*

CIMA இலங்கை பிரிவு - மாணவர் சேவை - தொலைபேசி எண்: 501555 ஈ-மெயில்: student.srilanka@cimaglobal.com, வெப்தளம்: www.cimaglobal.com
யாழ் தகவல் பிரிவு - கீழ்வாரிப் பட்டப்படிப்புத் திணைக்களம், 494 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி எண்: 070-212531

LEO BURNETT

உதயன்

# பிரதமர் எழுப்பும் கேள்வி

தற்போதைய சமாதானப் பேச்சுகள் ஒரு தேக்க நிலையில் முடங்கிக் கிடக்கின்றன.

பேச்சுகளின் ஆரம்பக் கட்டம் விறுவிறுப்பாக இருந்தது. அடுத்தடுத்து திருப்பங்களுடன் கூடிய புதிய புதிய முடிவுகள் திடீர் திடீரென அறிவிக்கப்பட்டன. ஆனால், இப்போது நிலைமை அப்படியல்ல. பேச்சு முயற்சிகளில் பெரிய முன்நகர்வுகள் இல்லை.

அடுத்து என்ன நடக்கும் என்பதுதான் பலர் மனதிலும் இப்போது தொக்கி நிற்கும் கேள்வியாக உள்ளது.

"விடுதலைப் புலிகளுடன் சமாதான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கும் பிரதமர் ரணிலின் அரசை வீட்டுக்கு அனுப்ப சந்தர்ப்பம் பார்த்திருக்கின்றார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா" - என்று எச்சரிக்கை விடுத்திருக்கிறார் புலிகளின் அரசியல் ஆலோசகரும், புலிகளின் பேச்சுக்குழுத் தலைவருமான அன்ரன் பாலசிங்கம்.

தமது அரசு கலைக்கப்படும் ஆபத்து உள்ளது என்பதை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் மறுக்கவில்லை.

- இவ்வாறு பிரதமர் ரணிலின் அரசை - தனது குறுகிய அரசியல் இலாபங்களுக்காக - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கலைத்தால் அடுத்தது என்ன என்று கேள்வி எழுகின்றது.

தற்போது சமாதானப் பேச்சுகளில் ஈடுபட்டிருக்கும் இரு தரப்பினருமே அத்தகைய நிலை ஏற்பட்டால் என்ன செய்வது என்பது குறித்து தெளிவாக இருப்பதாகத் தென்படுகின்றது.

" தற்போதைய அரசு கலைக்கப்பட்டாலும் நாம் உடனடியாக யுத்தத்துக்குப் போகமாட்டோம். யுத்தநிறுத்தத்தைக் கடைப்பிடிப்போம். நடக்கும் தேர்தலைப் பொறுத்திருந்து பார்ப்போம். அத்தேர்தல் போருக்கும் சமாதானத்துக்கும் இடையிலான போட்டியாக இருக்கும். இலங்கை மக்கள் தாங்கள் போரை விரும்பகின்றார்களா அல்லது சமாதானத்தை விரும்புகின்றார்களா என்பதை முடிவு செய்வதற்காக வாக்களிக்க வேண்டியிருக்கும்." - இப்படி விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கூறியிருக்கின்றார்.

நாடாளுமன்றக் கலைப்புத் தொடர்பாக பிரதமர் ரணிலும் இதேபோன்ற கருத்தையே வெளிப்படுத்தி நிற்கின்றார்.

"அரசு கலைக்கப்பட்டாலும் அதை சந்திப்பதற்கு நாம் தயாராக இருக்கின்றோம். இந்த அரசு கலைக்கப்பட்ட பின்னர் பதவிக்கு வருபவர்கள் யுத்தம் செய்வதா அல்லது சமாதானப் பேச்சுக்களை முன்னெடுப்பதா என்பதைத் தீர்மானிக்கட்டும்." - என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியிருக்கின்றார்.

எந்தத் தடைகள், அழுத்தங்கள் வந்தாலும் அவற்றையெல்லாம் தாண்டி - எதிர்கொண்டு - சமாதான முயற்சிகளைத் தொடர்ந்து முன்னெடுப்பதில் நாம் உறுதியாக இருப்பதாகவும் பிரதமர் கூறியிருக்கின்றார்.

அது மாத்திரமல்ல தாம் முன்னெடுக்கும் சமாதான முயற்சிகளையும், அந்த சமாதான முயற்சிகளைக் காட்டி தமது அரசைக் கவிழ்க்க முனைபவர்களையும் பார்த்து அவர் முக்கிய கேள்வி ஒன்றை எழுப்புகின்றார்.

"யுத்தத்தினால் எதையும் சாதிக்க முடியாது என்பதை அனுபவத்தில் நன்கு உணர்ந்த பின்னரே அமைதி வழியில் தீர்வு காண்பதற்கான சமாதான முயற்சிகளை நாம் ஆரம்பித்தோம்.

"சமாதான முன்னெடுப்புகளை எதிர்த்துக் குரல் கொடுப்பவர்கள் இப்பிரச்சினைக்கு தாங்கள் முன்வைக்கும் மாற்றுத் திட்டம் என்ன என்பதைப் பகிரங்கமாக அறிவிக்க வேண்டும். இந்த சமாதான முயற்சிகளைத் தொடர்வதா அல்லது யுத்தத்தை முன்னெடுப்பதா என்பதை அவர்கள் தெரிவிக்க வேண்டும். வெறுமனே கூச்சலிடுவதால் பிரச்சினைகள் தீர்ந்துவிடப் போவதில்லை.

"யுத்தத்தால் அப்பாவிக் கிராமவாசிகளின் பிள்ளைகளே உயிரிழக்கின்றனர்; அங்கவீனர்களாகின்றனர். கூச்சலிடுபவர்கள் எவரும் உயிரிழப்பதில்லை; அங்கவீனர்களாவதுமில்லை."

இப்படி சுட்டிக்காட்டி கேள்வி எழுப்புகிறார் பிரதமர் ரணில்.

யுத்தத்துக்கு எதிராகக் கூச்சலிடுபவர்களின் பதில்தான் என்ன?

# கோட்டைக்காடு வைத்தியசாலைக்கு நிரந்தர டாக்டரை நியமிக்க கோரிக்கை

அராலி,பெப்.24

கோட்டைக்காடு கிராமிய வைத்தியசாலைக்கு நிரந்தரமாக வைத்திய அதிகாரி ஒருவரை நியமிக்குமாறு சுகாதாரப் பணிப்பாளரிடம் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

மேற்படி வைத்தியசாலையில் பணியாற்றும் மருத்துவர் தினமும் காலை 8.30 மணியிலிருந்து நண்பகல் 12.30 மணி வரை மானிப்பாய் வைத்தியசாலையிலும் ஞாயிறு தவிர்ந்த புதன், வெள்ளி ஆகிய இரு தினங்களிலும் பிற்பகல் 1.30மணி தொடக்கம் 4.30 மணிவரை வட்டுக்கோட்டை, மாவடி அரசினர் வைத்தியசாலையிலும் பணிபுரிந்து வருகிறார்.

புதன், வெள்ளி, ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாள்களில் கோட்டைக்காடு, கிராமிய வைத்தியசாலையில் பிற்பகல் 1.30 மணியிலிருந்து 4.30 மணிவரை சிகிச்சையளித்து வருகிறார். இதனால் அவசரத் தேவைகளுக்கு மருத்துவ உதவிபெற முடியாதுள்ளது.

ஆகவே, நிரந்தர வைத்தியர் ஒருவரை விரைவில் நியமித்துத் தருமாறு இப்பகுதி மக்கள் யாழ். சுகாதார சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளரைக் கோரியுள்ளனர்.

(ஒ-14)

## திருவீதி மான்மியம்

ஆண்டுகள் பலவாய் குழந்தைப்பேறு
அற்றதோர் அழகுப் பாவை
வேண்டவே விநாயகரை நாளும்
வித்தகி கருத் தரித்தே விட்டாள்
வண்ணமார் கோயில் எல்லாம்
வணங்கிட காரில் வந்தாள்
குண்டுகள் குழியில் வீழ்ந்து
குலமகள் வாகனமும் செல்ல
கொண்ட அக்கரு கலைய
குளறியே புலம்பலுற்றாள்
எண்ணரும் யாழ்ப்பாண வீதி
இயமனாய் போச்சு தன்றோ?



- விகடகவி.

# அதிபர், ஆசிரியர்களுக்கிடையில் ஒற்றுமை குறைந்து செல்கின்றது

## மாற்றம் தேவை என்கிறார் முன்னாள் கல்விப்பணிப்பாளர்

யாழ்ப்பாணம்,பெப்.24

அதிபர், ஆசிரியர்களிடையில் ஒற்றுமை குறைந்து செல்கிறது. இந்த நிலைமை மாற்றப்படவேண்டும்.

- இவ்வாறு தெரிவித்தார் நெடுந்தீவு முன்னாள் கோட்டக் கல்விப் பாணிப்பாளர் இரா.சின்னத்தம்பி.

நெடுந்தீவு மேற்கு மங்கையாக்கரசி வித்தியாலயத்தின் மெய்வன்மைப் போட்டிகள் அண்மையில் வித்தியாலய அதிபர் கோபத்மநாதன் தலைமையில் நடைபெற்றன. இந்தப் போட்டிகளில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இரா.சின்னத்தம்பி மேலும் தெரிவித்ததாவது:-

பின் தங்கிய பிரதேசங்களில் வளங்கள் குறைவாக இருத்தல் வழமைதான். ஆனால், அதற்காக ஆசிரியர் வளம், பௌதிக வளங்கள் குறைவு எனக் கூறிக்கொண்டே இருக்க முடியாது. எனவே இவ்வாறான பிரதேசங்களில் கடமையாற்றும் அதிபர், ஆசிரியர்கள் ஒற்றுமையாக கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபடவேண்டும்.

பெரிய பாடசாலைகள், சிறிய பாடசாலைகள் என்ற வேறுபாடுகளை மறந்து தமக்கிடையில் உள்ள பிரச்சினைகளை கலந்து பேசி தீர்த்துக்கொள்ள முயலவேண்டும்.

தாயின் அரவணைப்பில் இருந்துவிட்டு பாடசாலைக்கு வரும் பிள்ளையை தாயிலும் மேலாக நிறைந்த பாசத்துடன் அரவணைக்கும் போதே பிள்ளைக்கு விருப்பத்துக்குரிய இடமாக பாடசாலைகள் மாறமுடியும். பிள்ளைகளின் தேவைகளை இயன்றவரை தீர்த்துவைக்கும் பக்குவம் அதிபர், ஆசிரியர்களுக்கு இருக்கவேண்டும்.

- இவ்வாறு அதிபர், ஆசிரியர்கள், பாடசாலைச் சமூகத்தினர் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவதன் மூலமே கல்வித் தரத்தை உயர்வடையச் செய்யமுடியும் - என்றார்.

கௌரவ விருந்தினர்களான நெடுந்தீவு கோட்டக்கல்விப் பணிப்பாளர் க.அரசரத்தினம், விடுதலைப் புலிகளின் நெடுந்தீவு அரசியல்பொறுப்பாளர் ந.கண்ணன் ஆகியோரும், சிறப்பு விருந்தினரான நெடுந்தீவு மேற்கு கிராமசேவகர் கோ.சண்முகலிங்கமும் உரை நிகழ்த்தினர்.

(எ)

### சமாதான முயற்சிகளை

# உலக நாடுகள் ஆதரிக்கும் வேளை குழப்புவதில் சில தீயசக்திகள்!

## குற்றம் சுமத்துகிறார் மாவை. எம்.பி.

சண்டிலிப்பாய்,பெப்.24

இலங்கை இனப்பிரச்சினைக்கு விரைவில் முடிவு - தீர்வு காணப்படவேண்டுமென்பதில் உறுதியாக நிற்கும் இவ்வேளையில், தென்னிலங்கையில் உள்ள சில தீய சக்திகளும், படையினரில் ஒரு பகுதியினரும் சமாதானத்தைக் குழப்பும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவது கவலைக்குரியது.

- இவ்வாறு கூறினார் யாழ்.மாவட்ட எம்.பி. மாவை சேனாதிராசா.

மானிப்பாய் இந்துக் கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி ஆகியன இணைந்து நடத்திய மெய்வன்மைப் போட்டி அண்மையில் அதிபர்களான கு.சண்முகநாதன், திருமதி வி.பசுபதிப்பிள்ளை ஆகியோர் தலைமையில் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன. இந்தப் போட்டிகளில் பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மாவை எம்.பி. மேலும் தெரிவித்ததாவது:-

அன்று தந்தை செல்வா ஆரம்பித்த அஹிம்சை வழியிலான உரிமைப் போராட்டம் பின்னர் ஆயுதப் போராட்டமாக மாற்றமடைந்தது. தமிழ் மக்களின் நியாயமான போராட்டத்தை உலக நாடுகள் பலவும் ஏற்றுக்கொண்டு தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேசித் தீர்வுகாணுமாறு அரசை வலியுறுத்தி வருகின்றன.

அதன் அடிப்படையில் தற்போது ஏற்பட்டுள்ள அமைதிச் சூழ்நிலையில் நாங்களும் எமது தனிப்பட்ட மற்றும் கட்சி நலன்களையும் விட்டுக்கொடுத்து ஒன்றுபட்டுச் செயற்பட்டு வருகின்றோம்.

ஒழுக்கமுள்ள ஒரு சமுதாயமே நாகரிகமுள்ள சமுதாயமாக விளங்கமுடியும். எங்கே நாகரிகம் இருக்கின்றதோ அங்கே சுதந்திரமானவர்களான மக்களும் இருக்கின்றனர். ஒழுக்கமில்லாதவர்களுக்கு சமுதாயத்தில் இடமில்லை.

இங்கு ஆண்கள் கல்லூரி ஒன்றும் பெண்கள் கல்லூரி ஒன்றும் ஒன்று சேர்ந்து இந்த மெய்வன்மைப் போட்டியை அமைதியான முறையில் மிக ஒழுங்கான முறையில் நடத்தியதை நான் நேரடியாகக் கண்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

இங்குள்ள மாணவர்கள்தான் எமது பிரதேசத்தின் எதிர்காலச் சிற்பிகள். இதுபோன்ற போட்டிகள் இவர்களை ஒழுக்கமும், கட்டுப்பாடும் மிக்க நற்பிரஜைகளாக உருவாக்கும் என்பதில் ஐயமில்லை - என்றார்.

சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட பழைய மாணவரும், ஓய்வுபெற்ற வைத்திய கலாநிதியுமான டாக்டர் ச.முத்துக்குமாரசாமியும் உரையாற்றினர்.

(எ-135)

### மோட்டார்சைக்கிளில் வந்தோரால்

# தாயின் தோளில் சாய்ந்து உறங்கிய குழந்தையின் கைக்காப்பு அபகரிப்பு!

## சங்கானைப் பகுதியில் சம்பவம்

சங்கானை,பெப்.24

வீதியில் நடந்துசென்றுகொண்டிருந்த தாயின் தோளில் சாய்ந்து உறங்கிய குழந்தையின் கையிலிருந்த காப்பை மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் உருவிக்கொண்டோடிய சம்பவம் சமீபத்தில் சங்கானை நிகரை வைரவர் ஆலயமருகே இடம்பெற்றது.

குழந்தையின் கையிலிருந்த காப்பை உருவிக் கழற்றும் முயற்சியின்போது திருடனும், குழந்தையும் தரையில் விழுந்ததாகவும் -

ஆயினும், பின்னர் திருடன் காப்புடன் மோட்டார் சைக்கிளில் ஏறித் தப்பிவிட்டதாகவும் - கூறப்படுகிறது.

இதே நாளில் சங்கானை மாளியவத்தையைச் சேர்ந்த வயோதிப மாது ஒருவரிடமிருந்து மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் தங்கச் சங்கிலியை அறுத்துச் சென்றுள்ளனர்.

(ஒ-29)

### நாளை

மாசி 13
செவ்வாய்க்கிழமை
(25.02.2003)
திதி : நவமி
முற்பகல் 11.29வரை.
நட்சத்திரம: கேட்டை
காலை 6.55வரை.
சுபநேரம்: 11.00- 12.30
ராகுகாலம் : 3.30 - 5.00
(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

ஒன்றும் செய்யாது உட்கார்ந்திருந்து உண்பவன் மலையளவு சொத்தையும் கரைத்துவிடுவான்.

### திருத்த வேலை செய்துகொண்டிருந்தபோது

# பழைய கட்டடம் இடிந்து வீழ்ந்ததில் ஒருவர் பலி!

யாழ்ப்பாணம்,பெப்.24

பண்டத்தரிப்பில் பழைய கட்டடம் ஒன்றை உடைக்கும் பணியில் ஈடுபட்டிருந்த ஒருவர் அக்கட்டடத்தின் 'பிளாட்' இடிந்து வீழ்ந்ததில் படுகாயமடைந்து யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டபின் அங்கு மரணமானார்.

நேற்றுமுன்தினம் நண்பகல் ஒரு மணியளவில் இடம்பெற்ற இப்பரிதாபகரமான சம்பவத்தில் நடராசா ஆனந்தராசா (வயது 32) என்பவரே மரணமானார்.

இவரது மரண விசாரணையை மல்லாகம் நீதிவான் திருமதி ச.இளங்கோவன் நடத்தி பிரேத பரிசோதனை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டார்.

(ம-3)

# வெற்றி பெற்ற அதிர்ஷ்டசாலிகளுக்கு இரத்தினகோபால்ஸ் ஸ்தாபனத்தாரின் பாராட்டுக்கள்...!




HERO HONDA
**World No. 1**
Two-Wheeler Company






## RG இரத்தினகோபால்ஸ்

**STAFFORD MOTOR CO - LTD. இன் அங்கீகரிக்கப்பட்ட (3S) யாழ். முகவர்**

**63, 65, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். 0777 340056**

2003 உலகக் கோப்பை கிரிக்கெட்போட்டி – தென்னாபிரிக்கா – அனுசரணை – HERO HONDA

இப்பொழுது.... CD100SS Street Splendor PASSION CBZ Dawn ஆகிய மோட்டார் சைக்கிள்கள் எம்மிடம் கிடைக்கும்

## யாழில் வெல்லப்பட்ட பரிசுகள்

| | பெயர் | முகவரி | பரிசு |
|---|---|---|---|
| Passion | 01. திரு.தங்கராசா ஹரேஸ் | 11/1, பொன்னம்பலம் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். | Colour TV |
| Passion | 02. திரு.இராசநாயகம் பிரதீபன் | 5/1, சிறாம்பியடி லேன், யாழ்ப்பாணம். | Colour TV |
| CD100SS | 03. திரு.நவரட்ணம் தயாபரன் | கற்பக்குணை, கந்தரோடை, சுன்னாகம். | Oven |
| Passion | 04. திரு.தம்பியையா சண்முகராஜா | கோண்டாவில் கிழக்கு, பலாலி வீதி, கோண்டாவில். | M/Phones |
| Splendor | 05. தில்லைராஜா ஸ்ரீதரன் | தபாற்கந்தோர் அருகில், கோப்பாய் தெற்கு, கோப்பாய். | M/Phones |
| Passion | 06. திரு.செல்லத்துரை பிரதீபன் | பாலசிங்கம் விடுதி, யாழ்.பல்கலைக்கழகம். | M/Phones |
| Splendor | 07. திரு.கதிர்காமநாதன் சுகந்தன் | 221/1, கண்டி வீதி, அரியாலை. | M/Phones |
| CBZ | 08. திரு.சிவராசா பிரசன்னா | வலகா லேன், திருநெல்வேலி. | M/Phones |
| CD100SS | 09. திரு.பொன்னம்பலம் கிருபாந்தஜெயக்குமார் | இணுவில் சிவாகம், இணுவில் கிழக்கு. | M/Phones |
| Streetsmart | 10. செல்வி தயாளினி பூபாலசுந்தரம் | கம்பர்மலை, வல்வெட்டித்துறை. | M/Phones |
| Streetsmart | 11. செல்வி தாரணி பேரின்பநாயகம் | 594, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். | Radio Set |
| CD100Delux | 12. திரு.கனகரட்ணம் கிருஷ்ணமூர்த்தி | சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம். | Radio Set |
| CD100SS | 13. திருமதி சர்மா ஹர்சன் | சிவன்கோவில், புங்குடுதீவு - 3. | Bat & Ball |
| Dawn | 14. திரு.கந்தவனம் கமலானந்தன் | புலவரோடை, வதிரி, கரவெட்டி. | Bat " |
| Dawn | 15. திரு.நற்குணம் சாந்தகிரிநாதன் | 2ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு. | Bat " |
| Passion | 16. திரு.ரட்ணம் ஜெயசுதாகரன் | 448,பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். | Bat " |
| Splendor | 17. திரு.தியாகராஜா திருச்செல்வம் | சம்பந்தர் கடையடி, கரவெட்டி மேற்கு, கரவெட்டி. | Bat " |
| Passion | 18. திரு.இராசையா நேசராசா | வீ.எம்.றோட், புலோலி மேற்கு, பருத்தித்துறை. | Bat " |
| Splendor | 19. திரு.இராஜநாதன் கோபிகிருஷ்ணா | உப தபாற்கந்தோர், வியாபாரிமூலை, பருத்தித்துறை. | Bat " |
| CBZ | 20. திரு.எஸ்.ஆர்.ஆர்.கே.லயனல் புருஷோத்தமா | 143, பிரதான வீதி, யாழ்ப்பாணம். | Bat " |
| Dawn | 21. திரு.முருகேசு லோகநாதன் | பழைய தபாற்கந்தோர் வீதி, சங்கானை. | Bat " |
| Passion | 22. திரு.பரராஜசிங்கம் ஜெயரூபசிங்கம் | அக்கராயன், ப.நோ.கூ.ச., அக்கராயன். | Bat " |
| CD100SS | 23. திரு.பத்மாநந்தன் பத்மகுமார் | 10ஆம் வட்டாரம், புங்குடுதீவு. | Bat " |
| | **வவுனியாவில் வெல்லப்பட்டவை** | | |
| | 24. திரு.K.பாஸ்கரன் | 78, வைரவகோயில் வீதி, வைரவப்புளியங்குளம், வவுனியா. | Colour TV |
| | 25. திரு.S.தாதீசம் | பலியால பிள்ளையார் கோயிலடி, மகாரம்பைக்குளம், வவுனியா. | M/Phone |
| | 26. திரு.Y.அரவிந்தன் | இளவேனில் வாணியம், கிளிநொச்சி. | Bat & Ball |
| | 27. திரு.B.பாலவசந்தன் | 18, வைரவர் கோயில் வீதி, வவுனியா. | Bat " |
| | 28. திரு.V.இராமச்சந்திரன் | இறம்பைக்குளம், வவுனியா. | Bat " |
| | 29. திரு.T.ரவீந்திரன் | 23/81, மாடாசாமி கோயிலடி, பண்டாரிக்குளம்,வவுனியா. | Bat " |

**வெற்றிபெற்ற அதிர்ஷ்டசாலிகள் உங்கள் பரிசில்களை தகுந்த ஆவணங்களுடன் வந்து பெற்றுக்கொள்ளுமாறு இரத்தினகோபால்ஸ் ஸ்தாபனத்தார் அன்புடன் கேட்டுக்கொள்கின்றனர்.**



TVS **சுசுக்கி ரேடர்ஸ்** TVS



**57,59, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.**

**(இந்தியாவில் இருந்து மட்டும், யாழில் விலை 96, 000 ரூபா)**

(C-26659)

# குன்றிவரும் மாணவர் ஒழுக்கத்தை சீர்ப்படுத்த ஆசிரியர்கள் விரைந்து செயற்படுவது அவசியம்

ஆசிரியர் என்ற சொற்றொடர் ஆசு+இரியர் என்ற இரண்டு பதங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. ஆசு என்றால் குற்றம். அதாவது மொழி மெய்களினால் ஏற்படும் குற்றம். இரியர் என்றால் களைபவர் அல்லது நீக்குபவர். எனவே தன்னிடத்தே வந்தமைந்த மாணவர்களிடத்தில் காணப்படும் குற்றங்களை நீக்கி குணங்களை எடுத்துக்கூறி அவர்களை நல்வழிப்படுத்தி நாட்டுக்கு நலம் தரும் நற்பிரஜையாக்க எவர் செயற்படுகின்றாரோ அவர் ஆசிரியர் என்று அழைக்கப்படும் தகுதியைப் பெறுகிறார் எனலாம்.

இதனாலேயே ஆசிரியர்கள் சமூகத்தின் தலைவர்களாகக் கருதப்படுகின்றார்கள். எனவே, மாணவர்களுக்கும், சமூகத்திற்கும் முன்மாதிரியாக அமையக்கூடிய நடத்தைகளை அவர்கள் கொண்டிருக்கவேண்டும். 'கற்க கசடற' என்ற வகையில் தான் ஆற்றவேண்டிய சேவையை உணர்ந்து அதன்படி தானும் ஒழுகி பிறரையும் ஒழுகச்செய்யும் செயல்களையுடையவனாக ஆசிரியர் திகழ வேண்டும்.

1996 பிரகடனம் ஆசிரியர்களுக்கான ஒழுக்கக் கோவை பற்றியும் கூறியுள்ளது. ஒழுக்கக் கோவையில் முன்மாதிரி நடத்தை மிகமுக்கியத்துவம் பெறுகின்றது. இந்நடத்தை போலல் (Imitation), பின்பற்றல் முறைகளில் மாணவரிடையே அதிக செல்வாக்கைச் செலுத்துவனவாகும். ஒழுக்கக் கோவைக்கு சட்டத்திற்குரிய வலிமை இல்லாத போதிலும் தார்மீக ரீதியாக அவை ஆசிரியர்களின் வாழ்க்கையுடன் இரண்டறப் பிணையவேண்டும்.

காலத்துக்கு காலம் வெளியிடப்படும் பிரசுரங்கள், கையேடுகள், சுற்று நிருபங்களில் குறிப்பிடப்படும் ஒழுக்கங்கள் குறித்தும், தீய நடத்தைகள் குறித்தும் ஆசிரியர்கள் அக்கறை கொள்ளுதல் அவசியமாகும்.

ஆசிரியர்கள் சமூகத்தின் தலைவர்களாகவும் மாணவர்கள் மத்தியில் உடனடி தாக்கத்தை ஏற்படுத்துபவர்களாகவும் இருப்பதனால் பொது வாழ்க்கையில் மட்டுமன்றி தனிப்பட்ட வாழ்க்கையிலும் ஆசிரியர்கள் முன்மாதிரியாக இருத்தல் வேண்டும். சமுதாயம் ஆசிரியர்களுக்கு வழங்கும் அந்தஸ்து பெரும்பாலும் இதன் அடிப்படையிலேயே நிர்ணயிக்கப்படுகின்றது.

மது அருந்துதல், புகைப்பிடித்தல், பாலியல் துர்நடத்தைகள், ஏமாற்றல், வஞ்சித்தல், சமூகவிரோத செயல்களில் ஈடுபடுதல், பொதுச் சொத்துக்களை கையாடல் போன்றன இத்தகைய தவிர்க்கப்பட வேண்டிய துர்நடத்தைகளாகும். இன்றைய மாணவ சமுதாயம் இவற்றில் எல்லாம் ஈடுபடும் நிலை காணப்படுவதனால் ஆசிரியர்கள் இவற்றில் மிகவும் விழிப்பாக இருத்தல் அவசியமாகும். ஆசிரியர்கள் இத்துர்நடத்தைகளை தவிர்த்து முன்மாதிரியாக திகழ்வதன் மூலமே, மாணவர்களை நல்வழிப்படுத்த முடியும். பிள்ளைகளின் பண்புகளை வடிவமைக்கும் அச்சாணியாக ஆசிரியர் நடத்தை அமையவேண்டும்.

ஆசிரியனுக்கு நடிபங்கு என்பது அவசியமானதொன்று. கிரேவ்ஸ் (GRAVES) என்பவர் சொன்னது போல ஆசிரியரின் நடிபங்கு விரிவடைந்து காணப்படுகின்றது. ஐந்து பரிமாணங்கள் ஆசிரியரின் தரத்தினை நிர்ணயிக்கின்றன.

★ தொழில்நுட்பவாதியானது (சிறந்த முறையில் அறிவு வழங்கல்)

★ முனைப்பு வாரியானது (பிள்ளைகள் அறிவு பெறுவதில் முனைப்பு)

★ உணர்வு பூர்வமானது (பிள்ளைகளின் பிரச்சினைகளில் அக்கறை)

★ ஒழுங்கமைப்பு ரீதியானது (வகுப்பறை முகாமை)

★ சமூக ரீதியானது (சமூகத் தொடர்பு)

ஆசிரியரின் நடிபங்கு மாணவர் அறிவைப் பெற்றுக்கொள்வதற்கும் அவர்களின் திறன் விருத்திக்கும் மட்டுமல்லாது விழுமியங்களின் விருத்தியிலும் முக்கிய செல்வாக்கைச் செலுத்துவதாய் அமையவேண்டும்.

மேலும், இன்றைய உலகமயமாக்க சிந்தனையினால் நமது பாரம்பரிய கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்கள் கால ஓட்டத்தில் அள்ளுண்டு செல்லும் நிலை காணப்படுகின்றது. இவற்றினை பேணிப் பாதுகாக்க வேண்டிய பாரிய பொறுப்பு இன்றைய ஆசிரியர்களை சார்ந்ததாகும். எனவே சீரான சமூகத்தை கட்டியெழுப்ப இன்றைய ஆசிரியர்கள் பழைமைக்கும், புதுமைக்கும், எண்ணத்துக்கும், மனப்பாங்குக்குமிடையிலான சமத்துவத்தை உள்ளடக்க வேண்டிய பாரிய பொறுப்பை ஏற்றுள்ளனர்.

திருமதி ச.நாகேந்திரன்
வல்வை.

மேலும் இன்றைய சர்வதேச சமுதாயத்தில் (GLOBAL SOCIETY) ஆசிரியர்கள் சமூகநீதி, சகிப்புத்தன்மை, சமாதானம் என்பவற்றிற்கான சர்வதேச ஒழுக்கவியல் கோட்பாடுகளை மேம்படுத்தும் ஒரு பொறுப்பினையும் கொண்டுள்ளனர்.

இன்றுள்ள சமுதாய நிலை முன்பை விட ஆசிரியர்களின் பணிகளை வலுவாக்கியுள்ளது. உள்நாட்டு யுத்தம், அகதிகள் பிரச்சினை, இனப்பாகுபாடுகள், வன்முறைகள், போதை வஸ்து பாவனை, பாலியல் துஷ்பிரயோகம், குடும்ப சீர்குலைவு என்பன இன்று பாடசாலைக் கல்வியையும் மாணவர் ஒழுக்கநெறியையும் சீர்குலைத்துள்ளன. போர் அனர்த்தங்கள், குடும்பச் சீரழிவு போன்ற பல காரணங்களால் இன்றுள்ள பல மாணவர்கள் மனமுறிவுகளுக்கும் பல்வேறு உளத் தாக்கங்களுக்கும் உட்பட்டவர்களாக காணப்படுகின்றனர்.

எனவே, இன்றைய எமது ஆசிரியர்கள் இவற்றினை வகுப்பறைகளிலே சரியாக இனங்கண்டு செயற்பட வேண்டிய பாரிய பொறுப்பினை ஏற்றுள்ளனர். இதனை விடுத்து அவன் கற்க மறுக்கும் மாணவன் என்றோ அல்லது கற்க விருப்பமில்லாத மாணவன் என்றோ காரணம் கூறி பாராமுகமாக இருந்து விட முடியாது. அவனுக்குரிய பிரச்சினையினை இனங்கண்டு தகுந்த வழிகாட்டல்களையும் ஆலோசனைகளையும் வழங்க வேண்டிய பாரிய பொறுப்பு இன்றைய ஆசிரியர்களுக்குரியது. அதுமட்டுமல்ல கல்வி வழிகாட்டல், தொழில் வழிகாட்டல்களுக்குரிய பாரிய பொறுப்பினையும் ஏற்றுள்ளனர்.

கல்வி உலகிற்கும் தொழில் உலகிற்குமான இடைவெளியை நிரப்பும் வகையில் புதிய கல்விச் சீர்திருத்த நடவடிக்கைகள் அமைந்த போதிலும் கல்வி உலகின்பால், தொழில் உலகின்பால் சரியான முறையில் மாணவர்கள் திசை கோட்படுத்தப்பட ஆசிரியர்களின் வழிகாட்டல்கள் இன்றியமையாததாகும்.

உதாரணமாக பல்கலைக்கழகங்களில் என்னென்ன கற்கைநெறிகள் உள்ளன? அவற்றுக்கான அடிப்படைத் தகுதிகள் யாவை? உயர் கல்விக்கான மேல்நோக்கிய அசைவிற்கான வாய்ப்புகள் யாவை? மற்றும் பல்கலைக்கழகங்களில் அனுமதியைப் பெறத் தவறும் பட்சத்தில் எவ்வாறான வாய்ப்புகள் உள்ளன? கல்வியியல் கல்லூரிகளில் என்னென்ன கற்கைநெறிகள் உள்ளன? இவற்றுக்கான அடிப்படைத் தகுதிகள் யாவை? எனபது போன்ற இன்னோரன்ன விடயங்களை ஆசிரியர்கள் சரியான முறையில் தாம் அறிந்திருந்து அது தொடர்பான சரியான வழிகாட்டல்களை ஜி.சீ.ஈ.சாதாரணதர, உயர்தரபாடத் தெரிவுகளின் போது மாணவர்களுக்கு வழங்குதல் வேண்டும்.

உதாரணமாக ஒரு எடுத்துக்காட்டை நோக்குமிடத்து, தேசிய கல்வியியற் கல்லூரிகளில் நாடகமும் அரங்கியலும் என்னும் கற்கை நெறியை பயில ஜி.சீ.ஈ.உயர் தரத்தில் நாடகமும் அரங்கியலை ஒரு பாடமாக எடுத்து சித்தியடைந்தால் மட்டும் போதாது. அதேவேளை ஜி.சீ.ஈ.சாதாரண தரத்தில் நடனம் அல்லது சங்கீதத்தினை ஒரு பாடமாகக் கற்று சித்தியடைந்திருத்தல் வேண்டும். இதனால் ஜி.சீ.ஈ. உயர் தரத்தில் நாடகமும் அரங்கியலிலும் விசேட சித்தியைப் பெற்று (A) கல்வியியல் கல்லூரி அனுமதிக்குரிய வெட்டுப்புள்ளியிலும் கூடுதலான புள்ளியையும் பெற்ற மாணவர்கள் சிலர் ஜி.சீ.ஈ.சாதாரண தரத்தில் நடனத்தையோ அல்லது சங்கீதத்தையோ தெரிவுசெய்யாத காரணத்தினால் கல்வியியல் கல்லூரி அனுமதியின்றி வெளியில் நிற்கும் நிலை காணப்படுகின்றது. எனவே, கல்வி வழிகாட்டல் சரியான முறையில் அமையும்போது கல்வி உலகிற்கும் வேலை உலகிற்குமான இடைவெளி நிரப்பப்படும்.

இத்தனைக்கு மத்தியில் நவீன தகவல்தொழில்நுட்ப விருத்தியும் நவீன வாழ்க்கை முறைகளும் எமது நாட்டையும் ஊடுருவியுள்ளன. இத்தனைக்கும் முகம் கொடுக்கக்கூடிய சவால்களுக்கு ஈடுகொடுக்கக்கூடிய ஒரு சீரான சமுதாயத்தை தோற்றுவிப்பது இன்றுள்ள ஆசிரியர்களின் முக்கிய பொறுப்பாகும்.

இந்த வகையில் ஆசிரியர்கள் மாணவர்களிடத்திலே நாட்டின் எதிர்காலத்திற்குத் தேவையான அறிவு, திறன், மனப்பாங்கு, நடத்தைகளை விருத்தி செய்ய வேண்டிய பொறுப்புடையவராவர். அவை ஆசிரியரிடத்தில் விருத்தியடையும்போதுதான் மாணவர்களிடத்திலும் அவற்றை விருத்தி செய்யமுடியும். இதற்கு ஏற்ற வகையில் ஆசிரியர்கள் தம்மை வளர்த்துக்கொள்வது சீரான சமூகத்தை கட்டியெழுப்ப வழிவகுக்கும். இன்று நாம் ஒரு கற்கும் சமுதாயத்தில் (Learning Society) வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். கல்வி என்பது வாழ்நாள் முழுவதற்குமான (Life Long Education) ஒருதொடர் செயற்பாடாகும்.

புதிய சமூக விழுமியங்களைத் தோற்றுவித்து உதவவேண்டிய ஆசிரியர்கள் அதன் பொருட்டு அறிவினாலும், தொழில்சார் பயிற்சியினாலும் சிறந்த ஆளுமை பொருந்தியவராக இருத்தல் சீரான சமூகத்தை கட்டியெழுப்ப வழிவகுக்கும் என்றால் மிகையாகாது. எனவே, இன்றைய ஆசிரியர்கள் வினைத்திறன், தொழில் வாண்மை பற்றிய அறிவு நற்குணமும், நல்லொழுக்கமும், முன்மாதிரி நடத்தை, அனுதாபமும் ஒத்துழைப்பும், சுமுகமான சமூகத் தொடர்புகள் என்பவற்றை வளர்த்துக்கொள்ளல் வேண்டும். ☆

## விக்கிரகத் திருட்டு தொடர்பாக கைதானோருக்கு பிணை அனுமதி

வலி.வடக்கு,பெப்.24

ஆலயங்களில் இடம்பெற்ற விக்கிரகத் திருட்டுக்கள் தொடர்பாகக் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த ஆறு பேருக்கும் மல்லாகம் மாவட்ட நீதிபதி திருமதி சரோஜினி இளங்கோவன் பிணை அனுமதி வழங்கியுள்ளார்.

சுன்னாகம் பொலிஸாரால் உடுவில் ஆலடி இடம்பெயர்ந்தோர் முகாமைச் சேர்ந்த செல்லத்தம்பி அருச்சுனா, மருதனார்மடம் சபாபதிப்பிள்ளை இடம்பெயர்ந்தோர் முகாமைச் சேர்ந்த கணபதி ஸ்ரீக்குமார், வடிவேல் சூரியகுமார், மல்லாகம் கோணப்புலம் இடம்பெயர்ந்தோர் முகாமைச் சேர்ந்த தேவராசா யேசுதாசன், கோண்டாவில் மேற்கு, காங்கேசன்துறை வீதியைச் சேர்ந்த கந்தையா முத்துலிங்கம் மற்றும் கற்றனைச் சேர்ந்த புஸ்பராசா புஸ்பலிங்கம் ஆகியோருக்கே தலா ஆயிரம் ரூபா காசுப் பிணையிலும் 20ஆயிரம் ரூபா ஆட்பிணையிலும் செல்ல அனுமதி வழங்கப்பட்டது.

இவர்களில் மூவர் பொலீஸ் தரப்பு சாட்சியங்களாக மாறியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-86)

## கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பு

தென்மராட்சி,பெப்.24

பளை கல்வி கோட்டப் பாடசாலைகளில் கல்வி பயிலும் - வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்த - மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை பச்சிலைப்பள்ளி அபிவிருத்திப் புனர்வாழ்வுக் கழகத்தினர் வழங்கவுள்ளனர்.

பளை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை, சோரன்பற்று கணேசா வித்தியாலயம், வேம்பொடுகேணி சீ.சீ.த.க. பாடசாலை, தர்மக்கேணி அ.த.க. பாடசாலை, இயக்கச்சி அ.த.க. பாடசாலை ஆகியவற்றின் மாணவர்களுக்கே கற்றல் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-117)

## கல்விச்சாலைக் காட்சிகள்



கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலய தரம் ஒன்று கால்கோள் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடமராட்சி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் எஸ்.நந்தகுமார் மாணவர் ஒருவருக்கு கற்றல் உபகரணம் வழங்குவதைப் படத்தில் காணலாம். அருகில் அதிபர் இ.இராகவன் காணப்படுகின்றார். (எ-173)



அராலி சரஸ்வதி மகா வித்தியாலயத்தின் வருடாந்தப் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட முன்னாள் மாவட்ட நீதிபதி மு.திருநாவுக்கரசு மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம். அருகில் திருமதி ம.திருநாவுக்கரசு, வித்தியாலய அதிபர் திருமதி கே.அம்பலவாணர் ஆகியோர் காணப்படுகின்றனர். (எ)



கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்தின் பாவனைக்கென கொள்வனவு செய்யப்பட்ட விளையாட்டு மைதானக் காணியின் உறுதியை இலண்டனில் இயங்கும் கோண்டாவில் நலன்புரிக் கழக உறுப்பினர்கள் வித்தியாலய அதிபர் செல்வி பா.மார்க்கண்டுவிடம் கையளிப்பதைப் படத்தில் காணலாம். (எ)



ஏழாலை சைவ சன்மார்க்க வித்தியாலயத்தின் வருடாந்த மெய்வன்மைப் போட்டி நிகழ்வில் அதிபர் எஸ்.சிவநடராசா தலைமையுரை நிகழ்த்துவதைப் படத்தில் காணலாம். அருகில் பிரதம விருந்தினரான சுன்னாகம் மக்கள் வங்கி முகாமையாளர் சு.ஹென்றி மற்றும் விருந்தினர்கள் காணப்படுகின்றனர். (எ)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

12/7, கெனடி வீதி, நாவாந்துறையைச் சேர்ந்த தேவதாசன் ஜெசிந்தாமனி (ஜெசி) என்பவருடைய தே.அ. அட்டை யாழ்.நகரில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேலுள்ள முகவரியில் ஒப்படைத்துதவவும். (14861)

சாவகச்சேரி முதலாம் மைல் வீதி, கிராம்புவிலைச் சேர்ந்த கந்தையா சரவணமுத்து என்பவருடைய தேசிய அ.அ. (இல.321063082V), விசேட அ.அ. (இல.091008061), சாரதி லைசென்ஸ், ஒரு தொகைப்பணம், முக்கிய ஆவணங்கள் என்பன டச்சு வீதியில் சிறிய பையுடன் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (சி-26668)

சங்கானை மேற்கு, பண்டத்தரிப்பைச் சேர்ந்த வாசுகி இராமச்சந்திரன் என்பவருடைய தேசிய அ. அட்டை (இல.808551543V), விசேட அ.அட்டை (இல.0905006376), பல்கலைக்கழக அ.அட்டை (2001/C/55) என்பன பரமேஸ்வராச் சந்திக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 121/1, மின்சார நிலைய வீதி, யாழ். நகரிலுள்ள நல்லி சில்க்ஸில் ஒப்படைத்துதவவும். (14870)

## காணவில்லை

இல.152, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சுந்தரலிங்கம் விநாயகமூர்த்தி என்பவருடைய லுமாலா (இல.55617346) சைக்கிள் 22.02.2003 இரவு 10.00 மணியளவில் யாழ்ப்பாணத்தில் காணாமற்போய் விட்டது. இது பற்றிய தகவல் தெரிந்தவர்கள் மேற்காணும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும். (14881)

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

**German Shepherd Alsation** பூர்சி நீக்கிய நாய்க்குட்டிகள் **Grade dane 1. Male** நாய் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ஜீவராஜா, வளாக வீதி, திருநெல்வேலி, நல்லாயன் நிலையம் அருகில். T.P.: 5191. (14859)

## காணி விற்பனைக்கு உண்டு

சாவகச்சேரியில் பருத்தித்துறை வீதியில் கண்டி வீதியிலிருந்து 100 யார் தூரத்தில் தபால் கந்தோர் முன்னால் அமைந்துள்ள 7 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: பெ.க.குணரட்ணம், C/o "காந்தி", இல.2, சங்கிலியன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (14884)

## இலக்கியக் கட்டுரைகள்

சிறுகதை, நாவல், குறுநாவல், நாடகம், இலக்கிய விமர்சனம் எல்லாவற்றிற்கும் விளக்கங்கள் எழுதியிருக்கிறார். எல்லாவகை இலக்கியங்களும் படைத்த கலாபூஷணம் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை. க.பொ.த. மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பயன்படும். (14853)

## வீடு வாடகைக்கு தேவை

யாழ்.மாநகரசபை எல்லைக்குள்/ பல்கலைக்கழக சுற்றாடலில் பல்கலைக்கழக விரிவுரையாளர் குடும்பத்திற்கு சகல வசதிகளுடன் வீடு வாடகைக்குத் தேவை. வாடகை விவரம் பேசித் தீர்மானிக்கலாம். தொடர்பு: வி.இல.1797, உதயன், யாழ்ப்பாணம். (14871)

## மணப்பெண் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1971இல் பிறந்த, பூசம் 4ஆம் பாதம், பாவம் 12, நற்பண்புள்ள பட்டதாரி ஆசிரியருக்கு உத்தியோகம் பார்க்கும் அல்லது பட்டதாரி மணப்பெண் தேவை. உயரம் 5'6" சாதகக் குறிப்பு, குடும்ப விவரத்துடன் தொடர்புகொள்ளவும். (சீதனம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம்) வி.இலக்கம் 1798, உதயன், யாழ்ப்பாணம். (14878)

## சமுர்த்தி வங்கி திறப்புவிழா

கரவெட்டி பிரதேச செயலகப் பிரிவுக்கான நெல்லியடி சமுர்த்தி வங்கித் திறப்புவிழா நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.30மணிக்கு கரவெட்டி பிரதேச செயலர் க. கனகரத்தினம் தலைமையில் நடைபெறும்.

பிரதமவிருந்தினராக யாழ் சமுர்த்தி உதவி ஆணையாளர் எஸ்.சிவபாதசுந்தரம் கலந்துகொள்வார். (எ)

---

## முக்கிய அறிவித்தல்

யாழ்.கொட்டடி முத்தி'பேறு பெற்ற யோசவ்வாஸ் யாத்திரைத்தல திறப்புவிழாவும்

**இலங்கையின் அனைத்து ஆயர்களும் கலந்துகொள்ளும்**

**திருநாள் திருப்பலியும்**

நாளை (25.02.2003) செவ்வாய்க்கிழமை மாலை 5.00 மணிக்கு நடைபெறும்.

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

(14880) - பரிபாலகர்.

---

## ROYAL GLASS LANKA (PVT) LTD

**வேலைவாய்ப்பு**

**நேரடி சந்தைப்படுத்துநர்கள்**

***(Direct Marketing Persons)***

*தகைமைகள்:*

- ☆ கல்வித் தகைமை ஆண்டு 10
- ☆ வியாபாரம் செய்வதில் ஈடுபாடு உடையவராயும்
- ☆ கடின உழைப்பும் விடா முயற்சியும் உடையவராயும் இருத்தல் வேண்டும்.

நேர்முகப் பரீட்சை

*காலம்:* 26.12.2003 புதன்கிழமை

*(காலை 9.00 மணியிலிருந்து பி.ப.3.00 மணிவரை)*

சுயவிவரக் கோவையுடன் கீழ் குறிப்பிடப்படும் முகவரிக்கு சமுகம் தரவும்.

**ஜீவா கொமினிக்கேசன் (021 - 2223523)**

*தலங்காவல் பிள்ளையார் வீதி,*

*(தபால்பெட்டிச் சந்திலிருந்து 200 m தூரத்தில்)*

*திருநெல்வேலி; யாழ்ப்பாணம்.* (14763)

---

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**எமது கிராமத்தின் வளர்ச்சிக்கு முன்னோடிகளாகத் திகழும்**





**திரு.வே.துரைசிங்கம் (J/311) திரு.க.வாமதேவன் (J/312)**

இருவரும் கிராம உத்தியோகத்தர் சேவை தரம் 1 இற்கு பதவி உயர்வு பெற்றமையையிட்டு இவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு இன்னும் பல பதவி உயர்வு பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

**வளர்மதி சனசமூக நிலையம்**

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

(14875)

---

## ஈரவிழிகளுடன் ஓராண்டு நினைவலைகள்

*அன்னை மடியில்:* 05 – 03 – 1938

*ஆண்டவன் திருவடியில்:* 07 – 03 – 2002



**திருமதி சிவக்கொழுந்து கனகசபை** *(ஓய்வு பெற்ற ஆசிரியர்)*

ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
அம்மா என்றழைக்க உறவொன்று வருமோ?
கண்மணி போல் சீராட்டி வளர்த்தாயே
யாரிடம் சொல்வோம் இன்று.

உன் ஆத்மா சாந்தி பெற எல்லாம் வல்ல கும்பளாவளைப் பிள்ளையாரைப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவுடன்:
**குடும்பத்தினர்.**

தற்காலிக முகவரி:
S.நாகலிங்கம்
"சிறீபதி", புகையிரத நிலைய வீதி.
கோக்குவில் கிழக்கு.

நிரந்தர முகவரி:
கும்பளாவளைப் பிள்ளையார் கோவில் வீதி.
அளவெட்டி மத்தி.

(14876)

---

## இரண்டாம் ஆண்டு நினைவுப் பிரார்த்தனை

*புவி வாழ்வு* 05 – 07 – 1962

*இறை வாழ்வு* 15 – 02 – 2001



திருமதி

## சத்தியாதேவி சிவகுமார்

**திதி: 24.02.2003**

*அம்மா என்னும் எம் உயிர்*
*அணைந்து ஆண்டு இரண்டு நிறைவு*
*எப் பிறப்பில் இனிக் காண்போம்*
*எம் இனிய தெய்வத்தை?*

*கொக்குவில் மேற்கு,*
*உயரப்புலம்,*
*ஆனைக்கோட்டை.* (14883)

**கணவர், பிள்ளைகள், தந்தை, சகோதரர்கள், சகோதரிகள், மாமி, மைத்துனர், மைத்துனிகள், உறவினர்கள்.**

---

## நீர் நிறைந்த விழிகளுடன் ஆறாத்துயரில்

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 28 – 05 – 1937

மறைவு 15 – 02 – 2001



**அமரர் Dr.கந்தையா பாலசிங்கம்**

அட்டமித்திதி: 24.02.2003

*அன்புருவே! எங்களுக்குச் சுருதியாக விளங்கிய*
*அற்புதமே! நீங்கள் சென்று இரண்டாண்டாச்சோ?*
*நேற்று நீங்கள் கண்துடைத்து,*
*கருணை செய்து, கனிவாய்க் காத்து*
*கண்கண்ட கடவுளானீர்! நாமெல்லோரும்*
*முன்செய்தவத்தால் உம்மோடு வாழ்ந்தோம்*
*மூலவேர் நீர்; உமையிழந்து வாடுகின்றோம்.*
*"அப்பா என்றரற்றிய நா ஓய்ந்து போச்சு!*
*"அப்பா என்றழுத விழி காய்ந்து போச்சு!*
*புயல் காய்ந்த மாமாச்சு.... எங்கள் வீடு!*
*மெய்தவழும் உம்முகமும் சிரிப்பும் எங்கே?*
*உய்ய வழி அற்றழுதோம் எத்தனை ஆண்டுகள்*
*ஓடினாலும் உமை மறக்காது எங்கள் நெஞ்சே!*
*கண்ணீர் மலர்கள் இட்டு வணங்குகின்றோம்.*
*கவிதையிலே அஞ்சலித்தோம்! உங்களுக்கு*
*நன்றி சொல்ல வார்த்தையில்லை! உம்கனவை*
*நனவாக்க உம்மை நினைவோம்! என்றும் உம்மை*
*மண்ணுள்ளவரை நினைவோம் என்றும் எம்மை*
*"அருள்வடிவாய்" வழிநடத்த வேண்டுகின்றோம்!*
*விண்ணகத்தில் இளைப்பாறும் உங்கள்....*
*ஆத்ம சாந்திக்காக ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

*பிரசன்னா வைத்திய நிலையம்,*
*15, பேரின்பநாயகம் வீதி,*
*கச்சேரியடி, யாழ்ப்பாணம்.* (14828)

உங்கள் பிரிவால் துயருறும்:
**மனைவி, பிள்ளைகள்.**

---






**உலகப் புகழ் பெற்ற L.G**

**சலவை இயந்திரங்கள்**

**Abans நிறுவனத்தின்**

**உத்தரவாதத்துடன்**

**இலவச விநியோக சேவையில் பெற்றிட**

LG

**JAFFNA ELECTRICALS**

Authorised Dealer For

**Abans**

141, POWER HOUSE ROAD, JAFFNA

TEL: 021-222-5766

## அடைவு மீட்பதற்கான அறிவித்தல்

ஐயப்பா அடைவு பிடித்தல் (பழைய பெயர்)

**மணி ஐயப்பா அடைவு பிடித்தல் (புதிய பெயர்)**

மேற்படி நிலையத்தில் அடைவு வைத்தவர்கள் இன்றுமுதல் 10.03.2003ஆம் திகதிக்குள் நகைகளை மீட்டுக் கொள்ளவும். அவ்வாறு மீட்கத் தவறும் பட்சத்தில் நகைகள் விற்பனை செய்யப்படும் என்பதை வருத்தத்துடன் அறியத்தருகின்றோம்.

*இல. 169, ஸ்கந்தபுரம்,*
*கிளிநொச்சி.* (14848) *ச.சிவசுப்பிரமணியம்.*

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு 14 - 12 - 1918



உதிர்வு 25 - 01 - 2003

### அமரர் A.R.சிவகுருநாதன்

எங்கள் குடும்பத்தின் குல விளக்காய்
நல்லதோர் வழிகாட்டியாய் வாழ்வூட்டினாய்
அன்பாய், பண்பாய், பாசமாய் எம்மையெல்லாம்
வளமாய் வாழ்ந்திட வகை செய்தாய்
இதய தெய்வமே! நீங்கள் எம்மையெல்லாம்
மீளாத் துயரில் ஆழ்த்திவிட்டு அமரராகி
எங்களின் உயிரிலும் உள்ளங்களிலும்
என்றென்றும் நீங்காத நினைவாய் நிலைத்துவிட்டீர்கள்.
*உங்களின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.*

அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு எமதில்லம் நாடிவந்து எமக்கு பலவிதத்திலும் உதவிகள், ஒத்துழைப்பு வழங்கியவர்களுக்கும், அனுதாபச்செய்திகள் அனுப்பியவர்களுக்கும் மலர் வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

102, அம்பலவாணர் வீதி, நீங்காத நினைவுடன்:
அத்தியடி, யாழ்ப்பாணம். **மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.** (14736)

## ஓராண்டு நினைவலைகள்



அமரர்

### இராசையா செல்வரெத்தினம் *(செல்வம்)*

மண்ணுலகில் 31-05-1945 | விண்ணுலகில் 24-02-2002

"தேவன் ஈந்த எங்கள் அன்புச் செல்வமே!
இந்த உலகமே மாயை என்ற தேவனின்
வார்த்தையை உறுதி செய்தவரே!
எமைவிட்டுப் பிரிந்து ஓராண்டு சென்றாலும்
மறையவில்லை உங்கள் நினைவு எம் இதயத்தைவிட்டு
பரலோகத்தில் ஒருநாள் உங்களைச் சந்திப்போம்
என்று ஆறுதல் அடைகின்றோம்.

அன்னாரின் ஓராண்டு நினைவாக வட்டுக்கோட்டை, யாழ். கல்லூரி விடுதியில் நடைபெறும் "நன்றித்துதி" ஆராதனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்பாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

நிரந்தர முகவரி: உங்கள் பிரிவால் துயருறும்:
*"தங்க கிரி",* அன்பு மனைவி: **நகுலேஸ்வரி (சச்சி),**
*மட்டுவில் தெற்கு,* **சகோதரி, சகோதரர்கள், மைத்துனர்கள், மைத்துனிமார்,**
*சாவகச்சேரி.* (14836) **மக்கள், மருமக்கள், உற்றார், உறவினர்கள்.**

## இலங்கையிலிருந்து கவச உடைகளை ஐ.நா.வாங்குகிறது

'ஹாஷா இன்ரநஷனல்' என்ற இலங்கை நிறுவனத்திடமிருந்து ஒன்று 56ஆறாயிரத்து 600ரூபாவீதம் குண்டு துளைக்காத 73கவச ஆடைகளை வாங்குவதற்கு ஐ.நா.முடிவு செய்துள்ளது. நீர்கொழும்பிலுள்ள மேற்படி நிறுவனத்திற்கு விஜயம் செய்த ஐ.நா.நிபுணர்கள் கவச ஆடைகளை சோதனை செய்து அவற்றின் தரம் குறித்து திருப்தி தெரிவித்துள்ளனர்.

ஐரோப்பிய தயாரிப்பாளர் அல்லாத ஒரு நிறுவனத்திடமிருந்து இத்தகைய கவச உடைகளை ஐ.நா. வாங்குவது இதுவே முதன்முறை எனக் கூறப்படுகிறது.

உலகின் பல பாகங்களிலும் பணியாற்றிவரும் ஐ.நா.பணியாளர்களுக்கு இக் கவச உடைகள் வழங்கப்படஉள்ளன.

ஐ.நாவின் கடுமையான தரக்கட்டுப்பாட்டை இலங்கை நிறுவனம் பூர்த்திசெய்து கவச உடைகளை வழங்கும் நிலையில் இலங்கைப் பாதுகாப்பு படைகள் தமது தேவைகளுக்கு வெளிநாட்டிலிருந்து கவச உடைகளை அதிக விலைக்கு இறக்குமதி செய்வதாக இணையத்தளச் செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ)

## முஸ்லிம் எம்.பிகள் தீர்மானம்

அரசுக்கும் புலிகளுக்குமிடையே இடம்பெறவுள்ள சமாதானப் பேச்சில் முஸ்லிம் சமூகத்தினரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தனியான குழுவும் கலந்துகொள்வதற்கு இடமளிக்கப்படவேண்டும் என்று வடக்கு - கிழக்கைச் சேர்ந்த முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர்.

வன்னி புனர்நிர்மாண அமைச்சர் நூர்தீன் மசூர் தலைமையில் நாடாளுமன்றக் கட்டடத்தில் ஆறாவது மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற கூட்டத்திலேயே இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.(ஒ)

## மகளிர் தின பட்டிமன்றம்

யாழ்ப்பாணம்,பெப்.24

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாண சமூக செயற்பாட்டு மையமும் மகளிர் அபிவிருத்தி நிலையமும் இணைந்து நடத்தும் பட்டிமன்றப் போட்டி இன்று திங்கட்கிழமை காலை 10மணிக்கு மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

'புலப்பெயர்வு பெண்களை மேம்படுத்தியுள்ளதா? இல்லையா? என்ற தலைப்பில் இந்தப் பட்டிமன்றத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி மற்றும் மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி பங்கேற்கின்றன. (ஒ-4)

## வவுனியாவில் 'சிரான்' அலுவலகம்

வவுனியா,பெப்.24

'சிரான்' அலுவலகம் வவுனியா செயலகத்தில் திறந்துவைக்கப்பட்டது. மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் இந்த அலுவலகம் ஊடாகவே மேற்கொள்ளப்படவுள்ளன. சிரான் பணிப்பாளர் ரெனியன் செல்வின் இந்த அலுவலகத்தைத் திறந்துவைத்தார்.ஒ-165)

## 775இலக்க மினிபஸ் சேவை ஆரம்பம்

யாழ்ப்பாணம்,பெப்.24

சுன்னாகத்தில் இருந்து சாவகச்சேரிக்கு புத்தூர், மட்டுவில் ஊடான 775பாதை இலக்க மினிபஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் ஆரம்பமான இப்போக்குவரத்துச் சேவை அளவெட்டி மினிபஸ் சங்கத்தால் நடத்தப்படுகிறது.

காலை 7.30மணிக்கு சுன்னாகத்தில் இருந்து புறப்படும் மினிபஸ் சாவகச்சேரியில் இருந்து முற்பகல் 11 மணிக்கு மீண்டும் சுன்னாகத்துக்கான சேவையை ஆரம்பிக்கும். தொடர்ந்து பிற்பகல் சேவையும் இடம்பெறுமென அளவெட்டி மினிபஸ் சங்கத் தலைவர் தெரிவித்தார். (எ-15)

## விளக்க வகுப்பு

யாழ்ப்பாணம்,பெப்.24

திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்.பிராந்திய அலுவலகத்தில் இன்று முற்பகல் 10 மணிக்கு உயர் தொழில் ஆங்கிலப் பாடநெறிக்கான விளக்க வகுப்பு இடம்பெறவுள்ளது. (ம-3)

## மூன்றாவது பிறந்தின வாழ்த்து

24-02-2003



கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த

செல்வன்

**விஜயவர்மன் லருசன் (LARUSAN)**

மூன்றாவது பிறந்தநாள்

*ஆண்டவன் அருளைப் பெற்றும்*
*அறிஞர்தம் ஆசி பெற்றும்*
*வேண்டிய கல்வி கற்றும்*
*மேன்மை செய்கலைகள் கற்றும்*
*நீண்டிடும் வாழ்வு பெற்றும்*
*நிலத்து ளோர் போற்றும் வண்ணம்*
*ஈண்டுநம் லருசன் வாழ்க*
*என அன்பால் வாழ்த்துகின்றோம்.*

**திருமதி ரேணுகா விஜயவர்மன்**
*(அம்மா).*

EXPO VIDEO COMPLEX
*No.7, K.K.S.Road,*
*Kondavil.*
*T.P.: 021 - 3100* (14872)

## 31 ஆம் நாள் நீங்கா நினைவில்

தோற்றம் 05 - 05 - 1931



மறைவு 25 - 01 - 2003

### அமரர் கனகரத்தினம் சிவானந்தன்

*(Retired - postman - Chankanai)*

எமது குடும்பத்தலைவரின் 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (24.02.2003) திங்கட்கிழமை எமது இல்லத்தில் இடம்பெறும். இந் நிகழ்வில கலந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

*சிவசக்தி,*
*பழைய தபாற்கந்தோர் வீதி,* மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
*சங்கானை கிழக்கு.* (C/29630) பேரப்பிள்ளைகள், சகோதரி, மைத்துனர்கள்.

# இது அன்டர்சனின்...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

லாந்து பக்கம் இருந்தது. நாணயச் சுழற்சியில் அவர்களே வென்றார்கள். முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார்கள். பாகிஸ்தான் தன் முழுப் படை பலத்தையும் களமிறக்கியது. முதலில் நடந்த இரு ஆட்டங்களில் ஆடாத சயீட் அன்வரும் சக்லைன் முஷ்டாக்கும் இம்முறை களமிறக்கப்பட்டார்கள். அவர்களுடன் இளம் அதிரடி ஆட்டக்காரர் சயிட் அப்ரிடியும், மற்றப்படி வழைமையான - பலம் வாய்ந்த - ஆட்டக்காரர்கள். இங்கிலாந்தும் விடவில்லை. இது முக்கியமான ஆட்டம் என்பதால் அதுவும் தன் முழு பலத்தையும் களத்துக்குக் கொண்டுவந்தது. காயம் காரணமாக ஆடுவது சந்தேகம் என்று தெரிவிக்கப்பட்ட தலைவர் நாஸர் ஹுசைன் அழைக்கப்பட்டார். கட்டாயம் இந்த ஆட்டத்தில் பங்குபற்றும் படி கேட்கப்பட்டார். பாகிஸ்தான் வெல்வதற்கு அவரது தலைமை அவசியம் என்று இங்கிலாந்து கிரிக்கெட் சபை நினைத்தது. மற்றொரு சிறந்த ஆட்டக்காரரான கிரேக் வைற்றும் களமிறக்கப்பட்டார்.

இரு அணிகளும் முழுப் பலத்துடன் மோதலுக்குத் தயார். இங்கிலாந்தின் ட்ரஸ்கோதிக் - நிக் நைற் ஜோடி. போன வேகத்தில் ட்ரஸ்கோதிக்கை 'பெவிலியனு'க்குத் திருப்பினார் வசீம் அக்ரம். 11 பந்துகளில் அவர் எதிர்கொண்டது ஒரே யொரு ஓட்டம் மட்டுமே. 7 ஓட்டங்களுக்கு முதல் விக்கெட் வீழ்ச்சி. ஆரம்பம் அவ்வளவு நன்றாக இல்லை. வந்தவர் மைக்கல் வோகன். நைற்றுடன் இணைந்து கொண்டார். இருவரையும இணைய விட்டால் சிரமம் என்று கருதினார் வக்கார். விரைவில் நைற்றை அவர் வெளியேற்றினார். அதற்கிடையில் அக்தரின் பந்தில் ஒரு சிக்ஸ் அடித்திருந்தார் நைற். 28 பந்துகளில் அவர் பெற்றது 15 ஓட்டங்கள். இங்கிலாந்து துடுப்பாளர்களுக்கு பாக். பந்துவீச்சு சவாலானது. வந்தவர் தலைவர் ஹுசைன். அவரையும் நிற்கவிடாமல் துரத்தியடித்தார் வக்கார். 9 பந்துகளில் ஒரு பௌண்டரியுடன் 8 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் அவர் வெளியேறினார். 59 ஓட்டங்களுக்குள் 3 விக்கெட்டுக்களை இழந்து திணற ஆரம்பித்திருந்தது இங்கிலாந்து.

நம்பிக்கையுடன் அழைக்கப்பட்ட ஹுசைனும் சோடைபோனார். இந்த ஆட்டத்தில் வென்றாக வேண்டும் இல்லையேல் 'சுப்பர் சிக்ஸ்' வெறும் கனவாகிவிடும். எதையாவது செய்தாக வேண்டும் இங்கிலாந்து. பெரும் பொறுப்பை தலையில் சுமந்து கொண்டு களமிறங்கினார் முன்னாள் தலைவர் ஸ்ருவார்ட். சும்மா சொல்லக்கூடாது தன் பொறுப்புணர்ந்து நன்றாகவே ஆடினார் அவர். வோகன் - ஸ்ருவார்ட் ஜோடி 4ஆவது விக்கெட்டுக்காக 51 ஓட்டங்களைப் பெற்றது. வோகன் அழகாக ஆடி அரைச் சதத்தைத் தாண்டினார். அணி 110 ஓட்டங்களை எட்டியபோது, நன்றாக ஆடிக்கொண்டிருந்த வோகன் அக்தரின் பந்துவீச்சில் யுனுஸ்கானிடம் பிடி கொடுத்து வெளியேறினார். 64 பந்துகளில் 7 பௌண்டரிகளுடன் அவர் குவித்தது 52 ஓட்டங்கள். அவருக்காக உள்ளே வந்தவர் கோலிங்வூட். அற்புதமாக ஆடினார். இறுதி வரை ஆட்டமிழக்காமல் இருந்தார். ஆனால், மறுபுறத்தில் நன்றாக ஆடிக்கொண்டிருந்த ஸ்ருவர்ட், வோகன் ஆட்டமிழந்த சிறிது நேரத்திலேயே ஆட்டமிழந்தார். அப்ரிடியின் ஒரு சாதாரண பந்தை மோசமாக ஆடினார் அவர். தண்டனையாக வலது இலக்கை பந்து பதம்பார்த்துக் கொண்டது. 118 ஓட்டங்களுக்குள் 5 விக்கெட்டுக்களை இழந்து என்ன செய்வது என்று விழித்துக் கொண்டிருந்தது இங்கிலாந்து. கௌரவமான ஒரு இலக்கையாவது அதனால், எட்ட முடியுமா என்பதே அப்போதைய கேள்வி. பின்னால் வந்த பிளின் டோவ் (26), வைற் (15), கில்ஸ் (17) என்று அவரவர்கள் கொஞ்சம் கொஞ்சம் என்று ஓட்டங்களைப் பெற அணி 8 விக்கெட்டுக்களை இழந்து 246 என்ற ஒரு கௌரவமான இலக்குக்கு நகர்ந்தது. கோலிங்வூட் மட்டும் அத்தனை அழுத்தத்துக்கு மத்தியிலும் அற்புதமாக ஆடி 66 ஓட்டங்களைக் குவித்தார். 77 பந்துகளில் அவர் 4 பௌண்டரிகளையும் விளாசினார். பாக் வீரர் அக்ரம் இந்த ஆட்டத்தில் தன் 500 ஆவது விக்கெட்டை வீழ்த்துவார் என்ற எதிர்பார்ப்பிருந்தது. ஆனால், விதி செய்த சதியால் அது கைகூடாமல் போனது. அவர் இரு விக்கெட்டுக்களை வீழ்த்தினார். எனினும், இரண்டாவதாக வீழ்த்தப்பட்ட விக்கெட் முறைகேடாக வீழ்த்தப்பட்டதாக நடுவர் அறிவித்தார். எல்லைக்கு வெளியே கால் வைத்து அக்ரம் அந்தப் பந்தை வீசினார். அது 'நோ போல்' ஆனது. அத்துடன் அகரத்தின் 500 விக்கெட் கனவு நிறைவேறாமலேயே போனது. எனினும், இனிவரும் ஆட்டங்களில் அவர் அதனை நிச்சயம் சாதித்துக் கொள்வார். 10 ஓவர்கள் பந்து வீசிய அக்ரம ஒரு விக்கெட்டை மட்டும் வீழ்த்தினார். சக்லைன், வக்கார், அப்ரிடி ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

களமிறங்கியது பாகிஸ்தான். இங்கிலாந்தின் இலக்கு அதற்கு ஒன்றும் பெரியது அல்ல. முயன்றால் முடிந்து விடக்கூடிய ஒன்றுதான். பாகிஸ்தானியர்கள் முயல்வார்கள் என்றே எதிர்பார்ப்பிருந்தது. அன்டர்ஸன் என்பவரிடம் இருந்து அற்புதமான பந்துகள் பறக்கும்வரை பாகிஸ்தானும் அப்படித்தான் நினைத்திருந்தது. பாகிஸ்தானின் அனுபவம் மிக்க ஆட்டக்காரர் அன்வர் - இளம் அதிரடி நாயகன் அப்ரிடி ஜோடி களமிறங்கியது. அவரிடி ஆரம்பத்திலேயே தன் அதிரடியைக் காட்டினார். இறங்கியதும் ஒரு சிக்ஸ் அன்று முழுவதும் அவர் அடித்ததும் அவ்வளவே. அன்ட்ரூ கட்டிக் அவரை உடனடியாகவே மூட்டைகட்டி வெளியேற்றினார். 6 பந்துகளில் அவர் பெற்றது 6 ஓட்டங்கள். 13 ஓட்டங்களுக்குள் முதல் விக்கெட் சரிவு. இங்கிலாந்து போலவே பாகிஸ்தானுக்கும் ஆரம்பம் நன்றாக இல்லை. ஒரு புறத்தில் அன்டர்ஸன் அற்புதமாகப் பந்து வீசிக் கொண்டிருந்தார். வந்தவர் அனுபவம் மிக்க அபாயகரமான ஆட்டக்காரர் இன்ஸமாம் உல் ஹக். எதிரே அன்டர்ஸன் முதலாவது பந்து. இன்ஸமாம் அந்தப் பந்தை நிக் நைற்றிடம் தூக்கிக் கொடுத்துவிட்டு வந்ததைவிட வேகமாக 'பெவிலியன்' திரும்பினார். அடுத்து வந்தவர் யுகானா. நின்று நிலையெடுத்துத் திரும்பிப் பார்ப்பதற்குள் விக்கெட்டைக் கொண்டு போயிருந்தது அன்டர்ஸனின் அற்புதமான மற்றொரு பந்து. வெறும் 17 ஓட்டங்களுக்குள் 3 விக்கெட்டுக்களை இழந்து விழிபிதுங்கி நின்றது பாகிஸ்தான்.

அன்டர்ஸன்! ஒருநாள் போட்டிகளில் புதியவர். ஆனால், பாகிஸ்தானுக்கு எதிராக அவர் வீசியவைகள் மிக அற்புதமான பந்துகள். காரணம் தப்பினால் மரணம் என்ற நிலையில் பாகிஸ்தானியர்களைத் திணற வைத்த பந்துகள். அவரது பந்துகளைத் தொடுவதா விடுவதா என்று பாகிஸ்தானியர்கள் கதிகலங்கி நின்றனர். அவரது பந்துகளுக்கு பாகிஸ்தானியர்கள் மிரண்டதைக் கண்ட ஹுசைன் அவரைத் தொடர்ந்து பயன்படுத்தினார். அணி மொத்தம் 25 ஓவர்களை வீசி முடித்தபோது, அன்டர்ஸன தன் 10 ஓவர்களையும் வீசி முடித்திருந்தார்.

யுகானாவுக்குப் பதிலாக வந்தவர் யுனுஸ் கான். அவரும் மிக விரைவில் வெளியேறினார். பாகிஸ்தானின் எந்தவோர் ஆட்டக்காரரையும் நின்று நிதானித்து ஆடுவதற்கு இங்கிலாந்துப் பந்துவீச்சாளர்கள் இடங்கொடுக்கவில்லை. வந்த வேகத்திலேயே பாக். வீரர்களை அவர்கள் 'பெவிலியனு'க்கு திருப்பி விரட்டிக்கொண்டிருந்தனர். 59 இற்கு 6 விக்கெட்டுக்கள், 71இற்கு 7 விக்கெட்டுக்கள். 78இற்கு 8 விக்கெட்டுக்கள், 80இற்கு 9 விக்கெட்டுகள் என்று ஓட்டங்களுக்குப் பதிலாக விரைவாக பாகிஸ்தான் விக்கெட்டுக்கள் சரிந்து கொண்டிருந்தன.

பாகிஸ்தானியர்கள் கௌரவமாக 100 ஓட்டங்களையாவது தாண்டுவார்களா என்ற பரிதாப நிலை. இப்போது அவர்களுக்குத் தேவை யாராவது ஓர் ஆபத்தாந்தவன். வந்தவர் ராவல்பிண்டி எக்ஸ்பிரஸ். எனக்கு வேகம் பந்துவீச்சில் மட்டுமில்லை மட்டைவீச்சிலும்தான் என்று காட்டினார். காட்டுத்தனமாக மட்டையைச் சுழற்றினார் அவர். மட்டை சுழன்ற திசையிலெல்லாம் பந்து எல்லைக் கோட்டுக்கு மேலாலும் கீழாலும் அதனைக் கடந்துகொண்டிருந்தது. வெறும் 16 பந்துகளில் மட்டும் அவர் விளாசியது 43 ஓட்டங்களை. 5 பௌண்டரிகள், 3 சிக்ஸர்கள் அதில் அடக்கம். இரண்டே ஓவர்களில் 80இல இருந்து 134இற்கு எகிறியது ஓட்ட எண்ணிக்கை. இங்கிலாந்துப் பந்து வீச்சாளர்கள் எல்லோருக்கும் சிம்ம சொப்பனமாக ஆடிக்கொண்டிருந்தார் அக்தர். பார்த்தார் பிளின்ட் டோவ். இவரை விட்டால் ஆபத்து என்று எண்ணினார். வேகமாக, நேர்த்தியாக, நேராக ஒரு 'ஜோக்கர்' அக்தாருக்கு. நாகாஸ்திரம் மாதிரி அவர் விட்டது ஒன்றுதான். அக்தர் அதனையும் விளாசத்தான் முயன்றார். 3 விக்கெட்டுக்களையும் தகர்த்தெறிந்தது பந்து. வெறும் 31 ஓவர்களில் 134 ஓட்டங்களுக்குள் சுருண்டு கொண்டது பாகிஸ்தான்.

இங்கிலாந்துக்கு எதிர்பாராத இலகுவான வெற்றி. அதற்கு வழி சமைத்தது அன்டர்ஸனின் அற்புதமான மாயப் பந்துவீச்சு. பிரகாசமான எதிர்காலம் இருக்கின்றது அந்த இளைஞனுக்கு. 10 ஓவர்களில் வெறும் 29 ஓட்டங்களுக்கு அவர் வீழ்த்தியது 4 விக்கெட்டுக்கள். அனைத்தும் பாகிஸ்தானின் முன்வரிசை மிகமுக்கியமான விக்கெட்டுக்கள். அவற்றில் 2 'மெய்டின்'களும் அடங்கும். அவரே அன்றைய ஆட்டநாயகன். முக்கியமான தருணங்களில் பாகிஸ்தானியர்கள் இப்படி - போராடாமலே - கோட்டை விடுவது ஏன் என்பது அவர்களுக்கு மட்டுமே புரிந்த ரகசியம்.

**- கனிமொழி.**

## மே.இந்திய...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

கெட்டுக்களையும் கொலின்ஸ் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 32 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் அணியின ஆரம்பத்துடுப்பாட்ட வீரரான கைலை இழந்தது. இருந்தபோதும் பின் வந்த நட்சத்திர ஆட்டக்காரர் லாரா, கிண்ட்ஸ் உடன் இணைந்து ஓட்டங்களைக் குவித்தார்.

நட்சத்திர ஆட்டக்காரர் பிரையன் லாரா 40 பந்துகளைச் சந்தித்து 8 பௌண்டரிகள், 6 சிக்ஸர்கள் உட்பட 73 ஓட்டங்களையும் கிண்ட்ஸ் 31 பந்துகளில் 10 பௌண்டரிகள், 3 சிக்ஸர் உட்பட 64 ஓட்டங்களையும், சர்வான் ஆட்டமிழக்காமல் 32 பந்துகளைச் சந்தித்து 9 பௌண்டரிகள் உட்பட 44 ஓட்டங்களையும் விளாசினர். 7 விக்கெட்டுகளால் மேற்கிந்திய அணி வெற்றிபெற்றது.

கனடா அணிசார்பாக ஜோசெப், டேவின்சன் மற்றும் ஒெக்ருட் ஆகியோர் தலா ஒருவிக்கெட்டை கைப்பற்றினர்.

73பந்துகளில் 111 ஓட்டங்களைப பெற்ற டேவிசன் ஆட்டநாயகனாக தெரிவுசெய்யப்பட்டார். (ம-5)


## மகா சிவராத்திரி விழா

அண்ணாவிமார் தாமோதரம்பிள்ளையின் உரிமையாளர்களால் வருடாவருடம் சிவராத்திரி தினத்தில் தென்புலோலி புற்றளை 'சித்தி' விநாயகர் ஆலயத்தில் நடத்தப்பட்டுவரும் நாடகங்களில் **ஸ்ரீவள்ளி, மயான காண்டம்** ஆகிய நாடகங்கள் நடைபெறவுள்ளன. இதற்கு எவ்வித பணம் வசூலிப்பதில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

புலோலி வடக்கு,
புலோலி. (14892)

கார்த்திகேசு அமரசிங்கம்
விழா உரிமையாளர்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



J/77 மருதடி - கிராம உத்தியோகத்தர்
திருவாளர்
**சிதம்பரப்பிள்ளை மகாலிங்கம்**
அவர்கள் கிராம சேவையாளர் தரம் I இற்கு பதவி உயர்வு பெற்றமையையிட்டு, மகிழ்வுடன் அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

இளங்கதிர் சனசமூக நிலையத்தினரும்
J/77 கிராம வாழ் மக்களும்.

நக்காவீதி,
யாழ்ப்பாணம். (14899)


# வேகப்பந்துவீச்சு...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால், வேகக் கணிப்புக் கருவியில் தவறு ஏற்பட்டுள்ளது எனக் கூறிய ஐ.சி.சி., இச்சாதனையை ஏற்க மறுத்துவிட்டது.

ஆனால், நேற்றுமுன்தினம் தனது இரண்டாவது ஓவரின் இறுதிப் பந்து வீச்சை மணித்தியாலத்திற்கு 161.3 மைல் வேகத்தில் அக்தார் வீசினார்.

இதன்மூலம் மணித்தியாலத்திற்கு 100 மைல் (161.04 கிலோமீற்றர்) வேகத்தில் பந்து வீசிய முதலாவது வீரர் எனும் பெருமையும் அக்தார் பெற்றுள்ளார்.

அக்தாரின் இந்தப் பந்து வீச்சை இங்கிலாந்து வீரர் நிக் நைட் எதிர்கொண்டார். அந்த ஓவரில் ஓட்டம் எதுவும் பெறப்படவில்லை.

அக்தாரிச் இச் சாதனை உத்தியோகபூர்வமாக ஏற்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வேகப்பந்து வீச்சில் அக்தாரின் பிரதானபோட்டியாளரான பிரெட் லீ 157.6 கிலோமீற்றர் வேகத்தில் பந்து வீசியுள்ளார்.

உலகக் கிண்ணப் போட்டிகளில் பந்துவீச்சு வேகத்தைக் கணிப்பதற்கு பீ.எம்.ஜி. எனும் ஆஸ்திரேலிய நிறுவனம் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-5)

# மீண்டும் அணிக்குள்...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

பந்து வீச்சாளர் அலன் டொனால்ட்.

இந்த உலகக் கிண்ணப் போட்டியில் டொனால்டின் பெறுபேறு மிக மோசமாக அமைந்திருந்தது. மேற்கிந்தியா, நியூஸிலாந்து ஆகிய அணிகளுக்கு எதிரான ஆட்டங்களில் அவரது பந்து வீச்சு மிக மோசமாக அமைந்திருந்தது.

அவரது பந்து வீச்சு தென்னாபிரிக்காவில் கடும் விமர்சனத்துக்கு உள்ளாகி இருந்தது. இதனால் 36 வயதான டொனால்ட் நேற்றுமுன்தினம் பங்களாதேஷுடன் நடந்த ஆட்டத்தில் இருந்து நீக்கப்பட்டார். அவருக்குப் பதிலாக சகலதுறை ஆட்டக்காரர் அன்ட்ரூ ஹோல் அணியில் சேர்க்கப்பட்டார்.

பங்களாதேஷ் அணியுடனான ஆட்டம் நடந்தது டொனால்டின் சொந்த ஊரில். அவர் அதில் ஆடி இருந்தால், தனது ஊரில் ஆடிய கடைசி ஒரு நாள் போட்டியாக அது அமைந்திருக்கும். எனினும் அணியின வெற்றி கருதி அவரை சேர்த்துக் கொள்ளவில்லை என்று தேர்வாளர்கள் கூறியிருந்தனர்.

அது குறித்துக் கருத்துத் தெரிவித்த போதே, தான் மீண்டும் உலகக் கிண்ண அணியில் இடம்பெறுவேன் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார். "நான் எப்படிப் பந்து வீச வேண்டும் என்று இந்த வாரத்தில் எனக்கு நிறையப் பேர் கருத்துச் சொல்லி விட்டார்கள். என்னுடைய வலைப்பயிற்சியின் போதும் பலர் எனக்கு ஆலோசனை கூறியுள்ளனர்" - என்றார் டொனால்ட்.

"என்னுடைய பயிற்சிகளை நான் தொடர்ந்து கொண்டிருக்கின்றேன். மீண்டும் எனக்கு ஒரு சந்தர்ப்பம் வழங்கப்படும் என்றேநான் கருதுகின்றேன். என் அணி முதலாவதாக வர வேண்டும். அதுவே இன்று தேவை. அதற்கு அனைவரும் கனதியாக உழைக்க வேண்டும்" - என்றும் டொனால்ட் மேலும் தெரிவித்தார்.(ம)

## விரைவாக...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றுள்ளது. 30 பந்துகளில் அவர் தனது அரைச் சதத்தை பூர்த்திசெய்தார். இதன்மூலம் இந்தத் தொடரில் மிக விரைவாக அரைச் சதம்குவித்த தென்னாபிரிக்கா கேர்ஸ்டனின், மேற்கிந்திய வீரர் ரிக்கார்டோ பவல் ஆகியோரின் சாதனையை சமப்படுத்தினார்.

1983 இல் இந்திய அணித் தலைவர் கபில்தேவ் 72 பந்துகளில் குவித்த சதமே உலகக்கிண்ண வரலாற்றில் இதுவரை வேகமாக குவிக்கப்பட்ட சதமாக இருந்தது. அதனை டேவிஸன் முறியடித்துள்ளார்.

நேற்றைய ஆட்டத்தில் டேவிஸன மொத்தமாக 76 பந்துகளில் 111 ஓட்டங்களைக் குவித்தார். அற்புதமான பிடி ஒன்றின் மூலம் டிராகஸ் அவரை ஆட்டமிழக்கச் செய்தார்.

நான்கு நாள்களுக்கு முன்னரே இலங்கையுடனான ஆட்டத்தில் எந்த ஒரு சமயத்திலும் ஆகக் குறைந்த ஓட்டங்களுடன் ஆட்டமிழந்த அணி என்ற சாதனையை கனடா ஏற்படுத்தியிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

நேற்றைய ஆட்டத்தில் கனேடிய ஆரம்ப துடுப்பாளர் இருவரும் 96 ஓட்டங்களைச் குவித்தனர். இதுவே கனடா அணியின் ஆரம்ப துடுப்பாளர் இணைப்பாட்ட சாதனையாகும்.

## தொடர்ந்து...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

அப்போது மேற்கிந்தியத் தீவுகள் அணியில் விவியன் ரிச்சட்ஸ், கோர்டன் கிரீனிட்ஜ், டெஸ்மான்ட் ஹேய்ன்ஸ், மால்கம் மார்ஷல், ஜோயல் கார்னர், மைக்கல் ஹோல்டிங் போன்றவர்கள் இடம்பெற்றிருந்தனர். 1990 மேயிலும் 2001 பெப்ரவரியிலும் ஆஸ்திரேலியா 11 ஆவது ஆட்டத்தில் தோல்வியுற்றது.

எனினும், தொடர்ந்து தோல்வியே பெறாமல் 2000 ஜனவரி முதல் மார்ச் வரை 14 ஆட்டங்களில் விளையாடிய பெருமைய ஆஸ்திரேலியா பெற்றுள்ளது. ஆனால், அக்காலகட்டத்தில் வெலிங்டனில் நியூஸிலாந்துக்கு எதிரான ஓர் ஆட்டம் மழை காரணமாகப் பாதிக்கப்பட்டது.

தற்போது வலுவான நிலையில் அணி உள்ளதால் தொடர்ந்து 12 வெற்றிகள் என்ற சாதனை புரிவோம் என ஆஸி. அணியின் தொடக்க ஆட்டக்காரர் மத்தியூ ஹைடன் நம்பிக்கை தெரிவித்தார்.


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
14
11
1913



மறைவு
25
01
2003

அமரர் C.M.**பொன்னையா இராமநாதன்**
*(Retd. Shroff. Mercantile Bank)*

நிகழுமொரு சித்திரபானு வருடத்தை இருபத்தைந்தில்
நிகழுமபர அட்டமியாம் திதியதனில் - புகழுடைச்
சீராளனாம், இராமநாதன் மண்ணீத்துச் சிவனார்
பேரருளி லொன்றினான் காண்.

இன்று (24.02.2003) திங்கட்கிழமை முற்பகல் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும், மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கல்லூரி ஒழுங்கை,
மானிப்பாய். (14876)

- குடும்பத்தினர்.

# தேசிய பெருவிளையாட்டு விழா: யாழ்.கிரிக்கெட் அணி தோல்வி

கிளிநொச்சி,பெப்.24

கிளிநொச்சியில் நடைபெற்றுவரும் 2ஆவது தேசிய பெருவிளையாட்டு விழாவின் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் நேற்று நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் யாழ். மாவட்ட அணி மட்டக்களப்பு அணியிடம் 34 ஓட்டங்களால் தோற்றது.

கிளிநொச்சி மத்திய விளையாட்டரங்கில் நடைபெற்ற இவ்வாட்டத்தில் முதலில் ஆடிய மட்டக்களப்பு அணி 15 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 83 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ். மாவட்ட அணி 11.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 49 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற முல்லைத்தீவு - அம்பாறை மாவட்ட அணிகளுக்கிடையிலான ஆட்டத்தில் அம்பாறை மாவட்ட அணி 5 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய முல்லைத்தீவு அணி 15 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட் இழப்பிற்கு 62 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய அம்பாறை மாவட்ட அணி 13.5 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

நேற்றுக் காலை 8.30 மணிக்கு தேசியக் கொடியேற்றலுடன் காலை நிகழ்வுகள் ஆரம்பமாகின.

தமிழீழ விளையாட்டுத்துறை இணைப்பாளர் இன்பன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், தமிழீழத் தேசியக்கொடியினை கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் முரளி ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து மாவீரர் கேணல் சங்கரின் திருவுருவப் படத்திற்கு தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பாவும் -

மாவீரர் லெப்.கேணல் விக்ரரின் திருவுருவப் படத்திற்கு மட்டக்களப்பு மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் நிலாவும், மாவீரர் அல்பேட்டின் உருவப் படத்திற்கு யாழ். மாவட்ட விளையாட்டுப் பொறுப்பாளர் மாதுளனும், மாவீரர் மேஜர் சோதியாவின் திருவுருவப் படத்திற்கு அம்பாறை மாவட்ட விளையாட்டதிகாரி அல்ஹாஜ் எம்.அப்துல் நவ்பாவும் ஈகச்சுடர் ஏற்றி மலர்மாலை அணிவித்தனர்.

விளையாட்டு விழாவின் ஒரு பகுதியாக நேற்றுப் பிற்பகல் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் மன்னார், திருமலை அணிகள் வெற்றிபெற்று இறுதி ஆட்டத்திற்குத் தெரிவுசெய்யப்பட்டன.

முதலில் நடைபெற்ற மன்னார் - மட்டக்களப்பு அணிகளுக்கிடையிலான ஆட்டத்தில் மன்னார் மாவட்ட அணி 2:0 என்ற கோல் கணக்கில் மட்டக்களப்பு அணியைத் தோற்கடித்தது. இவ்வணி சார்பாக ஜெ.டி.ஆர்.எல். திகராடோ, கே.முஷாரப் ஆகியோர் தலா ஒரு கோலைப் பெற்றனர்.

அடுத்து நடைபெற்ற திருமலை -வவுனியா அணிகளுக்கிடையிலான ஆட்டத்தில் திருமலை அணி 3:0 என்ற கோல் அடிப்படையில் வவுனியா அணியை வென்றது. இவ்வணி சார்பாக டி.சி.வசந்தன் 2 கோல்களையும், ஓ.என்.லலித் ஒரு கோலையும் அடித்தனர்.

மின்னொளியில் நடைபெற்ற கரபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் விறுவிறுப்பாக நடந்த அரையிறுதி ஆட்டத்தில் மன்னார் மாவட்ட அணி கிளிநொச்சி மாவட்ட அணியை 3:1 என்ற செற் கணக்கில் தோற்கடித்து இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் யாழ். மாவட்ட அணி திருமலை அணியை 44:19 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றது.

(ம-5-ரி)

# பழையமாணவர் சங்கங்களின் இழுபறிக்கு இணக்கத்தீர்வு

யாழ்.செங்குந்த இந்துக் கல்லூரியில் நீண்டகாலமாக இருந்துவந்த பழையமாணவர் சங்கங்களின் இழுபறிக்கு ஓர் இணக்கத்தீர்வு எட்டப்பட்டிருக்கிறது.

இதுவரை காலமும் இரண்டு பழைய மாணவர் சங்கங்கள் பாடசாலையின் பெயரில் இயங்கி வந்தன. இந்த இரண்டு சங்கங்களுக்கிடையேயும் இருந்துவந்த போட்டி, இழுபறிகள் காரணமாக பாடசாலை வளர்ச்சிப் பணிகளை முன்னெடுப்பதில் தடைகள் ஏற்பட்டு வந்தன. இந்த இரு சங்கங்களின் நிர்வாகங்களுக்கிடையே ஓர் இணக்கத்தை ஏற்படுத்த நலன்விரும்பிகள் சிலர் எடுத்த முயற்சிகள் பலனளிக்காமல் போயின. நேற்று கல்லூரி அதிபர் தலைமையில் கூட்டப்பட்ட பொதுக் கூட்டமொன்றில் முரண்பட்ட இரு சங்கங்களின் நிர்வாகிகளும் பழைய மாணவர்களும் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில் இருதரப்பினர்க்குமிடையில் கடுமையான வாக்குவாதங்கள் இடம்பெற்றபோதும் இறுதியில் ஓர் இணக்கநிலை ஏற்பட்டது.பழைய மாணவர் சங்கத்துக்கென புதிதாக யாப்பு ஒன்றினைத் தயாரித்து அதனடிப்படையில் பொதுக்கூட்டத்தைக் கூட்டி புதிதாக பழைய மாணவர்சங்கம் ஒன்றை ஸ்தாபிப்பது என முடிவுசெய்யப்பட்டது. புதிய யாப்பினைத் தயாரிக்க10 பேர்கொண்ட குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது. இக்குழு யாப்பைத் தயாரித்து முடித்ததும் மார்ச் மாதம் 18 ஆம் திகதி பொதுக் கூட்டம் கூட்டப்படும் என அறிவிக்கப்பட்டது.

"ஒரு பாடசாலைக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பழையமாணவர் சங்கங்கள் இயங்கமுடியாது என வரையறை எதுவும் கிடையாது. எனினும் பாடசாலை ஒன்றின் வளர்ச்சிக்கு பழைய மாணவர்கள் அனைவரையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வலுவான ஒரு சங்கம் இயங்குவதே சிறந்தது.

"செங்குந்த இந்துக்கல்லூரி போன்ற வளர்ச்சியடையவேண்டிய நிலையில் இருக்கும் பாடசாலைகளுக்கு பாடசாலை நிர்வாகத்துடன் ஒத்து இயங்கக்கூடிய பழைய மாணவர் சங்கம் அவசியம்" - என்று கல்வி அதிகாரி ஒருவர் கருத்துத்தெரிவித்தார்.(ஜ-ரி)

# கடவத்தையில் இன்று நவீன பொலீஸ் நிலையம் திறப்பு

கொழும்பு,பெப்.24

பொலீஸ் நிலையங்களை சகல வசதிகளுடன் தரமுயர்த்தும் உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கவின் திட்டத்தின் கீழ் கடவத்தை பொலஸ நிலையம் இன்று தரமுயர்த்தப்படுகிறது.

ஏற்கனவே இந்தத்திட்டத்தின் கீழ பம்பலப்பிட்டி, மஹரகம ஆகிய பொலீஸ் நிலையங்கள் நவீன மயப்படுத்தப்பட்டு தரமுயர்த்தப்பட்டன.

பல பொலீஸ் நிலையங்களுக்குப் புகார்களைத் தெரிவிக்கவரும் பொது மக்களுக்கு அமர்வதற்கான கதிரைகள்கூட ஒழுங்காக இல்லை என்பதை கண்டறிந்த அமைச்சர், பொலீஸ் நிலையங்களின் வசதிகளை அதிகரிப்பது பற்றி பொலீஸ்மா அதிபர் ரி.ஈ. ஆனந்தராஜாவுடன் கலந்தாலோசித்திருந்தார்.

இன்று பிற்பகல் மூன்று மணிக்கு சகல வசதிகளுடன் கூடிய கடவத்தை பொலீஸ் நிலையம் அமைச்சரினால் திறந்து வைக்கப்படும். (ஐ)


Nandi Brand

Rupika Tile Factory

குறைந்த விலையில் தரமான ஓடுகள், முகட்டோடுகள், கற்கள் பெற்றுக்கொள்ளலாம்.

❖ Udangawa Kachchikade Tel : 031-77346

❖ ARALIYA STORES 11, Negombo Road, Dankotuwa. Tel: 031-58174

இல 6, இந்து மகளிர் ஒழுங்கை, கந்தர்மடம், யாழ்ப்பாணம். Tel: 071 - 346622

Best Quality Roofing Tiles

(14898)


## அறிவித்தல்

**கிராம அலுவலர் தரம் I பதவி உயர்வு தொடர்பாக**

**அண்மையில் வழங்கப்பட்ட மேற்படி பதவி உயர்வு தொடர்பாக 30.10.1986ஆம் திகதிக்கு முன் நேரடியாகக் கிராம அலுவலராக, நியமனம் பெற்று தரம் I பதவி உயர்வு கிடைக்கப் பெறாதவர்கள் 25.02.2003ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு நல்லூர் திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறும் ஆலோசனைக் கூட்டத்திற்கு தவறாது சமுகம் கொடுக்கவும்.**

*பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.* (14895)

செயலாளர், யாழ்.மாவட்ட கிராம அலுவலர் நலன்புரிச் சங்கம்.

## விசேட சங்காபிஷேகம்



கொடிகாமம், பெரிய நாவலடி அருள்மிகு ஸ்ரீசிவ காமசுந்தரி அம்பாளுக்கு விசேட சங்காபிஷேகம் இன்று (24.02.2003) திங்கட்கிழமை காலை 8மணிமுதல் ஆரம்பமாகி நடைபெறும். அபிஷேக ஆராதனை களைத் தொடர்ந்து பி.ப. 3.00 மணிக்கு பூசை நடைபெற்று, அம்பாள் திருவீதியுலா வந்து பக்தர்களுக்கு அருள் பாலிக்க உள்ளார். பக்தர்கள் யாவரும் கலந்துகொண்டு அம்பாளின் அருள் பெற்றுய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தொடர்ந்து மாகேஸ்வர பூசையும் நடைபெறும்.

பெரிய நாவலடி, கொடிகாமம். (14894)

- மேற்படி ஆலய தர்மகர்த்தா.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



சுன்னாகம் கிழக்கு J/197 கிராம உத்தியோகத்தர்

**திரு.வ.மா.இராமலிங்கம்**

அவர்கள் கிராம உத்தியோகஸ்தர் தரம் I இற்குப் பதவியுயர்வு பெற்றமையை இட்டு நாம அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

சி.இராஜகுலசிங்கம் குடும்பம் *(சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம்)*

V.S.சிவரட்ணம் குடும்பம் (இலங்கை வங்கி விலை மதிப்பீட்டாளர்) *(2A, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்)*

(14890)


இதோ வெளிவருகின்றது!

இலக்கியம், உளவியல், ஆத்மிகம் என பல முகம் கொண்ட

மானச தீபம்

எனும் மாதாந்த சஞ்சிகை

உங்கள் உருவாக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

தொடர்பு முகவரி:- 'மானச தீபம்' இல.7 சென் பேரிஸ் 2ஆம் ஒழுங்கை, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

ராஜா யாழ்ப்பாணம்

6 ஆவது வாரமாக விஜய், ஸ்நேகா, மணிவண்ணன், வடிவேல் நடித்த

வசீகரா

2.30, 6.30 மட்டும். 24 முதல் 26 வரை

SPIDER MAN

காலை 10.30, இரவு 9.30 மட்டும்.

நாகம்ஸ் சுன்னாகம்.

ஷாம், மீராஜஸ்மின், ரகுவரன், P. வாசு நடித்த

பாலா

காட்சிகள் தினசரி: 11.00, 3.00, 7.00 (பு.நே.)

(C-14658)

நிரஞ்சனாஸ் சங்கானை

சரத்குமார் (இருவேடம்), மீனா, குஷ்பு நடித்த

நாட்டாமை

காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (புதியநேரம்)

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு (8.45) (புதிய நே.)

M.I.2

(C-26649)

லக்சுமி இணுவில்

பிரசாந், சிம்ரன் நடித்த

ஜோடி

(சிலதினங்கள் மட்டும்)

காட்சிநேரம்: 11.00, 3.00,7.00

மார்ச் 1 முதல்

பகவதி


# மரண அறிவித்தல்கள்

## சபாபதிப்பிள்ளை தருமபாலு

*(இளைப்பாறிய கிளை முகாமையாளர், வேலணை ப.நோ.கூ.சங்கம்)*

வேலணை கிழக்கு, 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 162, நாவலர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சபாபதிப்பிள்ளை தருமபாலு சனிக்கிழமை (22.02.2003) இரவு காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி சபாபதிப்பிள்ளை தம்பதியினரின் மகனும் காலஞ்சென்ற குணலட்சுமியின் அன்புக் கணவரும் திரு. திருமதி பொன்னையா சிவக்கொழுந்து - கனகம்மாவின் அன்பு மருமகனும் இரத்தினசிங்கத்தின் (இளைப்பாறிய இ.போ.ச. பரிசோதகர், வே.ப.கூ.சங்கக் கிளைமுகாமையாளர்) அன்புத் தந்தையாரும் இலட்சுமியின் (இளைப்பாறிய அதிபர், நெசவுப பயிற்சிப் பாடசாலை) அன்பு மாமனும் Dr.இரத்தினலஜி, ரமணன் (B.B.A.), ரஜீபன் (4ஆம் வருடம், முகாமைத்துவம்), ரணேசன் (2ஆம் வருடம், நுண்கலைத்துறை), ரஜினா (முதலாம் வருடம், கலைப் பீடம்) ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான காங்கேசு, ஐயாத்துரை, சொர்ணம்மா, இராசகோபால் ஆகியோரின் அன்புச் சகோதரரும் மற்றும் காலஞ்சென்றவர்களான தியாகராசா (ஓய்வுபெற்ற அதிபர்), இரத்தினசபாபதி மற்றும் நடராசா (ஓய்வுபெற்ற அதிபர்), சிவசுஸ்வரி, நமசிவாயம் (இந்தியா), நடராசா தேவி, இராசலட்சுமி, மாணிக்கவாசகர் (பொறியியலாளர், கிளிநொச்சி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் மற்றும் காலஞ்சென்றவாகளான திரு. திருமதி வல்லிபுரம் (மயிலிட்டி தெற்கு, தெல்லிப்பழை) தம்பதியினரின் அன்பு சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (23.02.2003) ஞாயிற்றுக்கிழமை 3மணிக்கு நடைபெற்று, பூதவுடல் கோம்பையன்மணல் மயானத்தில் தகனஞ் செய்யப்பட்டது என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*இல.162, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.* (14900)

தகவல்: த.இரத்தினசிங்கம் (மகன்)

## அப்பாப்பிள்ளை சொக்கலிங்கம்

*(சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும்)*

பண்ணாகத்தைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட அப்பாப்பிள்ளை சொக்கலிங்கம் நேற்று (23.02.2003) ஞாயிற்றுக் கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் அப்பாப்பிள்ளை - வள்ளியம்மை தம்பதிகளின் புதல்வனும் இராமசாமி - கண்மணி தம்பதிகளின் மருமகனும் ஞானேஸ்வரியின் (இளைப்பாறிய ஆசிரியை, யாழ். இந்து மகளிர் கல்லூரி) அன்புக் கணவரும் அமரர்களான தருமலிங்கம், அமிர்தலிங்கம் (முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகமும்) மற்றும் வாசுதேவலிங்கம் (பிரபல வர்த்தகர்), திகம்பரலிங்கம் (முன்னாள் ஆசிரியர் - சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி - கனடா) ஆகியோரின் அருமைச் சகோதரரும் Dr.இந்துவதனி (லண்டன்), ரதிவதனி (கனடா - கணக்கு ஆய்வாளர்) ஆகியோரின் அன்புத் தந்தையும் Dr.உதயகுமார் (லண்டன்), Dr.கிருபாகரன் (கனடா) ஆகியோரின் மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*'ஹேமா ஸ்ரோர்ஸ்' பண்ணாகம், சுழிபுரம்.* (14907)

தகவல்: அ.வாசுதேவலிங்கம் (சகோதரன்)

## திருமதி செல்லத்துரை பராசக்தி

இணுவில் கிழக்கு, மஞ்சத்தடியைச் சேர்ந்த செல்லத்துரை பராசக்தி நேற்றுமுன்தினம் (22.02.2003) சனிக்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற வேலாயுதர் செல்லத்துரையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற நாகலிங்கம் தம்பதிகளின் அன்பு மகளும் புவனேஸ்வரி, காலஞ்சென்றவர்களான சுசிலாதேவி, பரஞ்சோதி மற்றும் இராசமணி, செல்வம், இராஜேஸ்வரி, கண்ணதாசன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் தங்கராசா காலஞ்சென்ற வசந்தாதேவி மற்றும் சிறிகாந்தன், அம்பிகாபதி, குலத்திலகர், தமயந்தி ஆகியோரின் அன்பு மாமியாரும் கணேசபிள்ளை, சந்திரசேகரம்பிள்ளை, சுந்தர்லிங்கம், சிவசுப்பிரமணியம், தியாகராசா, கனகலிங்கம், பேரம்பலம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் நமசிவாயம், பெரியதம்பன், சுப்பிரமணியம், இராசம்மா ஆகியோரின் மைத்துனியும் தவபாலன் (சத்தியபாமா), அம்பிகைபாலன் (தேவா), கிரிசாலினி ஜெகதீஸ்வரன், தேவிகபாலன் (துர்சினி), வசந்தபாலன் (சுந்திரகலா), சுஜிகலா - பாலசந்திரமோகன் (தாட்சாயினி), சந்திரகாசன், கார்த்திகாயினி, உமையாபதி, பிரதீஸ் தர்மாபதி, சர்மிளாபதி, கருணாகரன், துசிந்தா, சங்கீதா, கோகிலன், லக்ஸ்மன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் விதூஷன், விதுனா, புவனராஜ், துர்சாலினி, சங்கவி, பாலினி, சோபினி, பிரணவன், லக்ஷி ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் 26.02.2003 புதன்கிழமை மு.ப. 10.00 மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இணுவில் காரைக்கால் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

*மஞ்சத்தடி, இணுவில்.* (14902)

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

# உடன்படிக்கையை அரசு சரிவர அமுல் செய்ய அழுத்தம் கொடுங்கள்

## கூட்டமைப்பு எம்.பிக்களிடம் தமிழ்ச்செல்வன் வலியுறுத்து

கிளிநொச்சி,பெப்.24

புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தாகி ஒரு வருடம் நிறைவு பெற்றபோதிலும் அதில் சொல்லப்பட்ட கால அட்டவணைப்படி எந்தவித நடவடிக்கைகளும் ஒப்பேற்றப்படவில்லை. இதனால் தமிழ் மக்கள் தீர்வின் மீதான நம்பிக்கையை இழந்து வருகின்றனர். எனவே, இது விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பிக்கள் வாளாவிருந்துவிட முடியாது. உடன்படிக்கையின் சீரான அமுலுக்கு அவர்கள் அரசுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும்.

இவ்வாறு விடுதலைப் புலிகள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்களுடனான நேற்றைய சந்திப்பின்போது வலியுறுத்தியுள்ளனர்.

காலை 10 மணிக்கு ஆரம்பமான இந்தச் சந்திப்பு பிற்பகல் 1.30 மணிவரை நீடித்தது.

இந்தச் சந்திப்பின்போது விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், சமாதானச் செயலகத்தின் பணிப்பாளர் புலித்தேவன், தயா மாஸ்ரர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

உயர் பாதுகாப்பு வலயத்தில் மக்களை மீளக் குடியேற்றும் விடயம் உட்பட பல விடயங்கள் இன்னமும் இழுபறி நிலையிலேயே உள்ளன என்று தமிழ்ச்செல்வன் கூறியுள்ளார்.

உடன்படிக்கையை பூரணமாக நிறைவேற்றுவதற்கு அழுத்தங்களைக் கொடுக்கவேண்டிய அவசியம் பற்றியும் வலியுறுத்தியுள்ளார்.

வடக்கு - கிழக்கில் இயல்புநிலை திரும்ப வேண்டும். அப்பொழுதுதான் மக்களுக்கு சமாதானத் தீர்வு மீதான நம்பிக்கை ஏற்படும். இதற்கு எங்கள் தரப்பில் நாங்கள் பூரண ஒத்துழைப்பை வழங்கி வருகின்றோம். மற்றப் புறத்தில் இருந்தும் இதனையே எதிர்பார்க்கிறோம் என்றும் அவர் சொன்னார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமையாக இருந்த போதும் கூட்டமைப்பு எம்பிக்கள் ஏ9 வீதியூடாக கிளிநொச்சிக்குச் செல்ல பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியிருந்தது (ஐ)

### குச்ச வெளியில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) குத் தயாராகினர். அருகேயுள்ள புலிகளின் ஏனைய தளங்களுக்கு உதவிகள் கேட்டு தொலைத் தொடர்பு கருவிகள் மூலம் தகவல் கொடுத்தனர் என்று கூறப்படுகிறது.

இதையடுத்து சுமார் 200 இற்கும் மேற்பட்ட போராளிகள் அடங்கிய புலிகளின் அணி, பெருமளவு ஆயுதங்களுடன் பல பகுதிகளிலும் இருந்து அங்கு விரைந்துவந்து போராளிகளை முற்றுகையிட்டிருந்த கடற்படையினரைச் சுற்றிவளைத்துக் கொண்டது - என்று கூறப்படுகிறது.

இரு தரப்புக்களும் தங்கள் வசமிருந்த ஆயுதங்கள், மோட்டார்களைத தாக்குதலுக்குத் தயாராக நிறுத்தி நிலையெடுத்துக் கொண்டன எனவும கூறப்படுகிறது. இதனால் எக்கணமும் பெரும் சண்டை வெடிக்கும் நிலை உருவாகியது.

இரு தரப்புகளின் தலைமைப் பீடங்களுக்கும் அவசரத் தகவல்கள் பறந்தன. லண்டன், நோர்வே, வன்னி, கொழும்பு எங்கும் அவசர செய்திகள் பரிமாறப்பட்டன.

சம்பவ இடத்துக்கு கண்காணிப்புக் குழுவினர் விரைந்து சென்று இரு தரப்பினருக்கும் மத்தியில் மாறிமாறி ஓடித்திருந்து இணக்க நிலையை ஏற்படுத்த முயன்றனர்.

மோதல் இன்றியே இரு தரப்புக்களையும் ஆயுதங்களுடன் தத்தம் நிலைகளுக்கு திருப்பி அனுப்புவதற்கு கண்காணிப்புக்குழு தீவிரமாக முயன்றது.

நேற்று முன்னிரவுவரை தீவிர முயற்சி தொடர்ந்தது.

இறுதியில், ஆயுதங்களுடன் இரு தரப்புகளும் தத்தம் நிலைகளுக்கு திரும்ப இணங்கிக் கொண்டன. அதன் பின் அங்கு நீடித்த பதற்றம் தணிந்தது. (ஐ)

### மட்டு. வாவியில் குளிக்கச் சென்ற நபரைக் காணோம்!

மட்டக்களப்பு,பெப்.24

மட்டக்களப்பு கல்லடி பாலத்துறைக்கு அருகிலுள்ள வாவியில் கடந்த சனிக்கிழமை குளிக்கச் சென்ற நபர் ஒருவர் நீரில் மூழ்கிக் காணாமல் போயுள்ளார்.

மூவர் வாவியில் குளிக்கச் சென்றதாகவும் - அவர்களில் ஒருவர் காணாமற்போய்விட்டார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

காணாமற்போனவர் ஜேசுராஜா என்ற 22 வயது இளைஞராவார். சடலத்தைத் தேடும் பணியில் பொது மக்களும் பொலிஸாரும் ஈடுபட்டுள்ளனர்.




ஹொங்கொங்கில் புதிய வரிவிதிப்பு முறையை எதிர்த்து இலங்கையர் உட்பட அங்கு பணியாற்றும் வெளிநாட்டவர்கள் நடத்திய பேரணியின் காட்சி.

### நல்லை ஆதீனத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தலைவர்கள், சமூக சேவையாளர்கள், பொதுமக்கள் எனப் பல தரப்பினரும இன்றைய பிரார்த்தனையில் பங்கேற்க உள்ளதாக ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்தனர்.

இதேவேளை - தென்பகுதியிலிருந்து வரும் சர்வமதக் குழுவினர் நண்பகல் 12.30 மணிக்கு கைதடி சைவச் சிறுவர் இல்லத்துக்கு விஜயம் செய்வர்.

அங்கு யாழ் மனிதநேய ஒன்றியப் பிரதிநிதிகளை பிற்பகல் 1.30 மணிக்கு தென்னிலங்கைக் குழுவினர் சந்திப்பர்.

### மேலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) உறுப்பினர் மாவை சேனாதிராஜா-

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தரப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அல்லது நாடாளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி -

ரெலோ சார்பில் செல்வம் அடைக்கலநாதன் அல்லது எம்.கே.சிவாஜிலிங்கம் -

ஈ.பி.ஆர்.எல்.எவ். சுரேஷ் அணி சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் அல்லது சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் இந்தக் குழுவில் இடம்பெறுகின்றனர்.

இவர்கள் மாதம் ஒரு தடவை விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்து ஆலோசனைகளை நடத்துவர்.

கட்சிகளின் சார்பில் விடுதலைப் புலிகளுடன் மேற்கொள்ளும் சகல தொடர்புகளையும் இந்தப்பிரதிநிதிகளூடாகவே மேற்கொள்வது என்றும்-

நிலைமைக்கு ஏற்ப முடிவுகளை வகுப்பதற்கான அணுகுமுறைகளையும் கருத்துப்பரிமாறல்களையும் இக்குழுவினர் மேற்கொள்வர் என்றும்-

நேற்றைய பேச்சுக்களில் தீர்மானிக்கப்பட்டது.

புரிந்துணர்வு உடன்படிக்கையை நிறைவேற்றுவதில் கடந்த ஒரு வருடகாலத்தில் அரசுத்தரப்பு எடுத்த நடவடிக்கைகள் தொடர்பில் புலிகள் அதிருப்தி கொண்டுள்ளனர் என்றும்-

உயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பாக அரசு, இராணுவம், இந்திய இராணுவ நிபுணர் ஆகிய தரப்புக்களின் நிலைப்பாடுகளை தாங்கள் முற்றாக நிராகரிப்பதாகவும் -

அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கூட்டமைப்பினரிடம் தெரிவித்தார்.

மானிப்பாயிலும் நெடுந்தீவிலும் நடைபெற்ற சம்பவங்கள், யாழ்நூலக விவகாரம் ஆகியன பற்றியும் நேற்றையபேச்சுக்களில் பிரஸ்தாபிக்கப்பட்டன. (ஐ)

### யாழ்நகர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) புளொட் அலுவலகத்துக்குப் பக்கத்தில் அமைந்திருந்தது.

அரசு - புலிகள் ஒப்பந்தத்தை அடுத்து இராமமூர்த்தி இந்தியா பயணமானார். அவரது மூத்த சகோதரரான இராமேஸ்வரனும் சில வாரங்களுக்கு முன் தனது அமைப்பின் யாழ் அலுவலகத்தை மூடிவிட்டு இந்தியா சென்றதாகக் கூறப்படுகின்றது.

இந்நிலையில், அப்பகுதி மக்கள் கொடுத்த தகவலின் அடிப்படையில் கைவிடப்பட்ட அந்த அலுவலகத்தைப் பொலிஸாரும், இராணுவத்தினரும் நேற்று உடைத்துத் திறந்து அங்கிருந்த ஆயுதங்களைக் கைப்பற்றினர்.

இச் சம்பவத்தின் போது சிலர் படையினரால் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர் என்று கூறப்பட்டது. (ஐ-9)

### சமாதான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அமைப்புகளின் பிரதிநிதிகள் உட்பட நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

நிகழ்வின் ஆரம்பத்தில் சமாதான தீபத்தினை யாழ்.மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியப் பொதுச் செயலர் பத்மலிங்கம், பாலதேவகுருக்கள், டாக்டர் எஸ்.அருளானந்தம், எஸ்.தேவதாஸன், ஏ.ஜீவா அமிர்தம், எஸ்.சுப்பிரமணியம் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

அதனைத் தொடர்ந்து வலிகாமம் கோட்டச் செயலர் சதாசிவம், லயன் அருளானந்தம், புங்குடுதீவு மகளிர் அமைப்புத் தலைவி ஸ்ரீகாந்தா, வடமராட்சி உதவிக் கல்விப் பணிப்பாளர் ச.சத்தியசீலன் ஆகியோர் உட்பட பல பிரதிநிதிகள் உரையாற்றினர்.

பிற்பகல் 1.30 மணியளவில் யாழ்.மாவட்ட பொது அமைப்புகளின் பிரதிநிதி சொலமன் சூ.சிறில் உண்ணாவிரதிகளுக்கு குளிர்பானம் வழங்கி போராட்டத்தை முடித்துவைத்தார். (ஐ-9-86)

## World Cup Score card - 2003

ரூ. 16910 முதல் தொலைக்காட்சிப் பெட்டிகள்
சிங்கர்
புதிய பார்வை
இல.1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் T.P:021-222 5408

நாணயச் சுழற்சி: நமீபியா

ஆட்டநாயகன்: சச்சின்டென்டுல்கர் முழுவதும் ஆட்டங்களால் இந்தியா வெற்றி

**இந்தியா**

துடுப்பாட்டம்

| | | | |
|---|---|---|---|
| வி.ஷேவாக் | c/கேல்டர் | b/வான்வூரன் | 24 |
| எஸ்.டென்டுல்கர் | | b/வான்வூரன் | 152 |
| எஸ்.கங்குலி | not out | | 112 |
| யுவராஜ் சிங் | not out | | 07 |
| உதிரிகள் | | | 16 |
| மொத்தம் | (50 ஓவர்கள்) | | 311/2 |

களம்இறங்காதவர்கள்: ஸ்ரீநாத், நேஹ்ரா, டி.மொங்கியா, ஆர்.திராவிட், எம்.கைவ், ஹர்பஜன்சிங், சஹீர்கான்

பந்துவீச்சு

சினிமன் : 10-0-57-0, வான்வூரன் : 10-1-53-2, பார்கர் : 6-0-36-0, பி.கோட்ஸ் : 10-0-64-0, வான்ருய் : 6-0-36-0, டி.கோட்ஸ் : 8-0-50-0

**நமீபியா**

துடுப்பாட்டம்

| | | | |
|---|---|---|---|
| எஸ்.ஸ்வான்போல் | lbw | b/கான் | 09 |
| ஏ.பர்கா | | b/மொங்கியா | 29 |
| எல்.பர்கர் | lbw | b/கான் | 00 |
| டி.கேல்டர் | c/மொங்கியா | b/ஹர்பஜன்சிங் | 04 |
| கே.டிார்கட் ரோபட் | lbw | b/ஹர்பஜன்சிங் | 00 |
| டி.கோட்ஸ் | | c&b/மொங்கியா | 27 |
| எம்.ஸ்கர் | c/திராவிட் | b/யுவராஜ் சிங் | 24 |
| பி.வான்ருய் | c/மொங்கியா | b/யுவராஜ் சிங் | 17 |
| பி.கோட்ஸ் | c/திராவிட் | b/யுவராஜ் சிங் | 03 |
| ஜி.சினிமன் | c/ஸ்ரீநாத் | b/யுவராஜ் சிங் | 05 |
| ஆர்.வான்வூரன் | not out | | 00 |
| உதிரிகள் | | | 12 |
| மொத்தம் | (42.3 ஓவர்கள்) | | 130/10 |

பந்துவீச்சு

ஸ்ரீநாத் : 6-0-25-0, நேஹ்ரா : 0.1-0-0-0, சஹீர்கான் : 7.5-0-24-2, ஹர்பஜன்சிங் : 10-1-34-2, மொங்கியா : 10-1-24-2, ஷேவாக் : 4-0-16-0, யுவராஜ் சிங் : 4.3-2-6-4

### இன்றைய ஆட்டங்கள் - பெப். 24

| | | | |
|---|---|---|---|
| ஸிம்பாப்வே | Vs | ஆஸ்திரேலியா | 2.00p.m. |
| இலங்கை | Vs | கென்யா | 2.00p.m. |

The Barbara Mulvaney
Computer Training Center
123, Temple Road, Jaffna

Diploma Courses

Diploma in Microsoft Office
Diploma in Desktop Publishing
Diploma in Information Technology
Diploma in Software application
Diploma in Photo Graphic
Diploma in Programming
Diploma in Kids Course
Diploma in Studio Designing

Certificate Courses

Microsoft Word
Microsoft Excel
Microsoft Access
AutoCAD 2000
Microsoft Visual Basic 6
Adobe Page Maker 6.5
Corel DRAW 9
Adobe Photo shop

Special offer for Type Setting

நிர்வாகம்

முக்கிய அறிவித்தல்
இலங்கையின் முன்னணி ஆசிரியர்கள் கலந்துகொள்ளும் விசேட கருத்தரங்கு (4709)
BIOLOGY
By:-நாகநாதன்
C.MATHS
By:-குணசிங்கம்
ஆரம்பம் : 25.02.2003 9.00a.m.
பதிவுகளை உடன் மேற்கொள்ளவும்.
NEW SCIENCE CENTRE

தென்னிந்தியாவில் இருந்து



முதன்முறையாக யாழ்ப்பாணம் என்னும் புண்ணிய பூமிக்கு வருகைதந்துள்ள பரம்பரை சோதிடக் கலையில் புகழ்பெற்ற சிவபால ஜோதிடர்
ராஜகுருசாமி அவர்கள்
★ கைரேகை ★ ஜாதகம் ★ எண்கணிதம்
★ பெயர்ராசி ★ திருமணப்பொருத்தம்
இவற்றில் பலவருட அனுபவமும் புகழும் பெற்றவர்.
நேரம்: காலை 9.00 - மாலை 5.00 மணி வரை
ராஜகுருசாமி
மிலேனியம் மல்ரி கொம்பிளக்ஸ்
60/1 (112), TEMPLE ROAD [Near ICRC], JAFFNA. (14772)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.02.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## ஐ.நா. பாதுகாப்புச் சபையில் சமர்ப்பிக்கப்படவுள்ள

# ஈராக்குக்கு எதிரான பிரேரணையை நிறைவேற்ற அமெ.கடும் பிரயத்தனம்!

லண்டன்,பெப்ரவரி24

**ஐ.நா.பாதுகாப்புச் சபையில் தாம் சமர்ப்பிக்கவுள்ள ஈராக் தொடர்பான இரண்டாவது பிரேரணையை நிறைவேற்றத்தேவையான ஆதரவைத் திரட்டுவதில் அமெரிக்காவும் அதன் நெருங்கிய நட்பு நாடுகளும் கடும் பிரயத்தனம் மேற்கொண்டுள்ளன.**

**இதேவேளை, ரஷ்ய அதிபரின் தூதர் இரகசியத் திட்டத்துடன் ஈராக் அதிபரைச் சந்திக்கச் சென்றுள்ளதாகக் கூறப்படுகிறது.**

ஈராக் மீது இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ளும் தனது எண்ணத்தை நிறைவேற்றும் வகை செய்யக்கூடிய பிரேரணை ஒன்றை ஐ.நா. பாதுகாப்புச் சபையில் அமெரிக்கா இவ்வாரம் சமர்ப்பிக்கும் என அமெரிக்க அதிபர் புஷ் அறிவித்திருந்தார். இந்தப்பிரேரணையின் மாதிரி வரைவு இன்று திங்கட்கிழமை ஐ.நா.உறுப்பு நாடுகள் பார்வையிடும் வகையில் சுற்றுக்கு விடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தப்பிரேரணையை நிறைவேற்றி ஈராக் மீது இராணுவ நடவடிக்கையை தொடங்கிவிட விரும்பும் அமெரிக்க அதிபருக்கு பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளயர், ஸ்பெயின் பிரதமர் ஜோஸ்மரியா அஜ்னர், இத்தாலி அதிபர் சில்வியோ பெர்லூஸ்கொனி ஆகியோர் முழு ஆதரவு வழங்கி வருகின்றனர்.

டெக்ஸாஸில் இத்தாலி அதிபருடன பேச்சு நடத்திய அமெரிக்க அதிபர் புஷ் பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில், இரண்டாவது பிரேரணை ஐ.நா.பாதுகாப்புச் சபையில் இந்தவாரம் சமர்ப்பிக்கப்படும் என்று உறுதிப்படுத்தினார்.

ஈராக் மீதான இராணுவ நடவடிக்கையை நியாயப்படுத்தும் இரண்டாவது தீர்மானத்தை நிறைவேற்ற பாதுகாப்புச்சபையின் 15 உறுப்பு நாடுகளில் 9 நாடுகளின் ஆதரவு தேவை. நரந்தர உறுப்பு நாடுகளான பிரான்ஸ், ரஷ்யா, சீனா மற்றும் தற்காலிக உறுப்பு நாடுகளான ஜேர்மனி, சிரியா ஆகியவை ஈராக் தொடர்பான அமெரிக்காவின் கடும் போக்கை எதிர்த்து வருகின்றன. இந்நிலையில் இரண்டாவது தீர்மானம் மீது பாதுகாப்புச் சபையின் வாக்கெடுப்பு நடத்தப்பட்டால் அமெரிக்கா, பிரிட்டன், ஸ்பெயின், பல்கேரியா ஆகிய 4 நாடுகள் மட்டுமே பிரேரணையை ஆதரித்து வாக்களிப்பது உறுதிப்படுத்தபட்டுள்ளது. பாதுகாப்புச் சபையின் உறுப்பு நாடுகளில் 6 நாடுகள் எந்தவித உறுதியான நிலைப்பாட்டையும் கொண்டிருக்கவில்லை ஆகவே இந்த நாடுகளை தனக்காதரவாக வாக்களிக்க வைக்க அமெரிக்கா பகீரதப்பிரயத்தனம் மேற்கொண்டு வருகிறது.

ஆயினும் போதுமான ஆதரவை திரட்டினாலும் ரஷ்யா, பிரான்ஸ், சீனா ஆகிய நிரந்தர உறுப்பு நாடுகள் வீட்டோ எனப்படும் தடுப்புரிமையை பயன்படுத்தி பிரேரணை நிறைவேறுவதை தடுத்துவிடக்கூடும் என்ற அச்சமும் அமெரிக்காவுக்கு உள்ளது. இது ஒருபுறமிருக்க ரஷ்யாவின் முன்னாள் பிரதமர் யெவக்னி பிரிமாகோவ் ஈராக் சென்றுள்ளதாகவும் -

அதிபர் விளாடிமிர் புடினின் தனிப்பட்ட திட்டத்துடன் அவர் ஈராக் அதிபரை சந்திக்கவுள்ளதாகவும் ரஷ்ய வானொலி தெரிவித்தது.

இதேசமயம், அமெரிக்கா தலைமையிலான படைகள் ஈராக் மீது நடத்தும் தாக்குதல் முஸ்லிம்களுக்கு எதிரான தாக்குதலாகவே இஸ்லாமிய உலகால் நோக்கப்படும் என்று மலேஷியப் பிரதமர் மஹாதீர் மொஹமட் எச்சரித்துள்ளார். (ஓ)

## ஈராக்கில் மனிதக்கேடயங்கள்

பக்தாத்,பெப்.24

போர் மூண்டால் பொதுப்பகுதிகளைப் பாதுகாக்கும் மனிதக் கேடயங்களாக செயற்பட வெளிநாட்டைச் சேர்ந்த தன்னார்வத் தொண்டர்கள் ஈராக் வந்து அணி திரளத் தொடங்கியுள்ளனர்.

மனிதக்கேடயமாகச் செயற்பட வடக்கு ஈராக்கில் உள்ள தண்ணீர் சுத்திகரிப்பு ஆலைக்கு வெளிநாட்டுத தன்னார்வத் தொண்டர்கள் 17 பேர் புறப்பட்டு விட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இப்பணியில் தங்களை ஈடுபடுத்திக்கொள்ள வந்துள்ள இவர்கள் பெரும்பாலும் இத்தாலி, சுவீடன், ஸ்பெயின் நாடுகளைச் சேர்ந்தவர்கள்.

மனிதக்கேடயங்களின் வருகையை வரவேற்பதாகவும் -

அவர்களை சிவில் பாதுகாப்பாளர்கள் என்று அழைக்க விரும்புவதாகவும் -

ஈராக் துணைப் பிரதமர் தாரிக் அஸீஸ் தெரிவித்துள்ளார். (ஓ)

## ஈராக் அதிபர் சதாமுக்கு மார்ச் 14 வரை அவகாசம்

### புஷ், பிளயர் தீர்மானம்

லண்டன்,பெப்.24

ஈராக் அதிபர் சதாம் ஹூசேனுக்கு அமெரிக்காவும், பிரிட்டனும் 21 நாள்கள் கெடு விதித்துள்ளன.

அமெரிக்காவுக்கும் ஈராக் நாட்டுக்கும் இடையில் போர் மேகம் சூழ்ந்துள்ள நிலையில் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ், பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளயர் ஆகியோர் தொலைபேசியில் அவசர ஆலோசனை நடத்தினார்கள். 30 நிமிட நேரம் இந்தப் பேச்சு நீடித்தது.

அப்போது முக்கிய முடிவு ஒன்று எடுக்கப்பட்டது. பேரழிவு ஆயுதங்களை ஈராக் அழித்துவிட வேண்டும். அல்லது சதாம் ஹூசைன் போரைச் சந்திக்க தயாராக இருக்கவேண்டும். மார்ச் 14 ஆம் தேதிக்குள் ஏதாவது ஒரு முடிவை எடுத்தாக வேண்டும் என்று அவர்கள் கெடு விதிக்க முடிவு செய்துள்ளனர். (ஓ)

## மூக்கினுள் பாம்பை நுழைத்து வாய் வழியே எடுத்த இளைஞர்



மதுரை,பெப்.24

தமிழகத்தின் சென்னையைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் தனது மூக்கில் பாம்பை நுழைத்து வாய் வழியாக எடுத்து சாதனை நிகழ்த்தினார்.

கொடைக்கானல் கிறிஸ்தவ கல்லூரியில் நடந்த பட்டமளிப்பு விழா நிகழ்ச்சியின்போது இச்சாதனையை அவர் நிகழ்த்தினார்.

சென்னை கிழக்கு தாம்பரத்தைச் சேர்ந்த மனோகரன் என்ற சினேக் மனோ (வயது 25) என்பவரே தனது மூக்கில் நல்ல பாம்பு, கொம்பேறி மூக்கன், பச்சைப் பாம்பு, தண்ணீர்ப்பாம்பு ஆகிய நான்கு பாம்புகளை ஒவ்வொன்றாக மூக்கில் நுழைத்து வாயின் வழியாக எடுத்துச் சாதனை நிகழ்த்தினார்.

25 அங்குலம் நீளம் உள்ள நல்ல பாம்பை ஒரு நிமிடம் 52 விநாடிகளிலும், 40 அங்குலம் நீளம் உள்ள கொம்பேறி மூக்கன் பாம்பை ஒரு நிமிடம் 45 விநாடிகளிலும், 52 அங்குலம் அளவுள்ள பச்சைப் பாம்பை ஒரு நிமிடம் 42 விநாடிகளிலும், 22 அங்குலம் அளவுள்ள தண்ணீர் பாம்பை இரண்டு நிமிடம் 2 விநாடிகளில் மூக்கின் வழியாக நுழைத்து வாய் வழியாக எடுத்தார் அவர். (ஓ)

## நியூயோர்க் துறைமுகம் அருகே எண்ணெய் நிறுவனத்தில் தீ!

### வெடியோசை கேட்டு நகரவாசிகள் பீதி! எரிபொருள் விநியோகம் ஸ்தம்பிதம்!!

நியூயோர்க்,பெப்.24

நியூயோர்க் துறைமுகத்துக்கு அருகே சிறு தீவில் அமைந்திருக்கும் எண்ணெய் விநியோக நிலையத்தில் பெரும் தீவிபத்து ஏற்பட்டிருக்கிறது. அப்போது அங்கு எழுந்த வெடிச்சத்தம் பல கிலோமீற்றர் தூரத்திற்கு அதிர்வை ஏற்படுத்தியது.

இந்த அனர்த்தத்தில் இருவர் மட்டுமே உயிரிழந்திருப்பது உறுதிப்பட்டுள்ள போதிலும் அமெரிக்காவின் பெரும் பிரதேசத்துக்கான எண்ணெய விநியோகம் ஸ்தம்பிதம் அடைந்திருக்கிறது. எரிபொருள்களின் விலைகள் ஒரு டொலர் வரை உயர்ந்திருக்கின்றன.

தீவிரவாதிகளின் தாக்குதல்கள் இடம்பெறலாம் என்று எதிர்பார்க்கப்படுவதால் அமெரிக்க நகரங்களில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. குறிப்பாக தலைநகர் வாஷிங்டனிலும் நியூயோர்க்கிலும் கூடுதல் பாதுகாப்பு செய்யப்பட்டிருக்கிறது.

இந்த நிலையிலேயே துறைமுகம் அருகே உள்ள இந்த எரிபொருள் நிறுவனத்தில் பயங்கர தீ அனர்த்தம் ஏற்பட்டிருக்கிறது.

நியூயோர்க் அருகே ஸ்டேட்டன் (Staten) தீவுக்கும் நியூயோர்க்கும் இடையே இந்தப்பாரிய எண்ணெய் நிறுவனம் அமைந்துள்ளது. கப்பல்களில் எடுத்துவரப்படும் பெற்றோல், டீஸல் போன்றவையும் எரிவாயுவும் அங்கு சேமித்து வைக்கப்பட்டுள்ளன. அவை அங்கிருந்து நிலத்தடி குழாய்கள் மூலம் ஏனைய இடங்களுக்கு விநியோகிக்கப்படுகின்றன.

இந்த எண்ணெய் நிறுவனத்தில் இலங்கை நேரப்படி கடந்த சனிக்கிழமை இரவு 9.30 மணியளவில் திடீரென்று தீப்பற்றியது. ஒரு கப்பலில் இருந்து குதங்களுக்கு எண்ணெய் இறக்கப்பட்டுக்கொண்டிருந்த சமயம் தீ ஏற்பட்டது என்று கூறப்படுகிறது. அச்சமயம் நில அதிர்வுடன் கூடிய பெரும் வெடிச்சத்தமும் எழுந்தது. இந்த வெடிச்சத்தம் பல கிலோமீற்றர் தூரத்துக்கு கேட்டது.

மிகப்பெரிய உயரத்துக்கு தீ பரவி எரிந்தது. வானில் கரும் புகைமூட்டம் பரவியது.

நியூயோர்க் நகர தீயணைப்புப் படையினர் அங்கு விரைந்து தீயணைக்கும் பணியில் ஈடுபட்டிருந்தனர். கரையருகே குடியிருப்புக்களில் இருந்த மக்கள் வெளியேற்றப்பட்டனர்.

செப்ரெம்பர் 11 தாக்குதல் போன்ற மற்றொரு விபரீதம் என எண்ணிய நியூயோர்க்வாசிகள் கதிகலங்கினர்.

பயங்கர வெடிச்சத்தமும் அதைத் தொடர்ந்து தீவிபத்தும் ஏற்பட்டிருப்பதால் இது ஒரு பேரழிவுத் தாக்குதல் என்றே பலரும் கருதினர்.

தீவிரவாதத் தாக்குதல் எதுவும் நடந்ததற்கான சாத்தியமோ அறிகுறிகளோ இல்லை என்று அமெரிக்க புலனாய்வுத்துறை செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார். என்றாலும் இந்த விபத்துக்கு நாசவேலை காரணமா என்பது பற்றியும் விசாரணை நடைபெற்றுவருகிறது. (ஐ)



எண்ணெய் விநியோக நிலையத்தில் பற்றியுள்ள தீ

## ஈராக் போர் தொடங்கினால் விபசாரம் பெருகும் அபாயம்!

### சர்வதேச நிபுணர்கள் எச்சரிக்கை

வாஷிங்டன்,பெப்.24.

ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுத்தால், சர்வதேச அளவில் விபசாரம் பெருகிவிடும். பெண்களும், சிறுமிகளும் சீரழிக்கப்படுவார்கள் என்று நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

அமெரிக்காவில் உள்ள ஜோன ஹொப்கின்ஸ் வெளிநாட்டுக் கொள்கை நிறுவனத்தின் இணை இயக்குநரான மைக்கேல் கிளார்க் செய்தியாளர்களிடம் இது குறித்துக் கூறியதாவது:-

ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுத்தால், ராணுவ வீரர்களுக்காக பெண்கள் விபசாரத்துக்காக அழைத்து வரப்படுவார்கள். இதனால் விபசாரம் [illegible]ரும்.

[illegible] பெண்களும், சிறுமிகளும் இந்தத் தொழிலில் வலுக்கட்டாயமாகத் தள்ளப்படுவார்கள்.

போர் நடக்கும் பகுதியில், சமூக பொருளாதார, அரசியல் கட்டமைப்பு சீர்குலைக்கப்படும். இதன் காரணமாக விபசாரத் தொழிலில் பெண்கள் தள்ளப்படுவார்கள்.

உலகம் முழுவதும் 70கோடி பெண்கள் விபசாரத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். ஒவ்வோர் ஆண்டும் 40 லட்சம் பெண்கள் இந்தத் தொழிலுக்கு புதிதாகக் கொண்டுவரப்படுகிறார்கள்.

பாலியல் தொழிலுக்காக ஒவ்வோர் ஆண்டும் 49நாடுகளில் இருந்து 50ஆயிரம் பெண்கள் அமெரிக்காவுக்கு அழைத்துவரப்படுகிறார்கள். இவ்வாறு மைக்கேல் கிளார்க் கூறினார். (ஓ)

## ஆங்கில அகராதியை ஒப்புவிக்கும் இளைஞர்

லண்டன்,பெப்.24

பிரிட்டிஷ் தலைநகர் லண்டனில் வசிக்கும் பொறியியலாளர் மகாவீர் ஜெயின். இவரது சொந்த ஊர் இந்தியாவின் உத்தரபிரதேச மாநிலம் லட்சுமணபுரி ஆகும்.

இவர் ஆங்கில அகராதி புத்தகத்தில் உள்ள பல ஆயிரம் சொற்களையும் கடகட என்று ஒப்புவித்து அதற்கு அர்த்தமும் சொல்கிறார்.

இதைப்பார்த்து அந்த அகராதிப் புத்தகத்தைத் தயாரித்தவர்களே ஆச்சரியப்பட்டுள்ளனர்.

## பாக். மசூதியில் துப்பாக்கிச் சூடு

கராச்சி,பெப்.24.

பாகிஸ்தானின் காராச்சி நகரில் மசூதி ஒன்றின் மீது மர்ம நபர் ஒருவர் சுட்டதில் 8 பேர் உயிரிழந்தனர்; 8 பேர் காயமடைந்தனர்.

இமாமம் பார்க் மேதி என்ற சிறுபான்மை முஸ்லிம் பிரிவினரின் மசூதியில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாலை தொழுகை முடிந்து பலர் வீடு திரும்பிக்கொண்டிருந்தனர். அப்போது அங்கு வந்த மர்ம நபர் அவர்களை நோக்கித் துப்பாக்கியால் சுட்டார். இச்சம்பவத்தில் 10 பேர் இறந்திருக்கக் கூடும் என்றும் சில தகவல்கள் கூறுகின்றன. துப்பாக்கியால் சுட்டவர் யார்? அவர் எந்த அமைப்பைச் சேர்ந்தவர் என்ற விவரம் தெரியவில்லை இதற்கான காரணமும் தெரியவில்லை. (ஓ)

# பிறந்தநாள் வாழ்த்துக்கள்

இல.77, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த
திரு.திருமதி சிவானந்தன் - சுனிற்றா தம்பதிகளின் செல்வப் புதல்வர்கள்



HAPPY BIRTHDAY

செல்வன் சி.சிவருஜன் (3ஆவது பிறந்தநாள்)

செல்வன் சி.சிவானுஜன் (4ஆவது பிறந்தநாள்)

எமது அன்பு மழலைச் செல்வங்களான சிவருஜன் தனது மூன்றாவது பிறந்த தினத்தையும் சிவானுஜன் நான்காவது பிறந்த தினத்தையும் அவர்களது இல்லத்தில் வெகு சிறப்புடன் குதூகலமாக சித்திரபானு வருடம் இன்று (24.02.2003) திங்கட்கிழமை கொண்டாடி மகிழ்கின்றனர். இவர்கள் இருவரையும் அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, சித்தப்பாமார்கள் மற்றும் கனடாவில் வசிக்கும் சித்தப்பாமார்கள், சித்திமார், அத்தைமார், ஹொலண்டில் வசிக்கும் மாமா, பூட்டன் ஆகியோர் வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் அருளோடும், நல்லைக் கந்தன் அருளோடும் பல்லாண்டு காலம் நலமுடன் சீரும் சிறப்புமாக வாழவேண்டுமென வாழ்த்துகிறார்கள்.

சிவலிங்கம் மோட்டோர்ஸ்,
77, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். T.P: 021-3212

தகவல்:
திரு. சிவானந்தன்(அப்பா) (14885)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



சமாதான நீதிவானாகப் பதவியேற்ற

## கனகசபை சுந்தரலிங்கம்

(காரை மணிகண்டன்) அவர்களை
வாழ்த்துகின்றோம்

ஐயப்பன் அருளாசி பெற்றிங்கே
அவனிக்குத் தொண்டாற்ற வாழ்த்துகிறோம்
சமூக, சமயப் பணிகளிலே தொண்டாற்றி - தமிழர்
சரித்திரத்தில் இடம்பிடிக்க வாழ்த்துகிறோம்

305, அரசடி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். (16877)

வாழ்த்தி மகிழ்பவர்கள்:
சமாதான நீதிவான்
தம்பித்துரை குடும்பத்தினர்.

# உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம்

## உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம்

**தினம் ஒரு பரிசு - 17**

நாளை (25.02.2003) இடம்பெறவுள்ள பாகிஸ்தான் - நெதர்லாந்து அணிகளுக்கிடையிலான ஆட்டத்தில் வெற்றி பெறும் அணி எது?

முழுப்பெயர் : ..........................................
முகவரி : ..........................................
அ. அட்டை எண்: ..........................................

இக் கேள்விக்கான விடையை இதே கூப்பனில் எழுதி நாளை (25.02.2003) நண்பகல் 1மணிக்குள் தினம் ஒரு பரிசு - 17, உதயன் பணிமனை, 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம என்ற முகவரிக்கு தபாலில் அனுப்பலாம் அல்லது உதயன் அலுவலகத்தில் உள்ள இதற்கான பெட்டியில் நேரில் சேர்க்கலாம். உடனே விரையுங்கள்.

உதயன்

## உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம்

கிரிக்கெட் உலகக் கிண்ணம் - 2003

**Super Six பரிசுகள்**

இம்முறை சுப்பர் சிக்ஸ் பிரிவுக்குள் நுழையக்கூடிய அணிகள் எவை?

1. .................... 2. ....................
3. .................... 4. ....................
5. .................... 6. ....................

உதயன் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
முடிவு திகதி: பெப்ரவரி 28

முழுப்பெயர் : ..........................................
முகவரி : ..........................................
அ. அட்டை எண்: ..........................................



முதற் பரிசு
மைக்கிறோ பிசி தரும்
கணனி



2ஆம் பரிசு
சிங்கர் நிறுவனம் தரும்
தொலைக்காட்சி

விசேட பரிசுகள்
அருண்ஸ் ஸ்போட்ஸ் ஸ்பொட்டின்
கூப்பன்கள்



Super Six பரிசு
லுமாலா நிறுவனம் தரும்
சைக்கிள்கள்

ஆறுதல் பரிசுகள்
எக்ஸ்போ நிறுவனம் தரும்
விமான
ரிக்கெட்டுக்கள்

3ஆம் பரிசு
ஷார்ப் நிறுவனம் தரும்
வானொலி

தினம் தினம் ஒரு பரிசு
ஏசியன் நிறுவனம் தரும்
கழிவுக் கூப்பன்கள்

## உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம்

கிரிக்கெட் உலகக் கிண்ணம் - 2003

**மாபெரும் இறுதிப் போட்டி**

1. இறுதியில் கிண்ணத்தை வெல்லப்போகும் அணி எது?
(..............................)
2. இறுதியாட்டத்தின் ஆட்டநாயகன் யார்?
(..............................)

உதயன் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
முடிவு திகதி: மார்ச் 15

முழுப்பெயர் : ..........................................
முகவரி : ..........................................
அ. அட்டை எண்: ..........................................

**தினம் தினம் ஒரு பரிசு:**
ஆட்டம் நடைபெறும் நாளுக்கு முதல் நாள் கேட்கப்படும் கேள்விக்கு நீங்கள் விடையளிக்க வேண்டும். சரியான விடை எழுதுபவருக்கு ஏசியன் நிறுவனம வழங்கும் 1000ரூபாவுக்கான 50 கழிவுக் கூப்பன் கிடைக்கும்.

**விசேட பரிசுக் கூப்பன்கள்:**
முக்கிய ஆட்டங்களின்போது மேலதிகமாக ஒரு கேள்வி கேட்கப்படும். அதில் வெல்லும் அதிர்ஷ்டசாலிக்கு அருண்ஸ் ஸ்போட்ஸ் பொட் வழங்கும் 500 ரூபா பெறுமதியான பரிசுக் கூப்பன் கிடைக்கும்.

**Super Six பரிசுகள்:**
Super Six இற்கான சரியான அணிகளைத் தெரிவுசெய்யும் மூவருக்கு லுமாலா நிறுவனம் வழங்கும் புத்தம் புதிய சைக்கிள்கள் காத்திருக்கின்றன. இதற்கான முடிவு திகதி இம்மாதம் 28ஆகும்.

**மாபெரும் இறுதிப் போட்டி:**
இது பெரும் பரிசுகளைக் கொண்டது. வெல்லும் 3 அதிர்ஷ்டசாலிகள் 1ஆம், 2ஆம், 3ஆம் பரிசுகளைப் பெறுவர். ஆறுதல் பரிசுகளாக 10 இருவழி விமானப் பயண ரிக்கெட்டுக்கள் காத்திருக்கின்றன. இதற்கான முடிவு திகதி மார்ச் 15 ஆகும்.

**விதிகள்:-**
ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்பலாம், போட்டோப் பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா, அ.அட்டை பெறும் வயதுக்குக் குறைந்தவர்கள் பெற்றோரின் அ.அட்டை எண்ணைக் குறிப்பிடலாம், உதயன் மற்றும் உதயன் சார்ந்த நிறுவனங்களின் ஊழியர்கள், அவர்களது குடும்பத்தவர்கள் போட்டிகளில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள், நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியானது, முடிவுகள் குறித்து எந்த விளக்கங்களுக்கும் தொடர்புகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா. அனைத்து முடிவுகளும் மார்ச் மாதம் 27ஆம் திகதிய உதயனில் அறிவிக்கப்படும்.

## பின்தங்கிய நிலையில் வசதிகளற்று வாழும்

# மாணவர்களுக்கு வேண்டிய அறிவைப் புகட்ட தொழில்நுட்ப நிறுவனங்கள் முன்வரவேண்டும்!

## 'கொம்பியூட்டர் எக்ஸ்பிரஸ்' கருத்தரங்கில் இளம்பரிதி வேண்டுகோள்

யாழ்ப்பாணம்,பெப்.24

வசதிகளற்ற, பின்தங்கிய நிலையில் உள்ள எமது தாயக மண்ணில் வாழ்கின்ற மாணவர்களுக்கு வேண்டிய அறிவைப் புகட்ட இங்குள்ள தொழில்நுட்ப நிறுவனங்கள் முன்வரவேண்டும்.

- இவ்வாறு தெரிவித்தார் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி.

'உதயன்' ஊடக அனுசரணையுடன் தமிழ் சஞ்சிகையான 'கொம்பியூட்டர் எக்ஸ்பிரஸ்' நேற்று மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் தகவல் தொழில் நுட்பம் பற்றிய கருத்தரங்கையும் கண்காட்சியையும் நடத்தியது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு சி.இளம்பரிதி தெரிவித்தார்.

'கொம்பியூட்டர் எக்ஸ்பிரஸ்' சஞ்சிகையின் இணையாசிரியர் எஸ். கோபால் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றுகையில் அரசியல்துறைப் பொறுப்பாளர் மேலும் தெரிவித்ததாவது:-

நவயுகத்தில் மேலைத்தேய நாடுகளில் உள்ள மாணவர்களுக்கு தகவல்தொழில்நுட்பம் தொடர்பான அறிவைப் பெற்றுக்கொள்வதற்கு பல்வேறு வசதிகள் காணப்படுகின்றன. ஆனால், எமது தாயக மண்ணில் வாழுகின்ற மாணவர்களுக்கு அத்தகைய வசதிகள் இன்மையால் அத்துறையில் நிபுணத்துவம் பெறமுடியாது உள்ளது.

இதனை நீக்கும்வகையில் எம் மண்ணில் இயங்குகின்ற தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் மாணவர்களுக்கு வேண்டிய அறிவைப் புகட்ட முன்வரவேண்டும். அத்தகைய ஒரு பணியை தமிழ் மாணவர்களுக்கு ஆற்றுவதற்கு முன்வந்துள்ள 'கணனி எக்ஸ்பிரஸ்' சஞ்சிகையின் வெளியீட்டாளர்கள் பாராட்டப்படவேண்டியவர்கள்.

தகவல் தொழில்நுட்பத்தில் யார் கூடுதல் அறிவுபெற்று விளங்குகின்றார்களோ அவர்களே உலகத்தைக் கட்டுப்படுத்தும் வல்லமையைப் பெறுகின்றனர்.

கணனி கற்கை நெறியை எமது தமிழ் மாணவர்கள் சிறுவயதுமுதல் கற்பதற்கு முன்வரவேண்டும். இதன் மூலம்தான் எமது அறிவுசார் தொழில்நுட்பத்தை மேம்படுத்தமுடியும் -

முன்னைய காலங்களில் குறிப்பிட்ட சிலர்தான் இத்தகைய தகவல் தொழில்நுட்ப அறிவைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்து வந்தது. ஆனால், அந்த நிலை மாறி சகலரும் அதனைக் கற்கக்கூடிய சூழ்நிலை தற்போது ஏற்பட்டுள்ளது.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தமிழ் மாணவர்கள் அனைவரும் அக்கறை எடுத்து தகவல் தொழில்நுட்ப அறிவைப்பெற முன்வரவேண்டும். அதன்மூலம் உலகத்தில் வாழ்க்கைத்தரத்திலும் பொருளாதாரத்திலும் மேம்பாடு உடையவர்களாகமுடியும்.

எமது நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்படுமானால் நாங்களும் நாகரிகமான பொருளாதார மேம்பாடுடைய மக்களாக வாழ்வதற்கு இது சாதகமாக அமையும் என்று அவர் தெரிவித்தார்.

'கொம்பியூட்டர் எக்ஸ்பிரஸ்' ஆசிரியர் ரொபின் செல்வக்குமரன் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

'எம்மால் மாதாந்தம் வெளியிடப்படுகின்ற 'கொம்பியூட்டர் எக்ஸ்பிரஸ்' எனும் தமிழ் கணனிச் சஞ்சிகையானது வர்த்தக நோக்கத்திற்காக வெளியிடப்படுவது அல்ல. தமிழ் மாணவர்களுக்கு அறிவியல் அறிவை ஏற்படுத்தவேண்டும் என்பதற்காகவே அது ஆரம்பிக்கப்பட்டது.

கொழும்பிலிருந்து இச்சஞ்சிகை வெளிவருகின்றமையால் பல்வேறு இன்னல்களை எதிர்நோக்குகின்றோம். ஏனைய சஞ்சிகைகளுக்கு பல முன்னணி நிறுவனங்கள் பல்வேறு வகையான வசதி வாய்ப்புக்களை வழங்கி வருகின்றன. அப்படியான வாய்ப்புக்கள் எவையும் எமக்குக் கிடைப்பதில்லை. இந்த நிலையிலும் தமிழ் மாணவர்களின் நன்மை கருதி செயலாற்றி வருகின்றோம்.

இந்தச் சந்தர்ப்பத்தினை சரியான முறையில் பயன்படுத்தி தமிழ் மாணவர்கள் தமது அறிவுப் பசியைத் தீர்த்துக்கொள்ளவேண்டும்.

முன்னைய காலத்தில் முன்னணியில் இருந்த எமது கல்வித் தரம், நாட்டில் நடைபெற்ற யுத்தத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது. அதனை முன்னைய நிலைக்குக் கொண்டுவருவதற்கு அனைவரும் ஒன்றுபட்டு உழைக்கவேண்டும்.

இந்த மண்ணில் வாழுகின்ற ஒவ்வொரு தமிழ் மாணவர்களுக்கும் வரலாற்றுக் கடமை ஒன்று உண்டு. அதனை உணர்ந்து செயற்படவேண்டும்.

எமது மண்ணின் விடுதலைக்காக ஒரு பகுதியினர் தம்மை போராளிகளாக மாற்றி தம்முயிரை இந்த மண்ணிற்கு அர்ப்பணித்து மண்ணையும் மக்களையும் காத்துவருகின்றனர்.

இதேநேரம் ஒரு பகுதியினர் பெற்றோரின் அரவணைப்புடன் வாழ்வதோடு வெளிநாட்டில் இருந்துவரும் பணத்தைக் கொண்டு வீண்செலவு செய்து அறிவிலிகளாக வாழ்கின்றனர்.

எமக்காக ஒரு கூட்டம் தமது உயிரை அர்ப்பணித்துவரும் வேளையில் மாணவர்கள் தகவல் தொழில்நுட்பத்தில் வளர்ச்சியடைந்து அவர்களால் உருவாக்கப்படுகின்ற எமது தேசத்தை வளர்த்தெடுக்கவேண்டும். அந்தப் பொறுப்பு இன்றுள்ள இளம் சமுதாயத்தினருக்கு உரியது என்றார்.

இந்த கருத்தரங்கினை விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி.

(IV.ஆம் பக்கம் பார்க்க)



'கொம்பியூட்டர் எக்ஸ்பிரஸ்' சஞ்சிகை 'உதயன்' ஊடக அனுசரணையுடன் நேற்று இராமநாதன் மகளிர் கல்லூரியில் தகவல் தொழில்நுட்பக் கருத்தரங்கை நடத்தியது.

இக்கருத்தரங்கில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல் பொறுப்பாளர் சி.இளம்பரிதி மங்கள விளக்கேற்றுவதையும்'கொம்பியூட்டர்எக்ஸ்பிரஸ்' சஞ்சிகையின் ஆசிரியர் ரொபின் செல்வக்குமரன் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்: வசந்தன்)


சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல.3438128 இருந்து 3456667 வரை

சீட்டிழுப்பு இல. 1378

திகதி 22.02.2003

வெற்றி எண்கள்

07 14 39 51 52

போனஸ் எண்

36

ஜக்பொட் பரிசு

ரூபா.1,500,000/- வெல்லப்பட்டது.

| பொருந்திய எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத்தொகை | தொகை |
|---|---|---|---|
| 5 | 01 | 1,500,000/- | 1,500,000/- |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 02 | 100,000/- | 200,000/- |
| 4 | 116 | 10,000/- | 1,160,000/- |
| 3 | 5,810 | 500/- | 2,905,000/- |
| 2 | 96,016 | 20/- | 1,920,320/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 07ம் எண் (போனஸ் எண் தவிர்த்து) | 117,731 | 10/- | 1,177,310/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூபா.8,862,630/-

இந்த புதன்கிழமைக்கான ஜக்பொட்

ரூபா.1,500,000/-

தொடர் இல. 2458284க்கு மேற்பட்ட ஊதா நிற டிக்கட்டுகள் 2003 பெப்ரவரி 26ம் திகதி புதன்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிக்கிழமை அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் தங்கப்பரிசு வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

3441502-2-59
3449178-3-03
3447584-9-19
3441683-1-55
3439777-8-43

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி,
கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக),
யாழ்ப்பாணம்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம்

| சீட்டிழுப்பு வாரம் | 451 |
|---|---|
| திகதி | 21.02.2003 |

டிக்கட்டின் நிறம் - சிவப்பு

செல்லுபடியாகும் தொடர் இல. 5753557-5768440

வெற்றி இலக்கங்கள் 15 26 29 52

லக்கினம் கடகம்

ஜக்பொட் பரிசு ரூபா. 1,744,750/- வெல்லப்படவில்லை

இந்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட் ரூபா 2,469,950/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரு.) | மொத்தப் பரிசுத் தொகை(ரு.) |
|---|---|---|---|
| 1 இல | 324,598 | 10 | 3,245,980 |
| 2 இலக்கங்கள் | 29,767 | 20 | 595,340 |
| 1 இல + லக்கினம் | 29,675 | 30 | 890,250 |
| 2 இல + லக்கினம் | 2,724 | 100 | 272,400 |
| 3 இலக்கங்கள் | 798 | 500 | 399,000 |
| 3 இல + லக்கினம் | 69 | 5,000 | 345,000 |
| 4 இலக்கங்கள் | 04 | 100,000 | 400,000 |
| 4 இல + லக்கினம் | - | 1,744,750 | - |
| மொத்தம் | 387,635 | - | 6,147,970 |

மொத்தப் பரிசுத் தொகை ரூபா. 6,147,970/-

தொடர் இல. 4776355க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுகள் 2003 பெப்ரவரி 25ம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத் டிக்கட்டுகளில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

5754256-7-39
5758730-9-00
5759912-9-11
5759362-6-26
5761591-0-58

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**திரு.கந்தையா ஸ்ரீஸ்கந்தராசா**

*கிராம அலுவலர் J/271*
*சிறுப்பிட்டி கிழக்கு*

தன்னலமற்ற சேவையினால் மக்களின் நலனுக்காக அயராது உழைத்து கிராம அலுவலர் தரம் I இற்கு பதவியுயர்வு பெற்றமையையிட்டு,

**திரு.க.ஸ்ரீஸ்கந்தராசா**

அவர்களை நாம் மிக மகிழ்ச்சியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம். இவர் மேலும் பல பதவியுயர்வுகள் பெற்று தம் சேவையை நலமுடன் தொடர எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

**கே.எம்.கே.அன்சன்ஸ்,**
சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி.

(14891)

## தாலிக்கொடி தவறிவிட்டது

21.02.2003 வெள்ளிக்கிழமை சங்கானையிலிருந்து நயினாதீவு நாகபூஷணி அம்மன் கோவிலுக்கு பஸ்ஸில் யாழ். பஸ் நிலையத்துக்கு ஊடாகப் பிரயாணம் செய்கையில் எனது தாலிக்கொடி தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

**ந.மனோன்மணி**
ஓடக்கரை வீதி, சங்கானை. (14887)

ஸ்ரீராமஜெயம்

## தசாக கிருகயக்ஞ அழைப்பு

*பேரன்புடையீர்!*

**சித்திரபானு வருஷம் மாசி மாதம் 4ஆம் திகதி (17.02.2003) அதிகாலை 5.55 மணி பூரணை தினத்தில் அமரத்துவம் அடைந்த**

**எமது பிதா**
**காரைநகர் களபூமி பிரம்மஸ்ரீ**
**மு.கனகசபாபதிக் குருக்கள்**

அவர்களின் பின்வரும் அந்திமக் கிரியைகளில் பங்குகொண்டு அன்னாரின் ஆத்மாசாந்தியடையப் பிரார்த்தித்து சமாராதனையிலும் கலந்துகொள்ளும் வண்ணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

25.02.03 செவ்வாய்க்கிழமை பகல் 10.00 மணியளவில் தசாகம்
26.02.03 புதன்கிழமை பகல் 10.00 மணியளவில் மாசியம்
27.02.03 வியாழக்கிழமை பகல் 10.00 மணியளவில் சபிண்டிகரணம்
28.02.03 வெள்ளிக்கிழமை பகல் 12.00 மணியளவில் கிரகயக்ஞம்.

மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்
கொப்பாட்டப்பிள்ளைகள்.

*361, கோவில் வீதி,*
*நல்லூர்,*
*யாழ்ப்பாணம்.*

(14889)

## தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை நாவற்குழி வீடமைப்புத் திட்டத்திலுள்ள வீடுகள் விற்பனை செய்தல்

மேற்படி வீடமைப்புத் திட்டத்திலுள்ள கீழ் குறிப்பிடப்படும் நிலையிலுள்ள வீடுகளை விற்பனை செய்வதற்கான விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றன.

வீட்டின் விவரம்:

01. இத்திட்டத்திலுள்ள மொத்த வீடுகள் - **298**
02. ஒவ்வொரு வீட்டினதும் தரைப்பரப்பளவு - **800 சதுர அடி**

வீடுகளின் தற்போதைய நிலையும் அவற்றிற்கான பெறுமதியும்.

| | விற்பனை விலை |
|---|---|
| 01. கூரையுடனான வீடுகள் | - 75,000.00 |
| 02. கூரைகளற்ற வளைமட்டத்துடனான வீடுகள் | - 50,000.00 |
| 03. அத்திபாரத்துடனான வீடுகள் | - 25,000.00 |

*விண்ணப்பதாரிகளிற்கான தகைமைகள்:*

01. விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
02. விண்ணப்பதாரி நடுத்தர வருமானமுடையவராக இருத்தல் வேண்டும்.
03. விண்ணப்பதாரிக்கோ அல்லது அவரது குடும்ப அங்கத்தவருக்கோ யாழ்.மாவட்டத்தில் சொந்த வீடுகள் இல்லாதிருத்தல் வேண்டும்.
04. வீட்டை வாங்கும்போது வீட்டின் பெறுமதியில் 25% ஒரே தடவையாகச் செலுத்தல் வேண்டும். (25% இற்கு மேலான பெறுமதியை முதற் கட்டணமாகச் செலுத்தக்கூடியவரிற்கு முன்னுரிமை வழங்கப்படும்.)
05. விண்ணப்பதாரி வீடமைப்புத் திணைக்களத்திலோ அல்லது வீடமைப்பு அதிகார சபையிலோ வீடுகளைப் பெற்றுக்கொள்ளவில்லையென சத்தியக் கடதாசிமூலம் ஒப்புவித்தல் வேண்டும்.
06. விண்ணப்பங்களின் இறுதித் தெரிவுகள் அரசாங்க அதிபரினால் நியமிக்கப்பட்ட குழுவினாலேயே தெரிவுசெய்யப்படும்.
07. இதற்கான விண்ணப்பங்களை தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் யாழ்.மாவட்டக் காரியாலயத்தில் ரூபா 30/= செலுத்திப் பெற்றுக்கொள்ளவும்.
08. விண்ணப்பங்கள் 2003 மார்ச் மாதம் 26ஆம் திகதியோ அல்லது அதற்கு முன்னரோ *முகாமையாளர், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை, யாழ்ப்பாணம்* என்னும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்கவும். விண்ணப்பங்கள் அனுப்பும் கடித உறையின் இடது மூலையில் *"நாவற்குழி வீடமைப்புத் திட்ட வீடுகளை விற்றல்"* எனக் குறிப்பிடவும்.

**சு.மாசிலாமணி**
மாவட்ட முகாமையாளர்,
தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை,
யாழ்ப்பாணம்.

17.02.2003 (C/26599)

## மெய்வன்மை போட்டிகள்

நல்லூர்,பெப்.24

நல்லூர் ஞானோதயா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை பி.ப.2 மணிக்கு கல்வியங்காடு இலங்கைநாயகி அம்மன் ஆலய விளையாட்டுத்திடலில் இடம்பெறவுள்ளது.

அதிபர் சு.இராசலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ள இப்போட்டியில் நல்லூர்க் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ச.காங்கேயன் பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். (ஒ-ரீ)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,பெப்.24

உயரப்புலம் குணபாலன் வித்தியாலய மெய்வன்மைப் போட்டியும், பாடசாலையின் புதிய நுழைவாயில் திறப்பு விழாவும் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய அதிபர் செல்வி பி.வடிவேல் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதமவிருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜும், சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ச.நாகராஜாவும், கௌரவ விருந்தினராக வலிகாம வலய ஆங்கில ஆசிரிய ஆலோசகர் க.கணேசலிங்கமும் கலந்துகொள்வர். (ஒ-5)

☆ ☆ ☆

கச்சாய் அரசினர் தமிழ்க் கலவன் வித்தியாலயத்தின் மெய்வன்மைப் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் க.மங்களேஸ்வரன் தலைமையில் 'ஐயா' விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

முதன்மை விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் கலந்துகொள்வார்.(எ-74)

☆ ☆ ☆

வண்ணை நாவலர் மகாவித்தியாலய வருடாந்த மெய்வன்மைப் போட்டி நாளை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் ந.சிவராஜா தலைமையில் நடைபெறும்.

முதன்மை விருந்தினராக ஓய்வு பெற்ற யாழ்.கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஆ.இராஜகோபால், திருமதி பு.இராஜகோபால் ஆகியோர் கலந்துகொள்வர். (எ)

☆ ☆ ☆

மாதகல் விக்னேஸ்வரா வித்தியாலய வருடாந்த மெய்வன்மைப் போட்டி நாளை பிற்பகல் 1.45 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் அதிபர் வி.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதமவிருந்தினராக சண்டிலிப்பாய் உதவிப் பிரதேச செயலர் மு.பாலசிங்கமும், சிறப்பு விருந்தினராக சண்டிலிப்பாய் கல்விக் கோட்ட சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் வ.குகவேலும் கலந்துகொள்வர். (ஒ-5)

☆ ☆ ☆

கொடிகாமம் அரசினர் வித்தியாலய மெய்வன்மைப் போட்டி நாளை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய அதிபர் சோ. ஸ்ரீகாந்தன் தலைமையில் நடைபெறும்.

இதில் தென்மராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் பிரதம விருந்தினராகவும் வித்தியாலயத்தின் முன்னாள் அதிபர் சு.திருநாவுக்கரசு சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர். (ஒ-5)

## மாணவர்களுக்கு...

(IIIஆம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை வர்த்தக வங்கி யாழ். கிளையின் முகாமையாளர் ஆர்.இரவீந்திரா ஆகியோர் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்துவைத்தனர்.

பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள், ஆசிரியர்கள் உட்பட பல நூற்றுக்கணக்கானோர் இதில் கலந்துகொண்டனர்.

நேற்று நடைபெற்ற கருத்தரங்கில் தகவல் தொழில்நுட்பமும் நாமும், இயக்க அமைப்புகள் வின்டோஸ், இணையமும் மின் அஞ்சலும் தகவல் தொழில்நுட்பத்தில் காணப்படும் கற்கை நெறிகள், இலங்கையின் பிரபல்யமான கணனி கற்கை நெறிகளும் அதனைத் தொடர்வதற்கு வேண்டிய தகைமைகளும் என்ற தலைப்புகளில் கருத்துரைகள் வழங்கப்பட்டன. அத்துடன் செய்முறை விளக்கங்களும் வழங்கப்பட்டன.

இறுதியில் இந்நிகழ்வில் கலந்துகொண்ட அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இதன் அடுத்த கட்டக் கருத்தரங்கும் கண்காட்சியும் எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதி யாழ். வீரசிங்கம் மண்டபத்திலும் 8ஆம் திகதி நெல்லியடி மத்திய கல்லூரியிலும் நடைபெறவுள்ளன. (ஒ-5)

## கிரிக்கெட் ஆட்டத்தில்

# கொக்குவில் கே.சி.சி.சி அணி பொலநறுவை அணியை வென்றது

யாழ்ப்பாணம்,பெப்.24

கொக்குவில் கே.சி.சி.சி.அணிக்கும் பொலநறுவை கிங்கறகொட அலக்சாண்டர் அணிக்குமிடையில் நடைபெற்ற 40 ஓவர்கள் கிரிக்கெட் போட்டியில் கொக்குவில் கே.சி.சி.சி. அணி 29 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

கடந்த சனிக்கிழமை பொலநறுவை ராஜரட்ட மகாவித்தியாலயத்தில் இவ்வாட்டம் இடம்பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் கே.சி.சி.சி. அணி 38 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 138 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சிவசங்கர் ஆட்டமிழக்காமல் 60 ஓட்டங்களைப் பெற்றார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய அலக்சாண்டர் அணி ஒரு கட்டத்தில் விக்கெட் இழப்பின்றி 60 ஓட்டங்கள் பெற்றிருந்தது. ஆயினும் கொக்குவில் கே.சி.சி.சி அணியின் பந்துவீச்சாளர்களின் அபார பந்துவீச்சால் அலக்சாண்டர் அணி 35 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 109 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

கே.சி.சி.சி. அணி சார்பாக பந்து வீசிய நதீஸ், லக்சுமிகாந்த் தலா மூன்று விக்கெட்டுகளையும் சுதாகர், ஸ்ரீ ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். (ஒ-5)

## கண்ணீர் அஞ்சலி



முன்னாள் ஆசிரியரும்
தங்கம் அவர்களின் அன்புக் கணவருமாகிய

**கணபதி சீனித்தம்பி**

அவர்கள் இயற்கையெய்தியமையிட்டு நாம் பெரிதும் துயரமடைகின்றோம். அன்னாரின் இழப்பு ஈடுசெய்யமுடியாத ஒன்று. அவரது மறைவால் நாம் கலங்கித் தவிக்கின்றோம். அவருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாகச் சமர்ப்பிக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்:
**அன்பு மனைவி,**
**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

*கரணவாய் வடக்கு,*
*வல்வெட்டித்துறை.*

(14888)

## மரண அறிவித்தல்கள்

### கணபதி சீனித்தம்பி

*(இளைப்பாறிய ஆசிரியர்)*

கரணவாய் வடக்கு, வல்வெட்டித்துறையைச் சேர்ந்த கணபதி சீனித்தம்பி (இளைப்பாறிய ஆசிரியர்) அவர்கள் 22.02.2003 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் தங்கத்தின் அன்புக் கணவரும் தேவாமிர்தம், ஜீவாமிர்தம், ஞானாமிர்தம் (ஆசிரியர்) ஆகியோரின் அன்புத் தந்தையும் T. F. மனோகரன்(அதிபர்), வே.கருணாநிதி (விரிவுரையாளர்), க. சைவஇறைமணி(ஆசிரியர்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஜனகன், ரமணன், திவ்வியா, சொலமன், நிமலன், கமலன், சுகிர்தா, றொபின்சன், ஹெலன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 22.02.03 சனிக்கிழமை பி.ப. 5.00 மணியளவில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*கரணவாய் வடக்கு,*
*வல்வெட்டித்துறை.*

(14886)

### திருமதி கனகசிங்கம் இராசம்மா

புத்தூர் கிழக்கு, வாதரவத்தையைச் சேர்ந்த திருமதி கனகசிங்கம் இராசம்மா 22.02.2003 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலம் - முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - நாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் கனகசிங்கம் அவர்களின் அன்புமனைவியும் அரியகுணராசா (கனடா- முன்னாள் தொழில்நுட்ப உத்தியோகத்தர், நீர்ப்பாசனத் திணைக்களம்), குணேஸ்வரி (டென்மார்க்), சற்குணராசா (தொழில்நுட்ப உத்தியோகத்தர் வலி.கிழக்கு பிரதேசசபை நீர்வேலி), கனகேஸ்வரி, அற்புதராசா (சமூக சேவைத் திணைக்களம், நல்லூர் ), மல்லிகேஸ்வரி (கொழும்பு) ஆகியோரின் அருமைத்தாயாரும் நிர்மலாதேவி (கனடா), விஜயரத்தினம் (டென்மார்க்), அமரச்செல்வி (எழுதுநர், இலங்கை மின்சாரசபை, யாழ்.பிரதேச அலுவலகம், சுன்னாகம்),பரமேஸ்வரநாதன் , காலஞ்சென்றவர்களான சித்திரகுமாரி, வைகுந்தராசா ஆகியோரின் அன்பு மாமியாரும் ரம்யா (கனடா), பிரகாஷ் (டென்மார்க்), சனுஷா (டென்மார்க்), தீனுஷா (டென்மார்க்), வினுஷா (டென்மார்க்), வேதிகா, சாருகா, றேகா, விஜேனுஜன், கஜிதா, கஜீவன் ஆகியோரின் பேர்த்தியாரும் சிவக்கொழுந்து, காலஞ்சென்ற சின்னத்தம்பி (முன்னாள் ஆசிரியர், உடுப்பிட்டி) மற்றும் சிவயோகம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(24.02.2003) திங்கட்கிழமை பிற்பகல் 4.30 மணியளவில் வாதரவத்தையில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வாதரவத்தை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ச.கனகசிங்கம்
(கணவர்).

*வாதரவத்தை,*
*புத்தூர்.*

(14882)